TIGHT BINDING

UNIVERSAL LIBRARY
OU_208085
UNIVERSAL LIBRARY

USMANIA UNIVERSITY LIBRARY

Call No TM 8.94.81109 Ch 53A    Accession No TM 639

Author Chidambaranar, A

Title Agathiar varalaru 1950.

This book should be returned on or before the date last marked below

கழக வெளியீடு: ௫௱௨

# அகத்தியர் வரலாறு

ஆசிரியர் :
திருமந்திரமணி, துடிசைகிழார்
அ. சிதம்பரனுர் அவர்கள்

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி, :: சென்னை 1.

முதற் பதிப்பு : மார்ச், 1950.

[All Rights Reserved]

*Published by :*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, :: MADRAS, 1.

*Head Office :*

24, EAST CAR STREET :: THIRUNELVELI.

அப்பர் அச்சகம், 2/140, பிராட்வே, சென்னை 1.

# பதிப்புரை

அகத்தியர் யார்? ஒருவரா? அன்றிப் பலரா? இத்தகைய ஐயங்கள் அனைவருள்ளங்களிலும் தோன்றுவன.

காலப் பழமையும், இறந்தார் பெயரைத் தம் வழித் தோன்றல்கள் பலர்க்கும் இட்டு வழங்கும் மரபும் அகத்தியர்களின் வரலாறுகளை மறைத்துவந்தன. அம்மறைவை நீக்கி உண்மைகளை விளக்க வேண்டுவது இன்றியமையாதது.

அகத்தியர் பலராவர்; பல காலத்தவரும் பல ஊரவரும் ஆவர்; பல குலத்தவரும் பல கொள்கையினரும் ஆவர்; பண்பாடுகளிலும் வேறுபடுகள் உண்டு என்ற கருத்துக்களைத் தெளிவுபடுத்துகின்றது இந்நூல்.

ஆசிரியர் திருமந்திரமணி துடிசைகிழார் சிதம்பரனார் அவர்கள் தக்க சான்றுகளுடன் காலங்களை வரையறுத்து அகத்தியர் வரலாறுகளை ஒழுங்குபடுத்தி அமைத்துத் தந்துள்ளார்கள்.

தமிழுலகம் இந்நூலை நன்கு வரவேற்றுப் பயன்பெறுமென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# அணிந்துரை

உலகத்தில வழங்கும் மொழிகள் பல அவற்றுள் பழமையானவை ஒரு சில. அவைகளுள் நம தமிழ்மொழி யும் ஒன்று அம்மொழி இனிய மெல்லோசையுடையது; உயிர்ப்புச்செட்டும் உடையது, அஃது ஓர் இயற்கை மொழி. அதனாலேயே தமிழ்ச்சொற்கள் வல்லோசை எழுத்தால் முடிவதில்லை.

இமமொழியானது தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுக ளாகியும் பழமைக்குப் பழமையாய்ப, புதுமைக்குப புதுமையாய் இளமை நலம் குன்றாது இயல்வது, புதுப பொருள் ஒன்றைக கண்டால அதற்கும் ஆக்கச்சொல் அமைய இருப்பது, அதில் மெல்லிய சுருங்கிய சீரிய கூரிய தீஞ்சொல் வளம் பெருக்குவது, அறம் தருவது, கலைகொழிப்பது; இன்பை ஈவது, அன்பை ஊட்டு வது, ஆக்கம அருள்வது, ஊககம் கொடுப்பது; வீரம விளைப்பது, காதல் கனிவிபபது, வெற்றியளிப்பது. பின்னும் 'எல்லாப பொருளும் இதன்பால் உள இதன் பால், இல்லாத எப்பொருளும் இல்லை' என்னும மொழிக்கு இலககாக இலங்குவது. அதனால் வளங் கொழிக்கும் வற்றாக களஞ்சியமெனப போற்றும் பெருமை வாய்ந்தது.

இச்சீரிய மொழியானது, மேல்நாட்டு அறிஞர்களான போப், கால்டுவெல், லாசரஸ, பெஸ்கி (வீரமாமுனிவா) போன்றவாகளையும, தன்பால் ஈாததுத் தன் இன்பத்தை நல்கி அடிததளை பூணச செய்தது. இன்னும் பலபல வியத்தகு தன்மையும் தன்னகத்துக்கொண்டு மிளிர்வது; அஃது தேனினினுமினிய உயா தனிச செமமொழி என்றால் மிகையாகாது இசசெவ்விய தமிழ்மொழியைப் புதுமை யும் பழமையும் கூட்டி வளம்படுத்திய புலவர் பெருமக்கள் பலராவர். அவர்களுள, 'அகத்திய'ரென்னும பெயர் கொண்டு நிலவிய தமிழ்ப் பெருமகனாரும் ஒருவராவர்.

இவரைத் தமிழ்முனி, குறுமுனி, குடமுனி, பொதிய முனி என்பாரும், தமிழரென்பாரும், ஆரியரென்பாரு மாகப் பல திறத்தினராகப் பகருவர்.

இவரைப்பற்றி "அமரமுனிவன் அகத்தியன்" (மணிமேகலை, பதிகம்) எனவும், "என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான்" (கம்ப. ஆர. அகத்திய) எனவும், "அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு" (வில்லிபாரதம். பாயிரம்) எனவும், "தென்தமிழை உலக மெல்லாம் தொழுதேத்தும் குடமுனிக்கு வற்புறுத்தார்" (காஞ்சிப்புராணம்) எனவும், "ஆரிய முனிவன் அகத்திய னென்பான், ஓதிவளர்க்க வளர்ந்தேன்." (பாரதியார்) எனவும் முற்கால பிற்கால நூல்களில் வருவனகொண்டு நன்கறியப்பெறும். எனவே, அகததியரென்னும் பெய ருடையவரால் தமிழ்மொழி வளம்படுத்தப்பட்டதென் பதை அறிகின்றோம.

முற்கால நம் தமிழ்ச் சான்றோர், புலவர்கள் வரலாற் றையோ, அரசர்கள் வரலாற்றையோ, ஏனைய பிற நிகழ்ச்சி களையோ அவ்வக்கால வரலாற்றுமுறைக்கொப்ப வரை யறைசெய்து சரித்திரம் எழுதிவைக்காது விட்டுவிடுவா ராயினர். பிற்காலத்தில் அவ்வரலாறுகளை எழுதப்புகுந் தவர் தத்தம் மனப்போக்குக்கேற்பக் கூட்டியும் குறைத் தும் எழுதி நாட்டிக் காட்டிவிட்டுச் செல்வாராயினர்.

இவ்வாறே பலபல வரலாறுகள் நாட்டில் எழுதப் படலாயின. அதனால் உண்மையாக நடந்த வரலாறு களும், புனைகதைகளும் தோன்றாமல் எல்லாம் புனை கதையென மயங்கும்நிலை வரலாயிற்று.

இவ்வாறே அகத்தியரைப்பற்றிய வரலாறும், முன்னர் ஒரு சிலரால் எழுதப்பட்டுள்ளன. ஆனால், சிலா அதை ஒரு கதைப் போக்காகவும், சிலர் தாம் எழுதும் நூல்களில் இடை இடையே குறிப்பாகவும் காட்டி எழுதினாராவர். அதைக்கொண்டு முற்ற முடியவோ உண்மை கண்டு தெளியவோ இடனில்லாது இதுகாறும் இருந்து வந்தது.

இவ் 'அகத்தியர் வரலாறு' என்னும் இந்நூல் அக்குறைகளை ஒருவாறு போக்கித் துலங்குகின்றது.

இது மேற்கூறிய பெயருடன் 'தோற்றுவாய்' என்ற தலைப்பைக்கொண்டு தொடங்கி 'பொதியமலை அகத்தியா, முதுதூர் அகததியர், வாதாபி அகத்தியர்'......ஆகியவர் முதலாக 'பள்ள அகத்தியர்' ஈறாக முப்பததேழு அகத்தியர்கள் இருந்ததாக அகச்சான்று, புறச்சான்று, மேல்நாட்டுக் கீழ்நாட்டு ஆதரவு, கல்வெட்டுக் குறிப்பு, பல அறிஞர் கண்ட முடிபு, பல மொழியாளா தத்தம மக்கட்கு இவ் 'அகததியர்' பெயரை இட்டு வழங்குதற்குரிய காரணங்கள ஆகியவையுடன் ஆங்காங்கே சுட்டிக்காட்டி முடிகின்றது. இதைப படிககுமுகததால் ஏனைய சில பல வரலாறுகளையும, வேற்றுநாட்டுச செய்திகளையுமெ எளிதின் அறிநதுகோடற்குத் துணை புரிகின்றது

ஆகவே, தமிழ்ப் பெருங்கடல் கடநது ஆராய்ச்சியென்னும் கரைகாண முயல்வார்க்கு இஃதோர் கலங்கரை விளக்கமாகக் காட்சியளித்து அவ்வழிக் கொணர்ந்துய்க்கும் பெற்றிய தென்னலாம்.

இந்நூலில், முதன் முதல் 'பொதியமலை அகத்தியர்' என்பவரைக் குறிப்பிடும்போது அவர் இருந்த காலவரையறையை ("காலம—16000 B. C.") என்று குறித்துள்ளது. சிலருககு அவ்வளவு காலம் இருக்கலாமோ என ஐயுறவு தோன்றும. நம தமிழ்மொழியின் பழமை, வளம ஆகியவைகளை ஊன்றிப் படித்துக் காய்தல், உவத்தல் அகற்றிக் காண்பார்க்கு உண்மை நன்கு புலனுகாமற் போகாது. ஒரு நாட்டு மக்களின் பண்பாடும், நாகரிகமும், பழக்க வழக்கங்களும் அவாகள மொழியே அறிகருவியாகக்கொண்டு தெளியப்படும் இதுவே அறிஞர் பலர் கண்ட முடிபுமாகும்.

தற்காலப் பெரியாராய் நம்மிடையே வாழ்ந்து அறம் பெருக்கி, மறம கருக்கி இறையடியில் அண்மையில்

மறைந்த மகாத்மா காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் விடுதலைப்போர் நிகழ்த்தியபோது அப்போருக்குத் துணையாய் நின்றோர் பலர் தமிழர்களே. அப்பண்பைக் கண்ட அடிகளார் இவர்கள் பண்பு எத்தகைத்து! மொழி எத்தகைத்து! என எண்ணினார். அஃது அவர் மனத்தைப் பெரிதும் ஈர்த்துநின்றது மொழியையேகொண்டு காண விழைந்தார்; தமிழ் மொழியைக் கற்றார், அஃது தன் குன்றா இளமை குழைத்த பண்பில் அவரை ஈடுபடச் செய்தது; அதைக் குறித்து அவர் அதுபோழ்து கூறியதாவது:—

"அம்மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன் அது மனங் கவரும் ஓர் இனியமொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலும்கூடப் பல அறிஞர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும், பயிற்சியாலும் அறியக்கிடக்கின்றது இந்தியாவில் ஓர் இனம் ஏற்பட வேண்டுமானால், சென்னை மாகாணத்துக்கு அப்புறமுள்ளவரும் தமிழுணரல் வேண்டும்." (மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், ஐந்தாம் பதிப்பு, பக்கம், கஙஎ) என்பதாகும்.

"ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்" "யாதும் ஊரே யாவரும் கேளிர்" "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" "எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என உலகத்துக்குப் பொதுப்படையான அறமொழிகள் ஒரு மொழியில் வந்து வேரூன்றவேண்டுமானால், எத்துணைக்காலம் செல்லும் இச்செம்மொழியில் இச்சொற்கள் அன்பின் மூழ்கி மூழ்கிப் படிந்து படிந்து தமிழ் மக்கள் பயின்ற பயிற்சியால் அன்றோ தோன்றி மலர்ந்திருத்தல் கூடும். பல்லாயிரம் யாண்டுகள் முதிர்ந்தால்தான் இத்தகைய பொன்மொழிகள் பொதிந்து மிளிரும் இவ்வறவுரை எங்கே தோன்றியுள்ளது? எம் தமிழ்மொழியிலன்றோ! இவ் அறமொழிகள் பதிந்து இம் மொழியிற் கிடப்பதால் மிக மிகச் சேய்மைக் காலத்திலிருந்தே இது பண்படுத்தப்பட்டு வந்திருக்கிறதென்பது நன்கு போதரும்.

ஆகலான், அம்மொழியை வளமபடுததிய அகத்தியப பேரினரும் தொன்மைக் காலத்தினரேயாவர் என்பதை யாரும் மறுத்தலொண்ணது.

இவ்வகததியப பெயரினர் காலததாலும், தேசத் தாலும, கொளகையாலும், செயலாலும ஒரே ஒருவராக இருத்தல் பொருந்தாதென்பதே நன்கு புலனுகின்றது. சிததராயினும, மற்றேராயினும ஒருவரே பல்லாயிரம் ஆண்டுகள் நிலவுலகில் நிலவி இருக்கமுடியாது அப்படி யிருப்பது இயற்கையோடு பொருந்தியதாகவுமில்லை அஃது ஒன்றே கொண்டு அகத்தியர் பலராவா என்பதை நன்கு தெளிகின்றேமன்றே! அதுதெளிவுக்கு மிகத தெளி வூட்டுவது **அகத்தியர் வரலாறு** எனப பெயரிய இச்சீரிய நூல்

இவ்விழுபப மிகக நூல் போன்றவைதாம் இக்காலத் துக்கு வேண்டற்பாலன எனெனின்,

"எப்பொருள் எத்தன்மைத தாயினும் அப்பொருள
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்னும் தேவா திருமொழிக கொபப உண்மையைத தெரிக்கின்றது ஆகலான், அறிஞர் உண்மை காணல் வேண்டும. இதற்குத் துணை புரிவது இந்நூல் உண்மையை விளக்குவது இநநூல். உண்மைதான் உலகில் என்றும் நிலைபெற்று ஒளிரமுடியும. ஆகவே, எல்லோரும இதை வரவேற்று உண்மை வரலாறு காண முற்படுவாராக.

இதை ஆக்கித்தந்த அறிஞரை நாடு முன்னரே நன்கு அறியும. அவர்கள் நமக்கு முன்னரும் பல நூல்கள் ஆக்கிததந்து தமிழை அணிசெய்துள்ளார்கள். அவை 'தமிழ்ச்சங்கங்களின்வரலாறு' 'ஐந திணை அக நூல' 'மருத்துவநூல்' முதலியனவான பொது நூல்களும, 'சிவஞானபோத முதனூல் விளக்கம்' 'சிவபூசை விளக்கம்' முதலியனவான சைவசமய நூல்களும் பிறவும் ஆகும். இவர்கள் தமிழ்ப் பழங்குடிமைத் தோன்றலார், சைவத் திருவாளா: திருமநதிரமணி **துடிசைகிழார், அ. சிதம்பரனு**

ரென்னும் திருபபெயருடையவர்கள் ஆவார்கள். இது போன்ற இன்னும் பன்னூல்களை ஆக்கித்தந்து தமிழ் மொழியை வளம்படுத்தி ஆக்கம்பெற வளர்க்க அவர்கள் இன்னும் நெடிது வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

தமிழ் மக்கள் யாவரும் இந்நூலைப் பேணிக்கற்று 'அறிவுடையாரெல்லாம் உடையார்' என்னும் நன்மொழிக்கு இலக்கியராய்ப், பேரறிஞராய், நாடு வளர, கலை வளர, மொழி வளர, அன்பு வளர, அருள் வளர, ஒளிவளர, உலகம் வளரத் தாமும் ஓங்கி வளர்ந்து வாழ்வாராக.

வாழ்க தமிழ்மொழி வாழ்க அகத்தியர்
வாழ்க துடிசைக் கிழாரேனும் பெயர்கோள்
சிதம்பர னாரேனும் செவ்வியர் வாழியர்.

சென்னை,
௧௫-௩-௫0.

செல்லூர்க்கிழான், செ ரெ. இராமசாமி.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| ௧. | பொதியமலை அகததியர் | 9 |
| ௨. | முத்தூர் அகத்தியர் | 16 |
| ௩. | வாதாபி அகத்தியர் | 19 |
| ௪. | உலோபா முத்திரை அகத்தியர் - I | 23 |
| ௫ | மைத்திரா வருண அகத்தியர் | 26 |
| ௬. | மானிய அகத்தியர் | 27 |
| ௭. | கும்ப அகத்தியர் | ,, |
| ௮. | ஆவிராபூ புததிரா அகததியர் | ,, |
| ௯. | கந்தருவன் புத்திரர் அகத்தியர் | ,, |
| ௧௦. | ஏழு இருடிகளில் ஒருவராகிய அகத்தியர் | 29 |
| ௧௧. | புரோகித அகத்தியர் - I | 32 |
| ௧௨. | தொடித்தோள் செம்பியன் காலத்து அகத்தியர் | 33 |
| ௧௩. | குடகுமலை அகத்தியர் | 36 |
| ௧௪ | உலோபா முத்திரை அகத்தியர் - II | 42 |
| ௧௫. | கோசலநாட்டு அகத்தியர் | 48 |
| ௧௬. | பஞ்சவடி அகத்தியர் | 50 |
| ௧௭. | மலையமலை அகத்தியர் - I | 53 |
| ௧௮. | குஞ்சரகிரி அகத்தியர் - I | 61 |
| ௧௯ | புரோகித அகத்தியர் - II | 62 |
| ௨௦. | குஞ்சரகிரி அகத்தியர் - II | 66 |
| ௨௧. | துவராபதி அகத்தியர் | 67 |
| ௨௨. | யசோமதி அகத்தியர் | 72 |
| ௨௩. | புரோகித அகத்தியர் - III | 74 |

| | | |
|---|---|---|
| ௨௪. | காரைத்தீவு அகத்தியா | 74 |
| ௨௫. | போதலகிரி அகத்தியர் | 80 |
| ௨௬. | திலோத்தமை அகத்தியா | 82 |
| ௨௭. | பாவ நாச (மலையமலை) அகத்தியர் - I | 83 |
| ௨௮. | பாவ நாச (மலையமலை) அகத்தியர் - II | 84 |
| ௨௯. | புரோகித அகத்தியர் - IV | 86 |
| ௩0. | குஞ்சரகிரி அகத்தியா - III | 87 |
| ௩௧. | புரோகித அகத்தியர் - V | 88 |
| ௩௨. | சித்த அகத்தியா | 92 |
| ௩௩. | தேவார அகத்தியர் | 93 |
| ௩௪. | நூல் எழுதிய அகத்தியர் | 95 |
| ௩௫. | திருமாலைச் சிவனுக்கிய அகததியா | 96 |
| ௩௬. | அகத்தியபட்டர் | 99 |
| ௩௭. | பள்ள அகததியா | 100 |
| | ஆதரவாக இருந்த நூல்கள். | 101 |

# அகத்தியர் வரலாறு

## தோற்றுவாய்

அகததியா என்ற பெயர்கொண்ட புலவர்களும், முனிவர்களும, சித்தர்களும், மருத்துவர்களும், அறிஞர் களும, சாதாரண மனிதாகளும, அரசியல் தூதுவாகளும் (Ambassadors) பலராவர்

அவர்கள் எல்லாம் ஒரு ஊரரா அல்லர், ஒரு குலதத வர் அல்லா, ஒரு காலததவா அல்லா, ஒரே தொழிலே உடையவரும் அல்லா.

அகத்தியர் என்னும் பெயர் முதன் முதல் தமிழ் நாட்டில் வழங்கப்பட்டுவந்த ஒரு சிறந்த தமிழ்ப் பெயா. அதனுல் அப்பெயரை எல்லோரும் தங்கள் தங்கள குழந்தைகளுக்கு இட்டு வழங்கிவநதார்கள்.

தமிழ் நாட்டாரேயன்றி, ஆரிய நாட்டாரும, சாவக நாட்டாரும், கடார நாட்டாரும், ஈழ நாட்டாரும், ஐரோப் பிய நாட்டாரும், அப்பெயரைத் தங்கள் தங்கள் மக்களுக்கு இட்டு வழங்கி உள்ளார்கள்.

அப்படி, எல்லாரும் போற்றி, வழங்கி வரும்படியான கருதது அதில் என்ன உள்ளது? என்பீர்களாயின் கூறுவேன்

"அகம் மனம் மனேயே பாவம் அகலிடம் உள்ளும் ஆமே"

(நிகண்டு)

"மணமும், உள்ளும், மனையும், பாவமும்
புவியும், மரப்பொதுப் பெயரும் அகமே" (பிங்கலந்தை)

மனத்தை அடக்கி, நான் எனது என்னும் செருக்கை நீக்கி, பாவங்களைக் களைந்து, தாமரை இலை நீர்போல் இம்மாநிலத்தில தன் மனைவியோடு இருந்து, எல்லாராலும போற்றப் படககூடியவராய் வாழ்ந்த ஒருவருக்கு "அகத்தியர்" என்னும் பெயரைத தமிழ் நாட்டார் ஈநதுள்ளாா அதனை அதன் சிறப்பு நோககி, பிற்காலததில் எல்லோரும், பிற நாட்டினரும்கூட தங்கள தங்கள குழநதைகளுக்கு இட்டு வழங்கி வந்துள்ளார்கள.

"அகத்தியர்" என்னும் பெயர் அடைகொடுக்கப் பட்டு வழங்கபபடாததால், நூல் ஆசிரியாகளும், உரை ஆசிரியர்களும், பல நாட்டு அகததியாகளுடைய வரலாறு களை ஒரே அகத்தியா வரலாறு என்று கருதி, நூல்களிலும் உரைகளிலும எழுதிவிட்டாாகள். படிப்பவாகளும் பிரித்து அறிந்து படிப்பதில்லை இப்படிப் பல அகத்தியர்களுடைய வரலாறுகள் ஒன்றுபட்டுக் கிடப்பதால், சில புலவாகள் அகத்தியர் என்னும பெயர் உடையவா பலா இருந்திருக்க வேண்டும் என்று முடிவு கட்டுகிறாாகள். இது சரியான முடிபே ஆகும்.

சிலர் "அகததியா" என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்திருக்க முடியாது. வானத்தில் எழு மீன் மண்டலத்திலுள்ள அகத்திய மீனின் சஞ்சரிப்பைக் குறித்து உருவகப்படுத்திய புலவர்கள் கதை எழுதி விட்டார்கள் என்று முடிவு கட்டுகிறார்கள். இது தவறான கொள்கை.

இவர்கள் எல்லாம் எதைக்கொண்டு இப்படிக் கூறு கிறார்கள் என்றால், முப்புரத்தவா காலத்திலும "அகத்தி

யர்" வருகிறார்; சூரபதுமன் காலத்திலும் "அகத்தியர்" வருகிறார்; இராம இராவணா காலததிலும் "அகத்தியர்" வருகிறார்; பாரத காலத்திலும் "அகத்தியர்" வருகிறார்; அதற்கு பின்னிட்டும "அகத்தியர்" வருகிறார். ஆதலால் ஒரே அகத்தியர் இவ்வளவு காலம நீடித்து இருக்க முடியாது என்ற கொள்கையில் கூறுகிறார்கள். இவர்கள் பலகாலதது, பலதேயத்து அகத்தியர்களை ஒன்றுபடுத்துவ தால் ஏற்படும் தவறே இவர்களை அவ்வாறு கூறும்படி செய்தது.

அகத்தியர் வரலாறு சிலா கூறுவதுபோல கற்பனை யாக இருந்தால் தமிழ் நாட்டில் ஒருவரால் ஏற்பட்ட கற்பனையை ஏனைய நாட்டார் ஆராய்நது பாராமல் ஏற்றுக் கொண்டு இருக்கமாட்டாாகள் தமிழ் நாடு, ஆரியநாடு, ஈழநாடு, சாவக நாடு, கடார நாடு, மலாய் நாடு முதலிய நாடுகளில் எல்லாம அகத்தியா என்னும் பெயா கொண்ட வர் செய்துள்ள காரியங்களுக்கு அழிக்க முடியாத அடை யாளங்கள் இன்றும உளளன. அபபடியிருககு அகததியர் வரலாற்றைக கற்பனை என்று கூறுவது பொருநதாது

தமிழ் நாட்டில் முப்புரததவர் காலத்துப பொதியமலை அகததியர் என்னும பெயரை உடைய புலவா ஒருவா செய்த இலக்கணச சூததிரங்கள இன்றும உரையாசிரியர் கள் எடுதது மேற்கோள காட்டியிருப்பதைக் காணலாம. ஆகையால், தமிழ் நாட்டில் வதிநத அநத அகத்தியருடைய வரலாறு எபபடிக் கற்பனையாகும?

அகததியர் என்னும் பெயரை உடைய சித்தர் ஒருவர் செய்த சிதத நூல்கள எல்லாம இன்றும நின்று நிலவு கின்றன. ஆகையால் சித்த அகததியர் என்ற ஒருவா இருந்ததில்லை என்று எப்படிக் கூறமுடியும்?

இன்னும் அகத்தியப் பெயர்கொண்ட பலர் இருந்த தற்குப் பல அடையாளங்கள் உள. அவைகளை எல்லாம் பின்னல் கூறப்போகும அவரவர்கள் வரலாறுகளில் காணலாம்.

ஆகையால், அகத்தியர் என்னும் பெயரை உடைய பெரியார்கள் பலர் தமிழ் நாட்டில் பல இடங்களில் பல காலங்களில் வாழ்ந்து வந்து உள்ளனர் என்று கொண்டு, அவாகளுடைய வரலாற்றில் உண்மைகாண முயலுவதே அறிஞர் கடன்

தமிழ் நாட்டு அகத்தியர்களுடைய வரலாறுகளோடு, பிறநாட்டு அகத்தியர்களுடைய வரலாறுகளும் தமிழ் இலக்கியங்களில் கலந்து கிடககிறபடியால், பிற நாட்டு அகத்தியர்களுடைய வரலாறுகளையும் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது அதனல் அன்னா வரலாறுகளையும் இந்நூலில் எழுதியுள்ளேன்.

காலஞ்சென்ற பண்டிதர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள தம்முடைய "அகத்தியர் ஆராய்ச்சி" என்ற நூலில், "சங்கம் என்னும் சொல் ஒன்றே அக்காலததுச் சங்கம் இருந்ததில்லை என்பதை வலியுறுததும்; என்னெனின், சகரம் மொழிக்கு முதலில் வராது என்பது தொல் காப்பியச சூத்திரம் ஆகவே, அது அசம்பாவிதம் என ஒதுக்கற்பாலதேயாம். சங்கமே இருந்ததில்லை என்ற முடிவுக்கு வந்தால், அச் சங்கத்தில் இருந்த அகத்தியரும் இருந்ததில்லை யென்பதுதானே போதரும்" என்று கூறுவர்.

பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாா எடுத்துக் காட்டிய தொல்காப்பிய சூத்திரம் பிழையாக அச்சிடப் பட்டது என்றும், சரியான சூத்திரம் இன்னது என்றும்,

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு 15-பரல் 2 பக்கம் 67-69-லும், "தமிழ்ச்சங்கங்களின் வரலாறு" என்ற புத்தகத்தின் முகவுரையிலும் காட்டியுள்ளேன்.

ஆதலால், அதனை ஒரு காரணமாகக்கொண்டு அகத்தியர் இருந்ததில்லை என்று அவர் கூறுவது பொருந்தாது

அகத்தியர் என்ற பெயரானது இந்தியாவில் மட்டும் அல்ல, ஐரோபபிய நாடுகளிலும பரவி இருந்தது. **அகஸ்தியஸ்** (Agastius) என்னும் கிரேக்கப் புலவர் சின்ன ஆசியாவில் கி. பி. 530ல் பிறந்து வாழ்ந்தார். திரேஸ் (Thruce) நாட்டில் உள்ள சித்தியர்களிடை **அகத்திரிஸ்** என்ற குலத்தார் உண்டு என்பது கி. மு 480ல் இருந்த இரோடோதஸ (Herodotus) என்னும் புலவருடைய நூலால் வெளியாகிறது.

"ஒரு நாட்டின் பழைமையான சரித்திரம் அந்நாட்டில வழங்கும் செவிவழிச்செய்தியால் (கர்ணபரம்பரை) வழங்கப்படக் காண்கிறோம சரித்திர ஆசிரியன் அவைகளைப் புறக்கணிக்காமல் எடுத்து ஆய்ந்து பார்த்து உண்மைகாண வேண்டும" என்று சிவராஜ் பிள்ளை தம முடைய "**தமிழ் நாட்டின் அகத்தியர்**"* என்ற நூலில் கூறுவது காண்க

ஆதலால், தமிழ் நாட்டில் அகத்தியரைப்பற்றி வழங்கும் செவிவழிச் செய்திகளை நாம் சீர்தூக்கிப் பார்ப்போ

---

* Vide *Sivaraj's "Agustiya in the Tamil Land"*

"And as a matter of fact, the primitive History of every race and tribe is found to Consist Chiefly of traditions whose value may vary according to circumstances. The Scientific historians is bound not to throw them overboard en-masse. But to sift them carefully and scrupulously to arrive at whatever modicum of truth they may contain."

மானால், அச்செய்திகள் எல்லாம் சரித்திர முரண்பாடு உடையன அல்ல என்பது போதரும். இதிகாசங்களிலும், பதினெண் புராணங்களிலும, பல தல புராணங்களிலும் அகத்தியரைப் பற்றிக் கூறபபட்டுள்ளன. அச்செய்திகளை எல்லாம் கதை, கற்பனை, புராணக்குப்பை என்று தள்ளாமல் உண்மைகாண முயல்வதுதான் அறிஞர் கடன்

வான வட்டத்தில் உள்ள எழுமீன் கூட்டம்* (Great Bear) வடபாலி மீனைச (Pole - Star) சுற்றி வருவது கண்கூடு. பாலி என்பதே போல் (Pole) என்று ஆங்கில மொழியில் வழங்கப்படுகிறது.

வடபாலி மீன் (Pole - Star) என்பது வடக்கே துருவத்துக்கு மேலாக நிலை பெயராது என்றும் ஒரே இடத்தில் காணப்படும் அதனைத் **துருவ மீன்** என்றும் **அருந்ததி மீன்** என்றும் கூறுவர் இந்த அருநததி மீன் வேறு, எழுமீன் கூட்டததில் வசிட்டமீனுக்குப பக்கத்தி லுள்ள அருந்ததி மீன் வேறு எனபதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**மீன்** என்றாலும் **நக்கத்திரம்** என்றாலும் ஒன்றே. இரண்டும் தமிழ்ப் பெயர்களே. **மீன்** - மின் என்னும் பகுதி அடியாகப் பிறநத சொல் **மின்னுதல்** = **விட்டுவிட்டு ஒளிர்தல்.**

நகு + அம் + திரம = நக்கததிரம். இந்த மொழி வட மொழியிற் சென்று நக்ஷத்திரம என வழங்கப்படுகிறது.

---

*எழுமீன் கூட்டத்தை ஆஙகிலர் *Great Bear* என்றும், ஆரியர் **சப்தரிஷி மண்டலம்** என்றுங கூறுவர். வடபாலி என்பதனை ஆஙகிலர் *North Pole* என்றும், ஆரியர் வடதுருவம என்றும் சுமேரு என்றும் கூறுவர். தென் பாலி என்பதனை ஆஙகிலர் *South Pole* என்றும் ஆரியர் தென்துருவம என்றும தமேரு என்றும் கூறுவா.

"அகத்தியன் - புலத்தியன் - அங்கிராதன்
கவுதமன் - வசிட்டன் - காசிபன் - மார்க்கணடு
இசைத்த இவர் தாம் எழு முனிவர்களே" (பிங்கலந்தை)

இந்த மாதிரி பல தமிழ்ச் சொற்கள் வட மொழியில் உண்டு. உதாரணமாக :— பக்கம் - பக்ஷம்; வேட்டி - வேஷ்டி, புத்தகம் - புஸ்தகம் முதலியன.

நகு = நகுதல் - சிரித்தல் அதாவது ஒளிர்தல். ஆதலின், விட்டு விட்டு ஒளிரதல் என்பதே நக்கத்திரம என்பதற்குப் பொருள்.

எழுமீன் கூட்டத்தில் உள்ள மீன்களின் பெயா களாவன :—

வானநூல் வல்லவரான கடைச்சங்கப் புலவராகிய நல்லந்துவனுர் என்பவா இவ்வெழுமீன் கூட்டத்திலுள்ள அகத்திய மீனைப்பற்றி பரிபாடல் 11-ல :—

"பொதியின் முனிவன் புரைவரை கீறி
மிதுனம் அடைய விரிகதிர வேனில்
எதிர வரவு மாரி இயைகென இவ்வாற்றால்
புரை கெழு சையம் பொழிமழை தாழ"

என்று பாடியுள்ளார். இதன் பொருள் :—

"எழுமீன் மண்டலத்திலுள்ள அகத்தியன் என்னும் மீன் மிதுனராசியில தோன்றுங் காலத்தில் கடல் நீர் ஆவியாக மாறுவதனுல் கடல் வற்றுகிறதென்றும், அது மறையுங் காலததில் மழை பெய்கிறதால் கடலில் நீர் நிறைகிறதென்றும கூறியதாகும" என்பதே.

இதனைததான் உருவகமாக (in Metaphorical Language) அகததியா கடலைக குடிததார் என்றும், மறுபடியும் கடல் நீரை அவா உமிழ்ந்து விட்டார் என்றும்

புராணங்கள் கூறும என்று புரொபஸர் (O. C. Gangaly) ஓ. சி. கங்கோலி என்பவர் அபிப்பிராயப்படுகிறார்.

அகத்தியர் என்ற பெயரை தமிழ் நாட்டில் வான மீனுக்கு இட்டு வழங்க வேண்டுமானல், அப்பெயர் தமிழ் நாட்டில் வெகுகாலததுக்கு முன் இருநதே வழககத்தில் இருந்திருக்க வேண்டும் அப்பெயர் தமிழ் நாட்டில பேரும் புகழும பெற்றவருடையதாய் இருக்கவேண்டும என்று அறியக்கிடக்கின்றது

இதுகாறும் கூறியவற்றல், அகத்தியா என்னும பெயர் தமிழே என்றும, அது தமிழ் நாட்டில் முதன் முதல் வழங்கப்பட்டு வந்த பெயர் என்றும, அப்பெயரின் மேலான பொருளை உணாநத பிற நாட்டாரும் அப் பெயரை தங்கள் குழந்தைகளுக்கு இட்டு வழங்கினர்கள் என்றும, அகததியர் என்னும பெயர் சிலர் நினைப்பது போல கற்பனைப் பெயர் அலலவென்றும், பலநாட்டு அகத்தியாகளின் சரித்திரங்களையும, ஒரே நாட்டில் பல காலங்களில் இருந்த அகத்தியாகளின் சரிததிரங்களையும ஒன்று படுத்துவது தவறு என்றும், தனித்தனி ஒவ்வொரு அகத்தியருடைய சரிததிரத்தைப் பிரிததுப் படிததால் முரண்பாடுகள் ஏற்படாது எனறும் தெளிவாக ஏற்படு வதைக் காணலாம.

இவ்வாராய்ச்சியில் சில தவறுதல்கள் இருந்தாலும இருக்கலாம். அவைகளை எல்லாம ஆய்நது உண்மையை உணர்ந்த அறிஞர்கள் தெரிவிபபாாகளாயின் இரண்டாம் பதிப்பில் அவைகளைச் சேர்த்துக் கொள்ளப்படும. தமிழ் நாட்டில் உள்ள பண்டிதர்களும் ஏனைய அறிஞர்களும இதனைக் கூர்நது படிக்க வேண்டிக்கொண்டு இவ்வுரையை முடிக்கின்றேன்.

முப்புர நிருதர் காலத்துப்

## க. பொதியமலை அகத்தியர்

என்கிற குறுமுனி (ஔியா)

(காலம் — 16,000 B C)

இமயமலை தோன்றி இற்றைக்கு இரண்டுகோடி ஆண்டுகள் ஆகின்றன இமயமலை தோன்றுவதன் முன்னம் விந்தியமலைக்கும் திபேதது நாட்டிற்கும் இடையில் ஒரு பெரிய கடல் இருநதது.

விந்தியமலையிலிருந்து தெற்கே தென் பாலிமுகம் (South Pole) வரையில தமிழ்நாடு பரவி இருந்தது இநத நாடுதான் தமிழா கணம (Tamilian Race) உற்பத்தியான இடம்.

தென்பாலி முகத்திலிருநது (South Pole) தென் அயன வரை வரையில் (Tropic of capricorn) ஒளிநாடு ஆகவும், தென் அயன வரையிலிருநது உலகநடுவரை (Equater) வரையில் பெருவளநாடு ஆகவும், உலக நடுவரை முதல் குமரியாறு வரையில் குமரிநாடு ஆகவும, குமரியாற்றிலிருந்து துங்கபத்திரையாறுவரையில் பாண்டிய, சேர, சோழ, குறும்ப (பல்லவ), எருமை நாடுகளாகவும துங்கபத்திரை யாறு முதல் விந்தியமலைவரை துண்டீர நாடு ஆகவும் பிரித்துக்கொண்டு தமிழா ஆண்டுவந்தனா.

இமயமலை தோன்றிய பின்னா பல ஆண்டுகள் கழித்து, அங்கே குடியிருகக வசதிகள் ஏற்பட்டபின், தமிழர்கள் குடியேறி, அபபகுதியை சிந்துநாடு (Punjab), கசமார் நாடு (Cashmere), கங்கைநாடு, பனிமலைநாடு (இமய நாடு), பூதாநாடு (Bhutan) எனப பிரித்து ஆண்டுவந்தார்கள்.

இந்த நாடுகளை ஒளியர், சேரர், சோழர், பாண்டியர் ஆகி யோர் மாறி மாறிப பல ஆண்டுகள் ஆட்சி செலுத்திவந் தார்கள். கடைசியாக ஒளிநாட்டு வேளாளர் குலத்தைச் சேர்ந்த பரமேச்சுரா கயிலாயத்தை (பனிமலைநாட்டில உள் ளது) அரசிருக்கையாக்கி மேற்கண்ட நாடுகளை ஆண்டு வந்தார்.

தென் நாடுகளில் பாண்டியநாடு, குமரிநாடு, பெருவள நாடு, ஒளிநாடு முதலியவைகளை ஆழி வடிம்பலம்பநின்ற பாண்டியன் என்கிற முதலாம நிலந்தரு திருவிற்பாண்டியனும் அவன் குடி வழி வநதவருமகி மு. 30,000 முதல கி மு 16,500 வரை பதின்மூவாயிரதது ஐநநூறு ஆண்டுகள் ஆட்சி செலுத்தி வந்தனர்.

ஏனைய சேர, சோழ, குறுமப (பல்லவ), எருமை, துண்டீர (தண்டக) நாடுகளை அநதந்த நாட்டாரே ஆண்டு வந்தாாகள

கி. மு. 16,500 ல் நிருதிநாட்டு (Africa) நிருதாக ளால் (Negroes) தமிழ்நாடு கைபபற்றப்பட்டு ஐந்நூறு ஆண்டுகள் அல்லலில் மூழ்கி இருநதது.

நிருதர்களில் கடைசியாகத் தமிழ்நாட்டை ஆண்டவர் கள் தாருகனுடைய (இவன் சூரபதுமன் தமபி தாருகன் அல்ல) மைந்தர்களான உடுக்கண்ணன் (தாரகாக்கன்), மரைக் கண்ணன் (கமலாககன்), அறிவுடைமாலி (வித்தியுன் மாலி) என்பவர்கள் இவர்கள் மூவருமம முப்புரத்தவர் (திரிபுராதிகள்) என்னபபடுவா.

சேர-சோழ-பாண்டியர்-குறுமபா (பல்லவர்)-எருமை நாட்டார் (Mysorians), துண்டீர நாட்டார் முதலியவர்க ளால் நிருதர்களை ஒழிகக முடியவில்லை'

நிருதர்கள் பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்களால் மூன்று பெரும் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு முப்புரத்தவர் எனப பெயர் கொண்டு, தமிழ் நாடுகளை ஆண்டு வநதார்கள்

தங்களால் வெற்றிபெற முடியாமை கண்டு, தமிழ் அரசர்கள் எல்லாம் கயிலை சென்று, பரமேச்சுரரிடம முறையிட்டார்கள்

அவ்வமயம் பரமேச்சுரருககும், இமயமலை அரையன் மகள் உமை அம்மைக்கும் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருநதன திருமண முழுத்த நாள அண்மையில் இருக்கவே, பரமேசசுரா தனககுச் சமானமான அகத்தியரை விளிதது, பெருஞ சேனைகளுடன் தெற்கே தமிழாககளுக்கு உதவி செய்ய அனுபபினார் இவரைததான்

" சிவனை நிகர் பொதியவரை முனிவன் "

என்று அருணகிரியார் பகர்நதது இதுதான் முதன் முதல் அகததியர் தென் நாடு போந்ததற்குந் காரணம். இவ்வகத்தியர் ஒளிநாட்டு வேளாளர் பரமபரையைச் சேர்ந்தவர்

தென்நாடு போகும்படி சொன்னபோது அகத்தியா பரமேச்சுரனைப் பார்தது,

' விடைகொடு போவான் ஒன்றை வேண்டினன் எகுந் தேயம
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப, அந்த நாட்டின்
இடைபயின் மனிதத ரெல்லாம இனறமிழ் ஆயந்து கேள்வி
உடையவா என்ப, கேட்டார்க் குததரம உரைத்தல வேணடும் "

என்று கூற, அவர் அகததியருக்குத தமிழ் இலக்கணததை உபதேசித்து முத்தமிழிலும் வல்லவராக்கி அனுப்பிவைத்தார்.

அகத்தியர் சேனைகளுடன் தெற்கு நோக்கி வருவதை அறிநத முப்புரத்தவா விந்தியமலைக்குத் தங்கள் சேனைகளை

அனுபபி அங்கேயே தடுக்க முயன்றனர் அங்கே ஒரு பெரிய சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் **அகத்தி யர்** வெற்றி பெற்றார் இநிகழ்சசியைத்தான் அகத்தியர் விநதத்தை அடக்கினார் என்று கூறுவது. தமிழா அகத்தி யருக்கு "**விந்தம் அடக்கிய வித்தகர்**" எனப் பட்டமும் சூட்டினர்

இச்சரித்திரம அறியாத புலவர்கள் பிற்காலத்தில், "**விந்நம் அடக்கிய வித்தகர்**" என்பதைக் கொண்டு கதை எழுதலாயினர். விந்தம் மேருவோடு இகலி, நீண்டு வளர்ந்து, சூரிய சந்திரர்களை இயங்கா வண்ணம் தடுத்த தாகவும், அகத்தியர் விந்தத்தைப் பாதலத்தில் அழுத தியதாகவும் கூறுவர். இது "**காசிகாண்டம**" என் னும நூலில் கண்டது. விந்தமானது பாதலத்தில் அழுத்தப்பட்டிருந்தால், இன்று அது தரையோடு தரை யாய் இருக்க வேண்டும் அப்படிக்கில்லாமல முன் இருந்த படியே அடவிகள அடர்ந்த பல தொடர் அடுககுகளையு டைய, தக்கணத்துக்கும இந்துததானத்திற்கும எல்லை வரையாக அமைநதுள்ளது.

ஒருவன் ஓர் ஊரை அல்லது நாட்டை அடக்கினன் என்றால் அவ்வூராரோடும் நாட்டாரோடும் எதிர்த்துச சண்டையில் வெற்றி பெற்றான் என்பதே பொருந்துமே அல்லது, அவ்வூரையோ நாட்டையோ பாதலத்தில் அழுத்தினன் என்பது பொருந்தாது.

தமிழ் மொழியின் போக்கு, வழக்கு முதலியவைகளை அறியாத ஆரியர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து, தமிழைப் படித்த காலத்தில், இம்மாதிரிச் சொற்களை எடுத்துக் கொண்டு கதை எழுதுவாராயினர். அப்படி ஆரியப புலவர் எழுதிய கதையினைத்தான் அதிவீர ராம பாண்டி

யன் காசி காண்டம் என்னும் நூலில் மொழி பெயர்த்து எழுதியுள்ளார்.

அகத்தியர் விந்த வெற்றிக்கு அப்புறம் அங்கிருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கி வருங்காலத்தில், பல இடங்களில் நடந்த சண்டைகளில் வெற்றிபெற்று கிரவுஞ்ச மலையை நெருங்க, அங்கே அம்மலைக்கு அரசனாகிய கிரவுஞ்சனோடு போர் செய்து வெற்றிபெற்று, **பொதியமலையை** அடைநதார்.

அங்கே பாசறை அமைத்துக் கொண்டு விந்தியமலை முதல் பொதியமலைவரை நிருதர்களை விரட்டி அடித்துத் தமிழ் நாட்டை மீட்டு, ஆண்டுவந்தார் குமரிநாடு—பெருவளநாடு—ஒளிநாடுகள் மாத்திரம் நிருதர்கள் வசம் இருந்தன. பொதியமலைக்குத தெற்கே சென்று நிருதர்களை எதிாகக அகத்தியரால் முடியவில்லை. இச் செய்திகளை எல்லாம தூதுவா மூலம கயிலாயத்துக்கு அகத்தியர் அனுப்பினார்

பரமேச்சுரருடைய கலியாணம் நடந்த பின்னாட்களுக்கு எல்லாம பரமேசசுரரே பெரும் சேனைகளுடன் புறப்பட்டு வநது, **திருவேற்காடு** என்னும் இடத்தில் அகத்தியரைச சந்தித்து, நாட்டின் நிலைமையை அறிந்து, **கூவம்** சென்று, அங்கு போருக்கு வேண்டியவைகளைச் சேகரித்துக்கொண்டு, போர்க்கோலததுடன் புறப்பட்டு, **அச்சிறுபாக்கம்** அடைய, அங்கே தேரின் அச்சு முறிய, அதனைச் சரிபபடுத்திக்கொண்டு, **திருவதிகையை** அடைய, அங்கே முப்புரத்தவர்களின் சேனைகள் எதிர்த்தன. போர் மூண்டது. அப்போரில் பரமேச்சுரர் வெற்றிபெற்று, முபபுரத் தவாகளைத் துரத்திக்கொண்டு முப்புரம் சென்று, மூன்று கோட்டைகளையும் தகர்த்து, எரியூட்டி, நாசம் செய்து, சரணம் அடைந்த முப்புர நிருதருககு அபயம் நல்கி,

தமிழ் நாட்டைத் தென்பாலிமுகம்வரை நிருதர்களிடம் இருந்து மீட்டு, மேருமலைத் தொடரின் சிகரமாகிய **மகேந்திரமலையை** அரசஇருக்கையாக்கித் தமிழ்நாட்டை ஆண்டு வநதார.

போரின்று நாட்டில் அமைதி ஏற்பட்டதும் அகத்தியர் பரமேசசுரரிடம விடைபெறறுப பொதிகை சென்று, தமிழ்மொழியை வளமபடுத்த எண்ணி, தாம பொதியமலை வந்தவுடன் ஏற்படுததிய தமிழ்சசங்கததை வளரச்செய்து, தாம ஒரு இலக்கண நூலை "**அகத்தியம**" என்னும் பெயரால் உண்டுசெய்து, தம் மாணுககாகளுக்குப் போதித்து வரலாயினர். இவருடைய சங்கமானது நீண்டநாள் நடைபெற்று வநதது.

பரமேச்சுரருடைய ஆணையால் இவர் தென்னுட்டுக்கு வநதாரென்பது:—

> "நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து
> கெடுகின்றது எமபெருமான் என, ஈசன்
> நடுவுள அங்கி அகததிய! நீ போய்
> முடுகிய வையத்து முன்னி ரென்றனே" (தமிழ் மூவாயிரம்)

எனற திருமூலர் வாக்கால் அறியலாம்

### குறுமுனி — தென்முனி

இவ்வகததியருக்குக "**குறுமுனி**" என்றும, "**தென்முனி**" என்றும பெயர்கள் உண்டு.

பொதியமலையில் **பாவநாசத்தில்** தான் இவ்வகத்தியருடைய தமிழ்ச் சங்கம் இருந்தது ஆனல் குற்றாலத்திலும் அகத்தியருக்கு ஓர் இருக்கை உண்டு. இது கோடைக்கால இருக்கையாக இருநதது. அதனல் இவருக்குக் **குற்றாலமுனி** எனறும பெயர். **குற்றாலமுனி** என்பது **குறுமுனி** என்று குறுகி வழங்கப்பட்டது. இவர் தென் தமிழ் நாட்டில் இருந்ததால் **தென்முனி** என்றும் கூறப்பட்டார்.

பிற்காலத்துப் புலவர்கள் குறுமுனி என்பதற்கு குறுகிய முனி என்று பொருள் செய்துகொண்டு, அகத்தியர் கட்டைவிரல் பருமன் குறுகிய முனி என்று, தமக்குத் தோன்றியவாறு கதை எழுதுவாராயினர்.

இவ்வகத்தியா செய்த முத்தமிழ் இலககணத்திலிருந்து பல சூத்திரங்கள் மேற் கோள்களாக உரையாசிரியர்களால் எடுத்தாளபபட்டுள்ளன. அவைகள் தாம் இப்போது எஞ்சியுள்ளவை நூல் முழுதும் கிடைக்கவில்லை.

"வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்நதுவிட்டது" என்றால், பூமியை ஒரு தராசுபோல நினைத்து உண்மையிலேயே அபபடித் தாழநததாகப் புராணக்காரர் எழுதிவிட்டாாகள். ஆனல் அத்தொடரை உருவகமாக நினைத்துப பொருள் செய்யவேண்டும் "அவன் மிகவும் உயர்நதுவிட்டான்" என்றால், "அவன் கலகம் செய்ய ஆரமபித்து விட்டான்" என்பது பொருளாகும். அது போலத் "தென்திசையில் அபபோது ஆட்சி செலுத்தி வநத அரக்காகளா கலகமசெய்து தமிழர்களைத் துன்புறுத்தி வந்தார்கள்" என்று கொண்டு, "அகத்தியர் பொதியமலையில் அமர்நது சமன் செய்தார்" என்றால், "பொதியமலையில் பாசறை அமைத்துக்கொண்டு அரக்கர்கள் செய்த கலகத்தை அடக்கினா" என்பதே பொருளாகும.
இவவகததியரைபபற்றி அபபா சுவாமிகள்.—

'அன்றாலின் கீழிருந்தங(கு) அறம் சொன்னானை,
அகத்தியனை உவப்பானை, அயன்மால் தேட
நின்றானை,க் கிடந்த கடல் நஞ்சுண்டானை,
நேரிழையைக் கலந்திருநதே புலன்களைந்தும்
வென்றானை, மீயசசூர மேவினானை,
மெல்லியலாள் தவததினிறை அளக்கலுற்றுச
சென்றானைத் திருவீழி மிழலையானைச
சேராதார் தீ நெறிக்கே சோகின்றாரே"

என்று பாடியுள்ளார்.

பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல்

## ௨ முத்தூர் அகத்தியர்

(தமிழர்)

(காலம்—14,550 B. C.)

இவர் சூரபதுமன் காலத்துக்கு முந்தி இருந்த **செங்கோவின்** காலத்தில் வாழ்ந்தவர். பெருவளநாட்டில் இருந்த பஃறுளியாற்றின் முதல் அணைக்கட்டின் வாய்க்கால் பாய்ச்சலை (தலைப்பாய்ச்சல்) உடைய **முத்தூர்** என்னும் ஊரில் வசித்தவர்.

பெருவள நாட்டிற்குத் தெற்கே உள்ளது ஒளிநாடு ஒளிநாட்டு வேளாளர் குடியைச் சேர்ந்தவன் **செங்கோன்** என்னும் அரசர்க்கரசன் (சக்கரவர்த்தி) இவன் வடக்கே திபேத் நாட்டையும், கிழக்கே கடாரத்தையும் (Burma) வென்று தமிழ் நாட்டுடன் இணைத்து அரசாண்டவன்

இவன் காலத்தில் பெருவள நாட்டில் உள்ள **மேருமலைத்** தொடரின் கொடுமுடிகளில் ஒன்றாகிய **மணி மலையை** இவன் அரச இருக்கையாக்கி, அங்கே தமிழ்ச்சங்கம் ஒன்றை நாட்டி, முத்தமிழையும் வளர்த்து, ஆட்சி புரிந்து வந்தான். இதனை:—

> **பேராற்றருகில்** பிறங்கு **மணிமலையில்**
> சீராற்றும் செங்கோ திறற் செங்கோ-நேராற்றும்
> பேரவையிலே நூற் பெருமக்கள் சூழ்ந்தேத்தப்
> பாரரசு செய்ததமிழ்ப் பைந்தேவி"

என்னும் 'தமிழ்விடுதூது'க் கண்ணிகளால் அறியலாம்.

இந்த **மணிமலைத்** தமிழ்ச்சங்கத்தில் **சக்கரன்** என்னும் புலவன் தலைமைப் புலவனாக இருந்தான். **தனியூர்ச் சேந்தன் - முத்தூர் அகத்தியன்-பேராற்று நெடுந்துறையன் -**

இடைகழிச் செங்கோட்டன் முதலிய பல புலவர்கள் அச் சங்கத்தில் இருந்தார்கள்.

சேந்தன் (தனியூர்ச்சேந்தன்) என்னும் புலவன் செங்கோவின் வெற்றிகளைப் பற்றிச "செங்கோன் தரைச் செலவு" (The Expedition of Emperor Sengon) என்னும் நூலாகப் பாடியுள்ளான் அந்நூல் முழுதும் "தாப்புலிப்பா" என்னும பாவால யாக்கபபட்டது ஆகும். அந்நூலைத் தனியூரச சேந்தன தமிழ்ச்சங்கத் தலைமைப புலவனாகிய சக்கரன் முன்னிலையில் அரங்கேற்றுபபடி செய் துள்ளான் இதனை:-

செஙகோன் தரைசசெலவைச சேந்தன தனியூரான்
துஙகன் தமிழ்த்தாப் புலித்தொடரால்—அஙஙிசைத்தான்
சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி
அக்கரக் கோ நாமஞ்சு வாம்."

என்னும "செங்கோன் தரைச செலவு"ப் பாயிரச் செய்யு ளால் அறியலாம் இப்பாயிரச் செய்யுளைப் பாடியவர் பஃறுளியாற்றுத தலைப்பாய்சசல் முத்தூர் அகத்தியர் ஆவர்.

செங்கோவின் தமிழ்ச்சங்கத்திற்குப் பேராற்று நெடுந் துறையன் பெருநூலும், இடைகழிச செங்கோடன் இயல் நூலும் இலக்கணங்களாக இருந்தன

"தரைச் செலவு" என்னும் நூல பாடவேண்டுமானல் தாப்புலிப்பா என்னும் பாவினததினலேயே பாடவேண்டு மென்பது அக்காலதது வழக்கு. இதனை, "தாப்புலி கொண்டு தரைச செலவல் சொல்ல" என்ற பேராற்று நெடுந்துறையன் பெருநூலில் கண்ட சூத்திரம் வெளிப் படுத்துகிறது.

குன்றம் எறிந்த குமரவேள் செய்த "குமரம்" என்னும் இலக்கண நூலுக்குமுற்பட்டது இப் பெருநூல்

தொல்காப்பியத்தில காணபபடாத தாப்புலிப்பா போன்ற பாவினங்களும, எடுததொலிப புணாசசி, நீட்டொலிப புணர்சசி, குவித்தொலிப புணாச்சி போன்ற புணர்ச்சி விதிகளும பெரு நூலிலும இயனூலிலும கூறப் பட்டுளளன இப் புணர்ச்சி விதிகள்தான் பிற்காலததில் ஆரியர்களள வந்தபோது அவாகளுடைய மொழி இலக் கணத்தில தீர்க்க சந்தி - குண சநதி - விருதத சந்தி என்னும் வடமொழிப பெயருடன இடம் பெற்றன.

இம் முததூா அகத்தியா செய்த நூல்கள் ஒன்றும கிடைக்கவில்லை. செங்கோன் தரைச் செலவுப் பாயிரச செய்யுள் ஒன்றுமட்டுமே அவர் பாட்டாக நமக்குக் கிடைத திருககிறது

இந்தப் பாயிரச செய்யுள் ஒன்றுமே இவருடைய புலமையை வெளிப்படுததப் போதுமானது. அககாலத தில் புலவர்களுககு "எழுததச்சன்" "அககரககோ" முதலிய பட்டங்கள் வழங்கபபட்டன என அறிகிறோம். 'எழுத் தசசன்' என்றால 'எழுததுககளுககுத் தகப்பன்' என்பது பொருள். அதாவது எழுத்துக்களினுடைய பிறபபு முதலிய பன்னிரண்டு இலக்கணங்களையும் நன்றாய் அறிந்த வன் என்பது பொருளா. எழுத்தசசனுக்கு மேற்பட்ட பட்டம் 'அக்கரக்கோ' என்பது. 'எழுத்துக்களுக்கு அரசர்க்கரசன் (சக்கரவாத்தி)' என்பது பொருள்.

இமயமலைததொடரில் **கயிலாயத்திலும்,** மலயமலைத் தொடரில் **பொதியமலையிலும்,** மேருமலைத் தொடரில் **மகேந் திரமலையிலும், மணிமலையிலும்** தமிழ் வளர்க்கப்பட்டு வநததால்,

"ஓங்கலிடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேரி லாத தமிழ்"

என்று புலவர்கள் புகழலானார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீவைகுண்டம் தாலூகாவில் பெருங்குளம் (வழுதிமாநகரம) கிராமத்தில் செங்கோன் மடம் என்ற மடம் உள்ளது இது ஒரு தனி மடம். இதன் வரலாறு அறியத்தக்கது

சூரபதுமன் காலத்து

## ௩. வாதாபி அகத்தியர் (ஒளியர்)

(காலம்— 14,058 B.C)

இவர் சூரபதுமன் காலத்தில் இருந்தவர் சூரபதுமனின் உடன்பிறந்தாள் அசமுகியின் குமாரர்கள் வில்வலன் —வாதாபி இருவரும மேற்கு மலைத்தொடரைச்சேர்ந்த குடகுமலையின் ஒரு பகுதியான மலயகூடத்துக்குப் பக்கத்தில் உள்ள வாதாபிபுரத்தில இருநதுகொண்டு அந்தப் பககதது நாடுகளை, சூரபதுமனின்கீழ், ஆட்சிசெலுத்தி வநதாாகள் வாதாபிபுரம (Badami) இபபோது ஐதராபாத்து சிற்றரசுக்கு உட்பட்டு உள்ளது இந்த வாதாபி நகரம் சூரபதுமனுககு வடக்குப பககததில் ஒரு காவல் நகராக (Out-post) இருநதது மேற்குச் சளுக்கியர் காலத்திலும இநத வாதாபித் தொன்னகரம் இரண்டாம் புலிகேசியினுடைய அரச இருக்கையாக இருந்தது

இரண்டாம் புலிகேசியினுடைய காலத்தில்தான் முதலாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ அரசனின் சேனாதிபதி பரஞ்சோதி என்ற சிறுத்தொண்ட நாயனார்,

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்"
—(பெரிய புராணம்.)

என்ற பெரியபுராணச் செய்யுட்படி, வாதாபி நகரத்தை எரியூட்டித் துகளாக்கி, இரண்டாம் புலிகேசியைவென்று, பன்மணியும், நிதிக்குவையும், ஆடுமாடுகள், குதிரைகளும் கவர்ந்து வந்து பல்லவ அரசனுக்கு அளிததுள்ளார் வாதாபி நகரம் மலையகூடத்துக்கு அணித்தாக உள்ளது என்பதை மிஸடர் சிவராஜ் என்பவர் தமமுடைய "தமிழ நாட்டில் அகத்தியர்" என்னும நூலில் குறித்துள்ளார் *

வில்வலன் வாதாபி இருவருமமிகவும் கொடூரமான அவுணர்கள் நரமாமிசம் புசிப்பவர்கள் குன்றமெறிந்த குமரவேள் சூரபதுமன்மீது போாதொடுத்தபோது தன் னுடன் இருந்த அகத்தியரை சேனைகளுடன் வாதாபிக்கு அனுப்பி, வில்வலன் வாதாபி இருவரும் சூரபதுமனுடைய உதவிக்கு வராமல் பார்த்துக்கொள்ளுவதுடன் அவாகள் இருவரையும் கருவறுக்கும்படி ஆணை தந்து அனுப்பினா.

குமரன் ஆணையைத் தலைமேற்கொண்டு, அகத்தியர் தகுந்த சேனைகளுடன் வாதாபி சென்று, பாசறை அமைத் துக்கொண்டு, வில்வலன்—வாதாபியுடன் போர் தொடுத தார். அவ்விருவாகளுடைய வஞ்சப்போரினை அகத்தியர்

* Vide "Augastiya in the Tamil Land" page 5 by Mr. Sivaraj.—

"Malaya Kuta is 3 miles east of Badami (ancient Vatapipuram.) Badami is otherwise called Dakshina-Kasi in the Kaladgi District of the Bombay Presidency, This is 300 miles South of Nasik.

நன்குணர்ந்து, அதற்குத்தக, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, வில்வலன் — வாதாபி இருவாகளையும் தாமே கொன்றார்.

அந்தப் பாவத்தைப்போக்க அவர் கொங்கு நாட்டில் உள்ள திருத்துடிசையம்பதியில உள்ள சிவபெருமானை வணங்கினா. அதனால் அவர் தம்முடைய பாவம் நீங்கப் பெற்றார். இதனை .—

"செங்கை தாங்கிய தீர்த்த நீரொடும்
கோங்கின் பாற்செலக் குறீஇய மாமுனி
மங்கு கின்ற அம் மைந்தா நேருறு
அங்கண் மேவினா அருந்தவத் தாபோல்"

"ஆசில் கோங்கினுக் கணித்தின் ஓரிடை
வாச மீதென மகிழ்ந்து வீற்றிரீஇ
ஈச னாதமை இலிங்க மேனியில்
நேச நெஞ்சினல் நினைந்து தாபித்தான்."

(கந்தப்புராணம்—காவிரி நீங்குபடலம்)

"தவநெறி யிடைவிடாச சரத மாமுனி
பவமறு துடிசையம் பதிபுக் காங்கமா
சிவபெரு மானையும் தேவி தன்னையும்
உவகையி ெெடு தொழு தொருங்குற் றனரோ"

"அடல்கெழு வெஞ்சூர் மாது அசமுகி பெற்ற மைந்தா
திடமுடன் செய்த சூதின் திறமறிந் தவரைக் கொன்ற
விடநிகர் பாவந் தீர்த்த விமலனே போற்றி, வெள்ளை
இடபம தயர்த்தோய் போற்றி ஈசனே போற்றி போற்றி"

(திருததுடிசை புராணம்)

என்னும் புராணச் செய்யுட்களால் அறியலாம்.

திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானுக்கு எப்படிப் பொதியமலை அகத்தியர் உகந்தவரோ, அதுமாதிரி, குன்று மெறிந்த குமரவேளுக்கு வாதாபி அகத்தியர் வேண்டியவர்.

வாதாபி அகத்தியருடைய பாசறை வாதாபிக்கு அருகிலுள்ள மலையகூடம் என்று சொல்லுகிறவர்களும் உண்டு.

இந்த வாதாபி அகத்தியர் குமரவேள் இடமிருந்து சில நாடுகளைப் பெற்றுப் பாண்டியனுக்குக் கொடுத்தார் என்று திருநெல்வேலிப் புராணம கூறுகின்றது. இது புராணக் கூற்றாய் இருந்தாலும, சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. அது வருமாறு —

> "வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமும் கொணடு
> தென்திசை யாண்ட தென்னவன் வாழி"

கி. மு. 14,058-ல் குன்றமெறிந்த குமரவேள் சூரபதுமனுடைய நகரம் மகேந்திரபுரியும், அதனை அடுத்துள்ள மேருகிரியும் அழிந்து போகுமபடியாக வடிவேலை விட்டபோது, பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்து மேருவும் குமரிக்கோடு முதலிய 49 கொடு முடிகளும் கடலால் விழுங்கப்பட்டன

கி. மு. 14,004-ல் குன்றமெறிநத குமரவேள் கடுங்கோன் என்னும் பாண்டியனிடம் தமிழ் நாட்டை ஒப்புவித்தபோது, பாண்டியன் வாதாபி அகத்தியரிடம் இழந்த நாட்டிற்கு ஈடுசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, அகததியர் குமரவேளிடம் கூறி, இழந்த நாட்டிற்கு ஈடாகக் கங்கை நாட்டையும் இமய நாட்டையும் வாங்கிக் கொடுத்தார். இச் சரித்திரத்தைத்தான் புராணம கூறுகிறது.

கி. மு. 14,004-ல் தான் பாண்டியன் கடுங்கோன் (இரண்டாம் நிலந்தருதிருவிற் பாண்டியன்) குமரியாற்றங்

கரைத் தென்மதுரையில் தலைச்சங்கத்தை நிறுவினான் அந்தத் தமிழ்ச் சங்கத்திற்கு முதன்முதல் தலைமை வகித்த வர வாதாபி அகத்தியர் ஆவர். குன்றம எறிந்த குமரவேள் ஏற்படுத்திய திருச்செந்தூர்த் தமிழ்ச் சங்கத்திலும் இவர அங்கத்தினராயிருந்தார். "அகத்தியம்" என்னும் இலக்கண நூலைச் செய்துள்ளார். அந்நூல் இப்போது கிடைக்க வில்லை.

## ஆரிய இருக்கு வேத காலத்து

## ௬ உலோபா முத்திரை அகத்தியர் I (ஆரியர்)

(காலம—8,000 B.C)

இவர் ஆரியா வர்த்தத்தில் (இநதுஸதானததில) வாழ்நதவர. இருககு வேததில் மண்டலம I அனுவாகம 23—சூகதங்கள் 167 முதல் 191 வரை 25 சூக்தங்கள பல தெய்வங்களின்மீது ஆரிய பாடையில் பாடியுள்ளார அத தெய்வங்களாவன :—

| | | |
|---|---|---|
| 1. | இந்திரன்மீது பாடிய சூக்தஙகள் | = 167-169-170-173 to 178. |
| 2 | மருத்து ,, | = 168-171-172 |
| 3. | இரதி ,, | = 179. |
| 4. | அசுவினி தேவா ,, | = 180 to 184. |
| 5. | ஆகாசம்-பூமி ,, | = 185 |
| 6. | விசுவ தேவா ,, | = 186. |
| 7. | அன்னை துதி ,, | = 187. |
| 8. | அப்பிரியா ,, | = 188. |
| 9. | அக்கினி ,, | = 189. |
| 10. | பிரகஸ்பதி ,, | = 190. |
| 11. | அப்திரி நசுரியா,, | = 191 |

இவர் தமிழர் அல்லா இவர தமிழ்நாட்டிற்கு வநதவரும் அல்லர். இவருக்குத தமிழும தெரியாது

இவரைப்பற்றி மறைமலை அடிகள் தமமுடைய "மாணிக்கவாசகர் காலம்" என்னும் நூலில் பக்கம் 232ல் கூறுவதாவது :—

"இருக்கு வேதத்தில் பல பதிகங்களை இயற்றிய அகத்தியர் மிகப் பழைய காலத்தே இருந்தவர். அவர் தெற்கேயுள்ள தமிழ்நாடு புகுந்தவர் அல்லர் தமிழ் அறிந்த வரும் அல்லர்" என்பதே.

இவ்வகத்தியர் ஒரு யாகம் செய்தபோது இந்திரனை விலக்கி மருத்துக்களுக்கு அவிர்ப்பாகம் கொடுக்க, இந்திரன் வருந்த, பின் இந்திரனுக்கும் மருத்துக்களுக்கும் இவ்வகத்தியர் சமாதானம் செய்ததாக இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ளது என்றும், இவர் உலோபா முத்திரையைக் கண்டு அவளுடன் பேசினபோது, அவள் தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டியும் முதலில் மறுத்துப் பின் அவளுடைய பேச்சு வலையில் சிக்கி மணந்துகொண்டதாகவும், விஸ்பலா என்னும் பெண்ணுக்கு அசுவினி தேவர்களைக் கொண்டு நொண்டியான ஒரு காலைச் சரிப்படுத்திக் கொடுத்தார் என்றும், கேலன என்பவருக்குப் புரோகிதராய் இருந்தார் என்றும் இருக்குவேதம் கூறுவதாக கா நமச்சிவாய முதலியார் தம்முடைய "அகத்தியர் ஆராய்ச்சி" என்னும் நூலில் கூறியுள்ளார்.

இவர் ஒருகால் இந்திரனுடைய நாட்டுக்குச் சென்றிருந்தபோது, இந்திரன் ஓர் நாட்டிய அரங்கு ஏற்பாடு செய்து, உருப்பசியை ஆடும்படி பணித்தான் நாட்டிய அரங்கில் இந்திரன் மகன் சயந்தன் உருப்பசியைக் காதலித்தான். உருப்பசியும் சயந்தனைக் காதலித்தாள். இம்மன வேற்றுமையால் நடனம் ஓரிடத்தில் பழுதுபடவே, அகத்தியர் சயந்தனை வேணுவாகும்படியும், உருப்பசியைக் கணிகை

யாகுமபடியும், வீணையை மாண் இழந்த மணையாகுமபடியும், மண்ணில் தங்குமபடி சபித்தார். இந்திரன்நடுங்கி, அகத்தியரை வணங்கி மன்னிப்புக்கேட்டுக் கொண்டான்.

இதனல் இவ்வகத்தியர் இசையிலும் வீணையிலும் வல்லவர் என்றும், இசைபாடும்போது தவறு ஏற்பட்டால் சகியாதவர் என்றும ஏற்படுகிறது.

இவர் ஆரிய இருக்குவேத சூக்தங்களுககு அதிகாரியாய் இருந்தும் ஏழு பிரஜாபதிகளில் ஒருவராக ஆரியர்கள் கொள்ளவில்லை

பிரஜாபதிகளாவாா —

(1) கவுதமா (2) பாரதது வாசா
(3) விசுவாமிததிரா (4) ஜமதக்கினி
(5) வசிட்டா (6) காசிபா
(7) அத்திரி

இந்த ஏழு கோததிரஙகளே ஆரியாகளுக்குள் பெருவாரியாக உளளன.

புராணகாலமாகிய பிறகாலததில் ஆரியாகள் பிருகு—நககன் முதலியோரை பிரஜாபதிகளாக எண்ணினர்களேயொழிய, அகத்தியரைச் சேர்ககவில்லை. இக்காரணத்தைக் கொண்டு, அகததியா பிற்காலத்தவர் என்று திருவாளர் சிவராஜ் பிள்ளை கருதுகிறா. அப்படி அவா கருதுவது பொருததமானது அல்ல. அகததிய குலத்தார் ஆரியருக்குள் மிகச சிலரே ஆவர். ஆதலினல பெருவாரியாக இலக்கியஙகளில் வழஙகபபடவில்லையேயொழிய வேறின்று. ஆரிய பிராமணருக்குள் அகததிய கோத்திரத்தார் இன்றும் பலா இருபபதே இதனை வலியுறுத்தும்.

ஆரிய இருக்கு வேத காலத்து

## ரு. மைத்திரா வருணை அகத்தியர் (ஆரியர்)

(காலம்—8,000 B C.)

இவர் இருக்கு வேத காலத்தில் ஆரியாவர்ததத்தில் வாழ்ந்தவர் இவா ஆரியர். தமிழர் அல்லா. இவருக்குத் தமிழ் தெரியாது. தமிழ்நாட்டிற்கு வந்தவரும் அல்லர்.

இருக்கு வேததததில் மண்டலம I—அனுவாகம் 23—சூத்தம் 166 பாடினவர் இவா மருதது என்னும் தெயவத்தைப் பாடியுளளாா.

இவரைப்பற்றித திருவாளா கா. நமச்சிவாய முதலியார் கூறுவதாவது:—

"ஒரு காலத்தில் மித்திரனும வருணனும தேவலோகத்தில் ஊர்வசியின் நடனம் கண்டு களிததபோது, அவர்கள் இருவரும அவள்பேரில் இசசைபபடவே, இநதிரன் ஊர்வசியைச் சபிக்க, அவள் பூலோகம் சோநது, மித்திரனைக் கூடி வசிட்டரையும, வருணனைக் கூடி அகத்தியரையும் பெற்றெடுததாள" என்பதே

சிறிது காலம கழித்து ஊாவசி சாப விமோசனம் பெற்று இநதிர நாட்டை யடைநதாள

இதனல் அகத்தியரும்—வசிட்டரும் ஒரே தாயிடததில் இரு தகப்பன்மாருககுப பிறந்த சகோதராகள் என்று ஏற்படுகிறது

## சா—சுல ஆரிய இருக்கு வேத காலத்து அகத்தியர்கள் (ஆரியர்)

சு. மானன் புதல்வர் மானிய அகத்தியர்

எ. பிரமா—ஊாவசிக்குப் புத்திரா கும்ப அகத்தியா (ஆரியர்)

அ. புலத்தியா—ஆவிர்பூ புத்திரர் அகத்தியா (ஆரியா)

சு கந்தருவன்—ஊாவசி புத்திரா அகத்தியா (ஆரியர்)

(இநநால்வருடைய காலம—8,000 B. C)

இந்நால்வரைப் பற்றியும கா. நமசசிவாய முதலியாா தம்முடைய "அகத்தியர் ஆராய்ச்சியில்" கூறுவதாவது —

" அகததியாகளைப்பற்றி இருக்கு வேதததில் பலவித மாகக் கூறப்பட்டுளளது ஒரிடத்தில் மானன் என்பவருடைய புதல்வராக மானியஅகததியர் என ஒருவர் வாழந்து தாகவும,

ஒரு காலத்தில் பிரமதேவன் ஊர்வசி நடனத்தை கண்டு காமாதுரனுய் தன் வீரியத்தை ஒரு குடத்தில் (கலசத்தில்) விட, அகத்தியா குடத்தில் பிறநது, வாழ்நது வந்தார் என்றும,

புலத்தியர்கரு ஆவிர்பபூவி னிடத்தில் அகத்தியரும்—விசுவரசும் பிறந்து வாழ்ந்தார்கள் என்றும்,

கந்தருவன் ஒருவன் ஊர்வசியிடம் உண்டான காம மிகுதியால் ஒரு குமபத்தில் தன் வீரியத்தை விட, அகத்தி

யர் பிறந்தார என்றும், கூறப்பட்டுள்ளது" என்பதே ஆவிர்ப்பூ, ஊர்வசி இவர்கள் வேசிகள் ஆனதால், பல பேர்களைக் கூடிப் பல புத்திரர்களைப் பெற்றிருக்கலாம். அவர்களுக்கு எல்லாம் அகத்தியர் என்று பெயரிட்டிருந்தார்கள் என்றும், இருக்குவேத காலத்தில் ஆரியாவர்த்தத்தில் இம்மாதிரி நடப்பது சகசமாக இருந்ததென்றும் அறிகின்றோம

மேலே கூறபபட்ட நான்கு அகததியர்களும் ஆரியாகளே. தமிழர்கள் அல்ல. இவர்களுக்குத தமிழ் தெரியாது தமிழ்நாட்டிற்கு வநதவாகளும அல்ல. அப்படி இருகக, தமிழ் நாட்டுப்புலவர்கள் தாம பாடிய புராணங்களில் இருக்குவேத காலத்து அகத்தியர்களைப் பற்றிப் பாடியுளளார்கள் உதாரணமாக :—

மச்சபுராணததில் அகத்தியரைபபற்றிக கூறபபட்டுளளதாவது :—"தாரகன் முதலிய அசுரர்கள் உலகை வருத்தினார்கள். இந்திரனைவன் அககினியையும வாயுவையும ஏவினான். அசுராகள் கடலில் ஒளித்தனர் அக்கினி கடல் நீரை வற்றச்செய்யாமல் இருநததற்காக பூமியில் பிறக்கும படி இந்திரன் அக்கினியைச சபிததான் பிரமன் யாகம செய்ய, யாக கலசமாகிய குடததில் அககினி அகத்தியராகப பிறந்தான். அவ்வகததியர் கடலைப பானம் செய்து, அசுராகளைக் காட்ட, இநதிரன், விருததிரன்—தாரகன் உள்ளிட்ட எல்லா அசுரர்களையும கொன்று வாகை சூடினான். பின் அகத்தியர் கடல் நீரைப பழையபடி கடலில் உமிழ்ந்துவிட்டார்" என்பதே

திருவிளையாடற் புராணமும மச்ச புராணத்தை ஒட்டிச் சில மாறுதல்களுடன் கூறும்.

ஆரியர்கள் முதுகுடுமிப் பெருவழுதி காலத்திலும் அதற்குப் பின்னும் இநதுஸ்தானததிலிருநது தக்காண மாகிய தமிழ்நாட்டுக்கு வந்தபோது, ஆரிய இருக்கு வேதத்தில் கூறபபட்டுள்ள அகத்தியர்களைபபற்றித் தமிழ்ப் புலவர்கள் கேட்டு, தாம பாடிய தல புராணங்களில் எல்லாம் சிற்சில மாறுதல்களுடன் நுழைத்துவிட்டாாகள் வடநாட்டு அரசாகளும், இருடிகளும் தென்னுடு போந்து, தலங்களைச் சேவிததுப பேறு பெற்றாாகள் என்று எழுது வது தமிழ்ப்புலவாகளுக்கு வழக்கமாய்விட்டது. அதனு லேயே சில தலபுராணஙகளில புனைந்துரைகளும் இருக்கக் காண்கின்றோம் வடநாட்டு அரசர்களும இருடிகளும் ஒரு தலத்தைத் தரிசிககவில்லையென்றால், அத்தலத்திற்கு மகிமை இல்லையென்றுகூடத் தமிழ்ப புலவர்கள் நினைதத காலம் உண்டு. அதனுலேதான, தென்னுடு வராத அகத்தி யாகளைபபற்றிக்கூடத தமிழ்நாட்டுப புராணங்களில் நாம் படிக்கின்றோம்

ஆரியாவாத்தத்து

## கo ஏழு இருடிகளில் ஒருவராகிய அகத்தியர்

(ஆரியா)

(காலம—7,500 B. C.)

கடாரமும் (Burma); காமரூபமும் (Assam) ஒரு காலத்தில் ஆரியாவாத்ததேதாடு இணைந்திருந்தன. கடாரத துக்குத் தேவலோகம், இந்திரலோகம் என்றும் பெயாகள் உண்டு. ஆரியாவர்த்ததில் நூறு அசுவமேத யாகங்கள் எவன் செய்கின்றானே அவனுக்கு கடார (தேவலோகம்) ஆட்சியும், இநதிரப்பட்டமும், இநதிராணியின் போகமும்,

சங்கநிதி, பதும நிதிகளும், காமதேனு, கற்பக மரங்களும் உண்டு என்று ஆரிய இலக்கியஙகள கூறுகின்றன. அதனால், இந்திரனுககு 'சதக்கிரது' என்ற ஒரு பெயரும் உண்டு

இநதிரபபட்டத்தில் இருக்கும ஒருவன், வேறு ஒருவன் நூறு யாகங்கள் செய்துவிட்டு தன்னுடைய பட்டதுக்கு வராமல் இருக்கவேணடுமென்று எத்துணையோ சூழ்சசிகள் செய்வதுண்டு அசசூழ்சசிகளை எல்லாம பதினெண் புராணங்களில விரிவாகக் காணலாம.

நூறு யாகங்கள் செய்துவிட்டு இநதிரப் பதவியை எய்துகின்றவரது தகுதியைச சோதனை செய்ய, இருடிகள் ஏழுபேர் நியமிககபபட்டிருந்தாரகள்.

அவ்வெழுவராவார் :—

"அகத்தியன், புலதஇயன், அஙகிராதன்
வசிட்டன், காசிபன், கவுதமன், மாரக்கணடு
இசைதத இவா தாம ஏழ் இருடிகளே" (பிஙகலந்தை)

இவ்வெழுவருக்குள் அகத்தியர் தலைவர் இவ்விருடிகள் எழுவரும் தங்கச்சிவிகை தாங்க, இடையில் யாதொரு பஙகமும இல்லாமல நூறு யாகங்களை முடிதத ஒருவன் அதில் ஏறி, பவனி வநது விடுவானேல் அவனே இநதிரப் பட்டத்துக்கு உரியவன். பட்டத்திலிருப்பவன் விலகி விட வேண்டும்.

புராணஙகளில் நாம படிக்கும இந்திரபபட்டம் பெற்ற பல அரசர்களில் நகுடன் என்னும அரசன் சரித்திரமும் ஒன்று. அசசரித்திரம் வருமாறு :—

"சந்திரகுல வேந்தனுகிய நகுடன் என்பான் ஆரியா வாரத்தத்தில் நூறு பரி வேள்விகளைச் செய்து முடித்து.

அதன் பயனுக இந்திரபபட்டத்துக்கு உரியவன் ஆனுன், இவன் உடனே புறபபட்டு தேவலோகம் (கடாரம்) சென்று சுதர்மை என்னும, தங்கததினுலும, மணிகளாலும் சமைக்கப பெற்ற தெய்வ மண்டபததில் வீற்றிருந்தான் வழககம்போல முனிவர்கள் ஏழுவரும பொற்சிவிகை கொண்டுவநது அழைக்க, இவன் அதில் ஏறிச்சென்றுன். செல்லுமபோது, இநதிராணியின்மேல் கொண்ட காதலி ஞல், முனிவாகளை விரைநது செல்லும்படி 'சாப்ப' என்றுன் சர்ப்ப என்ற ஆரிய மொழிககு இரண்டு பொருளகள் உண்டு ஒன்று "விரைவாய்ச் செல்லுஙகள்" என்பது, மற்றென்று "பாம்பு" எனபது ஏழு இருடிகளில் தலைவ ராக இருநத அகத்தியருக்குக் கோபம வந்து, "சர்ப்பமாகுக" எனச சபிததார் நகுடன் உடனே மலைப்பாம்பாகமாறி நிலததிடை வீழ்நதான்" என்பதே

நகுடன் தன்னுடைய அவசர புததியினுல், பெரி யோாகளுடைய கோபத்துககு ஆளாகி, இநதிரப் பதவியை யும் இழநது, நெடுநாள் மலைபபாமபாக வாழ்நது, பின் சாப விமோசனம பெற்றுன் என்பது வரலாறு.

இங்கே கூறபபட்ட அகததியா் தமிழா் அல்ல. தமிழ் நாட்டவரும் அல்ல இவர் தமிழ்நாட்டிற்கு வநததும் கிடையாது தமிழ்நாட்டுப் புலவர்கள ஆரியக்கதைகளைப் படித்துத தமிழில் மொழிபெயாக்குமபோது, புராணங் களில் அககதைகளை நுழைதது விட்டார்கள. இல்லாவிடில் தமிழ் நூற்களில் இததகைய கதைகள் இடம்பெற நியாயம இல்லை

முதுகுடுமிப் பெருவழுதி காலத்து

## ௧௧. புரோகித அகத்தியர் I—(ஆரியர்)

(காலம் — 7500 B C.)

இவர் முதுகுடுமிப பெருவழுதியின் காலததவா தமிழ் அரசாகள் முதன்முதல் ஆரியரைப புரோகிதராக வைத்துக்கொண்டது இப பாண்டிய அரசன் காலத்தி லிருந்துதான் ஆரியர்கள பாண்டிய அரசன் முதுகுடு மிக்கு அரசாங்கத்தில் பல உதவிகளைச் செய்ததினால், முதுகுடுமியும் பல யாகங்களை ஆரியாகள் உவகையுறச செய்து, பல ஊாகளைத் தானமாகக் கொடுத்ததுடன, தன் அரண்மனையில் புரோகிதராகவும ஆரியரை வைததுக் கொண்டான் அக்காலத்தில் புரோகிதர்கள எண் பேராயம், ஐம்பெருங்குழுவில் உறுபபினராக இடம பெறுவர். ஆதலின் அரசியலிலும பங்கு பெற்றவர் ஆவர் அபபடி, முதுகுடுமிக்கு முதன் முதல் புரோகிதராக அமர்ந்தவர் அகத்தியப்பெயரையுடைய ஒரு ஆரியா ஆவா

இவ்வகத்தியர் வடமொழி, தென்மொழிகளில் வல்லுந ராக இருந்தார் மேலும் உலக நடை நன்கு அறிநதவர். தமிழ் மக்கள் தம் மீதும், தம் இனத்தார் மீதும் அசூயை கொள்ளாமல் இருக்க, மக்கள் மனதை அறிந்து, எல்லோ ரும் உவகைகொள்ளுமபடி, ஆரியக் கூத்தையும், தமிழ்க் கூத்தையும் நன்கு ஆராய்ந்து, சில மாறுதல்களுடன் "கூத்துநூல்" என்ற நூல் ஒன்றை எழுதி "முதுகுடுமி தமிழ்ச் சங்கத்தில்" அரங்கேற்றி, அக்காலத்துப் புலவர் களின் நன்மதிப்பையும் பெற்று அரசாங்கப் புரோகிதராய் விளங்கினார். இவர்காலத்தில் கொற்கைப் பட்டினந்தான் பாண்டியர் அரச இருக்கையாக இருந்தது.

## கஉ தொடித்தோள் செம்பியன்காலத்து அகத்தியர் (தமிழர்)

(காலம் — 6200 B. C.)

கி. மு. 14058-ல் கொங்கு நாட்டுக் கரூரில் அரசாண்ட முசுகுந்தச் சோழச் சக்கரவர்த்தி காலத்திலேயே, புகார் சோழனுக்கு முக்கிய கடற்றுறைப பட்டினமாக இருந்தது.

தொடித்தோள் செம்பியன் காலத்தில் புகார் அரச இருக்கையாகவும் அமைந்து இருந்தது. தொடித்தோட் செம்பியனுக்கு "நற்றேர்ச் செம்பியன்" என்றும் ஒரு பெயர் உண்டு என்பது:—

"ஒன்னா உட்கும் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்த நின்னூங்கணோர்" (புறநானூறு)

'தூங்கெயில் எறிந்த தொடி விளங்குதடக்கை
நாடா நல்லிசை நற் றேர்ச்செம்பியன்"

(சிறுபாணாற்றுப்படை)

என்றும அடிகளால அறியலாம்

தொடித்தோட் செமபியன் காலததில் காவிரியாறு சோணாட்டில் கிடையாது சோழநாடு அபபோது மழை வளத்தை எதிர்பாாதது இருநததேயொழிய காவிரியாற்று வளததைப் பெற்றிருக்கவில்லை காவிரியாற்றைக் குடகு மலையினின்றும வெட்டித்திருப்பி, சோழநாட்டுக்குக் கொணர்ந்தவன் கி மு. 6020-ல், அஃதாவது 180 ஆண்டுக ளுக்குப் பின்னால் புகாரில் அரசாண்ட காந்தமன் என்னும சோழ அரசன் ஆவான்

கி மு 30000-ல் பஃறுளியாறு எபபடி முதலாம் நிலந் தருதிருவிற் பாண்டியன் என்கிற ஆழிவடிம்பலம்ப நின்ற பாண்டியனால் வெட்டப்பட்டதோ, இமயமலையிலிருந்து கங்கையாறு எப்படிச் சோழ அரசர்க்கரசனாகிய பஃறேர்ச் செம்பியன் (பகு + இரதன் = பகுரதன் = பகிரதன் = பகி

ரதன்) என்பவனால் வெட்டப்பட்டதோ, அப்படியே காந்தமன் என்னும சோழனும் காவிரியாற்றைக் குடகு மலையினின்றும் வெட்டிக்கொணர்ந்தான்.

காந்தமனுக்கு 180 ஆண்டுகள் முன்னர் சோழ நாட்டைப புகாரிலிருந்து அரசாண்டவன் தொடித்தோட் செம்பியன். இவன் வில்வலியில் மிக்கவன். போர் ஆற்றல் உள்ளவன். அருந்திறலோடு பெருந்திருவும் வாய்த்தவன் இவனுக்கு மதிமந்திரியாக அமைந்தவர் பொதியமலை அகத்தியா பரமபரையில் வந்த, 'மலயத்து அருந்தவன்' என்று புலவர்களால் புகழபபட்ட அகத்தியர் என்ற பெயரை வகித்த ஒருவராவர். இவர் அரசனுக்கு அவ்வப் போது உறுதிநலங்களைக் கூறியும, அறிவு புகட்டியும், புரோகிதராக அமாந்து சடங்குகளை வகுத்து, அசசடங்கு களை அரசனைக்கொண்டு சரிவர நடததியும் வநதார்,

உலகந் திரியா ஓஙகுயா விழுசசீரப்
பலர்புகழ் மூதூா பண்புமேம படஇய
ஓஙகுயா மலயத்து அருநதவன் உரைப்ப
தூஙகெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்
விணணவர் தலைவனை வணஙகி முனனின்று
மணணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாகோள் எடுத்த
நாலேழ் நாளினும நனகினிது உறைகென
அமரர் தலைவன ஆஙகது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவார் ஆகலின் "

(மணிமேகலை, க-க-கo)

என்னும் மணிமேகலை அடிகளால் சீத்தலைச் சாத்தனர் என்னும் சீரிய புலவர், தொடித்தோட் செம்பியனைப்பற்றி யும், அவனுடைய மதிமந்திரி மலயத்து அருந்தவன் அகத்தியரைப் பற்றியும் கூறியுள்ளதை நாம் அறிகின்றோம். இவ்வடிகளால் இன்னும் நாம் அறிந்துகொள்ளுவது என்ன வென்றால்:—

"தொடித்தோட் செம்பியனுடைய ஆட்சிக்காலத்தில் சோணாடு ஒருகாலம் மழைவளம் இன்றி, பஞ்சம் எய்திப் படுதுயர் பட்டகாலை, "ஆண்டுதோறும் இந்திரவிழா 28 நாள் புகார் நகரில் எடுத்து, இத்தமிழ் நாட்டிற்கு ஒரு சாந்தி செய்க" என அரசனுக்கு அகத்தியர் அறிவுறுத்தினார். அவனும் அப்படியே அவ்விந்திர விழாவை ஆரம்பித்து ஆண்டுதோறும் செய்துவந்தான் அதனால் சோழ நாடு மழைவளம் பெற்று வளப்பம எய்தி, நாடு நாடாக இருந்தது என்று அறிகின்றும்

அக்காலத்தில் கடாரதேயதது (Burma) அரசன் இந்திரன் என்பான் மழை பெய்யும் மேகங்களைக் கட்டுப் படுத்தவும், வேண்டும்போது மழை பெய்யும்படி செய்ய வும வல்லவனுக இருந்தான் என்றும், பிற்காலத்தில் அம முறை வழிவழியாகப் பயிலப்பட்டு வராமல் மறைந்து பட்டதென்றும அறிகிரும் இன்றும் வடகிழக்குப் பருவமழை (N. E. Monsoon) இநதிரனுடைய நாடாகிய கடாரம்—காம்ரூபம முதலிய நாடுகளிலிருந்து வருகிற தென்பது கண்கூடு. அப்பருவமழை இல்லாவிட்டால் இந்த நாடு பஞசத்தால் பீடிக்கப்படுவதும் கண்கூடு. இந்திர நாட்டில் உளள சரபுஞ்சி (Charapunji) என்னும இடத்தில்தான் உலகததின்கண் எவ்விடததிலும் பெய்யாத அளவுக்கு மிகுதியாக மழை பெய்கின்றது என்பது உலகறிந்த தொன்று.

இவ்வகத்தியர், நூல் ஏதொன்றும் செய்ததாக ஏற்படவில்லை. சிறநத அறிவுடையவர்—மிகுந்த தவத்தையுடையவர்—அரசியல் ஞானம் கைவந்தவா—சோழனிடத்திலும் இந்திரனிடத்திலும் உள்ளன்பு வாய்ந்தவர் இவர் என்று தெரியவருகிறது.

குடமுனி என்கிற

## ௬௩. குடகுமலை அகத்தியர் (தமிழர்)

காலம் — 6020 (B. C.)

மலயமலைக்கு (Western Ghauts) அணித்தாக கீழ்ப் பக்கத்தில், எருமை நாட்டிற்கும் (Mysore) வடக்கில், குடகுநாடு (Coorg) என்ற சிறிய சுதந்திரநாடு ஒன்று உளது. அது கி. மு 6020-ல் கவேரன் என்ற அரசனால ஆளப்பட்டு வந்தது. கவேரனுடைய மகள் காவேரி, தம் மகள் காவேரியை உருவினுலும், திருவினுலும், கல்வியா லும், ஒழுக்கததாலும், தவததாலும் சிறந்திருந்த அகத்தியர் என்பாருக்குக் கட்டிக் கொடுத்து, அவரையே தம் முதன் மந்திரியாகவும் வைத்துக்கொண்டான் கவேரன் *

இவ்வகத்தியரைக் குடகுமலை அகத்தியர், அலலது, குடகுமுனி, அல்லது குடமுனி என்பர் குடமுனி என்பது குடகுமுனி என்பதன் குறுக்கம. இக்கருததை அறியாத வர்கள் குடமுனியைக கும்பமுனி ஆககி, கலசத்தில் பிறநததாகக் கூறும் ஆரியக் கதைகளோடு ஒன்றுபடுத் திப் பாடிவிட்டார்கள் சில புராணங்களில்.

இவ்வகத்தியா காலத்தில் கவேரனுடைய நாடு எல்லா விதத்திலும் வளம்பெற்று இருந்ததுடன் மொழிவளமும் பெற்று இருந்தது.

குடகுமொழி (கூர்கி என்றும பெயர்) எழுத்தில்லாத மொழி. துளு - தோட முதலிய மொழிகளைப்போல தமிழி னின்றும் பிரிந்த ஒரு மொழி. இன்றும் அம்மொழிக்குத் தனி எழுத்துக்கள் கிடையா. கன்னட மொழியின் எழுத்துக்களையே கொண்டு விளங்குகிறது.

---

*Vide " அகத்தியரும் தமிழ் நாடும " பககம் 3.

இவ்வகத்தியர் வடநாட்டில் இந்துஸ்தானத்தில் அக்காலத்தில் அரசாண்ட பரசுராமற்கு மிகவும் வேண்டியவர். இவர் ஆரியாவர்ததத்துக்கு அடிக்கடி சென்று வருவார். ஆரியநாட்டு அரசர்கள் எல்லாரும் இவ்வகத்தியருக்கு நண்பர்கள். ஒருநாள் அயோத்திக்குப் போய்விட்டுத் திரும்புங் காலையில் நைமிசவனம் பக்கமாக வந்தார் அங்கே முனிவர்கள் பலர் அசமேதம் செய்ய ஒரு ஆட்டை யூபத் தமபத்தில் கட்டி இருந்ததை இவர் பார்த்தார். பார்த்ததும் அந்த ஆட்டின் பரிதாப நிலையைக் கண்டு அம்முனிவர்களிடம் சென்று, அந்த ஆட்டைக் கட்டவிழ்த்து விடும்படி கூறினார். அம்முனிவர்கள் "அசம்பெய் தவிசொரிந்தாற்றின் வானோர்—வசமபெய் தருளின் மாநிலம செழிக்கும்" என்றார்கள். அகத்தியா அதுகேட்டு, அவர்களுடைய அறியாமைக்கு இரங்கி, அசம் என்னும் சொல்லுக்குப் பொருள் என்ன? என்று கேட்க, அவர்கள் "ஆடு" என்று சொல்ல, அது பொருளன்று, அசம் என்றால் "மூவாட்டை நெல்" என்று பொருள் கூறி, அந்த யாகத்திற்குத் தான் தலைமை வகித்து, தனது குடகு ஆச்சிரமத்திலிருந்து பழைய மூவாட்டை நெல் (அஃதாவது மூன்று வருடத்திய நெல்) கொணர்ந்து, தமிழர் முறையில் வேள்வியை முடித்துக் காட்டினார். இந்திரன் முதலில் ஒப்பாமல் இருந்தான்' இவ்வகத்தியர் அவனுக்கு வேள்வியைப்பற்றி விவரமாகக் கூறியபின் அவனும் ஒப்புக் கொண்டு யாகம் பூர்த்தி அடைந்தது.

திருவள்ளுவர் கி. மு. முதல் நூற்றாண்டில்,

"நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொனறாகும் ஆக்கம் கடை"

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

என்று கூறிய குறட்பாக்களின் கருத்தை 6000 ஆண்டுகள் முன்னரே இவ்வகத்தியர் நைமிசமுனிவர்களுக்கும் இந்திரனுக்கும் எடுத்துக் கூறி அவர்களைச் சீர்திருத்தியுள்ளார். ஆதலின், பரசுராமர் முதற்கொண்டு ஆரியநாட்டு அரசர்கள் எல்லாம் இவ்வகத்தியரிடத்தில் நட்புப் பூண்டு இருந்தார்கள்.

**கவேரன்** குடகில் ஆட்சி செலுத்திக்கொண்டிருக்கும் போது, **காந்தமன்** என்னும் சோழன் **புகார்** நகரில் அரசு புரிந்து கொண்டிருந்தான்.

பரசுராமர் வடநாட்டு அரசர்களையெல்லாம் வென்று அடக்கியபின் தென்னாடுகளின்மீது படையெடுத்து வந்தார். இச்செய்தியை சேர - சோழ - பாண்டியர்களும் (திராவிடபூபன்) கவேரன் - கிருதபவன் - வதுவாதிபன் - கருணன் முதலியோர் கேள்விப்பட்டு, கவேர அரசனுடைய முதன் மந்திரி **அகத்தியரைக்** கலந்து ஆலோசித்தார்கள்.

சரியான அரச குலத்தைச் சேர்ந்த அரசர்களையே பரசுராமர் எதிர்ப்பாரே அல்லது, தாழ்ந்தவர்களிடம் செல்லமாட்டார். ஆதலின், புகார்ச்சோழன் **காந்தமன்** என்பவன் குடகுமுனியைக் கலந்தபோது, அவர் சொற்படி தேசத்தைத் தன் காதற்பரத்தையின் மகனாகிய **ககந்தனுக்குக்** கொடுத்து, முடிசூட்டி, ஆளும்படி செய்துவிட்டு, தான் குடகுமலையில் மறைந்து வாசம் செய்துவந்தான்.

அப்படி மறைந்தொழுகும் காலத்தில்தான், காவிரி நதி குடகுமலையிலிருந்து மேற்கே ஓடிக் கடலில் விழுவதைக் கண்டு, அதனைக் கிழக்கே ஓடும்படி செய்தால் சோழநாடு வளம் அடையும் எனக் கருதி, குடகுமலை அகத்தியர் உதவிபெற்று, குடகுமலைநாட்டின் அரசனாகிய

கவேரனுடைய அநுமதியின்பேரில், மலையை வெட்டி, ஊடறுத்து, தன் நாட்டிற்குக் கொண்டு சென்றான்.

பரசுராமர் சோழநாடு வந்து புகாரில் பரத்தையின் மகன் அரசு செய்வதைப் பார்த்து, போர் தொடுக்கவில்லை. பரசுராமர் பிறகு திருவாரூர் சென்று, தம் பெயரால் சிவலிங்கம் ஒன்று தாபித்து, வழிபட்டுவிட்டு, ஏனைய நாடுகளிலும் சரியான அரசர் இல்லாததால் தன் நாட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். பரசுராமர் சென்றபின் **காந்தன்** என்னும் சோழன் திரும்பிப் பட்டம் எய்தி, காவிரியைக் கொணர்ந்து, நாட்டை வளம்செய்து அரசு புரிந்தான்.

பரசுராமன் படையெடுப்பும் சோழநாட்டிற்கு நன்மையே பயந்தது என்னலாம். அவனுடைய படையெடுப்பு இல்லாவிடில் காந்தமன் குடகு மலையைச் சுற்றிப் பார்க்கும் அமயம் ஏற்பட்டிருக்காது. காவிரியைச் சோழ நாட்டிற்குக் கொண்டு வந்திருக்கவும் முடியாது. இச் சரித்திரத்தை,

" செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையில் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகியச் சம்பா பதியயல்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற
ஆங்கினி திருந்த அருந்தவ முதியோன் "

(மணிமேகலை 1—15)

என்ற மணிமேகலை அடிகளாலும்,

" மேக்குயரக்
கோள்ளும் தவடு ஊடறுத் திழியத்
தள்ளும் திரைப் பொன்னி தந்தோனும் "

(விக். சோழ—உலா)

என்ற விக்கிரமச்சோழன் உலாக் கண்ணியாலும்,

" கோல்கொன்று
அலையெறியும் காவேரி யாற்றுப் படைக்க
மலையெறியும் மன்னர்க்கு மன்னன "
(குலோ. சோழ=உலா)

என்ற குலோத்துங்கசோழன் உலாக கண்ணியாலும்,

" முடுகிக
கரையெறிந்த பொன்னிக் கடலெழுந கோப்ப
வரையெறிந்த மன்னர்க்கு மன்னன "
(இராச. சோழ—உலா)

என்ற இராசராசச்சோழன் உலாககண்ணியாலும், அறியக கிடக்கின்றது இன்னும்,

" .செயற்கரிய களவழிப்பா முன்செய்த......
பொய்கை ஒருவனுற போந்தரமோ— சைய
மலைசசிறைதீர வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்ததிக
கொலைசசிறைதீர வேந்துக குழாம" (புறத—36)

என்ற வெண்பாவில் "சையமலைச் சிறைதீர் வாட்கண்டன்" எனச் சோழன் கூறப்படுதலானும், சையவரையின் குவட்டை ஊடறுததுக் காவிரியைக கொணாந்த செய்தி அறியலாகும்.

பரசுராமன் தென்னாட்டின்மீது படையெடுதது வந்த போது கவேர அரசனும தன்னுடைய தேயததை காவேரி அகத்தியரிடம் ஒப்புவித்து அரசாளுமபடி விட்டுவிட்டு சையமலையில் காந்தமன் என்ற சோழனோடும், ஏனைய கிருதபவன் - வதுவாதிபன், கருணன் முதலியவாகளோடும வாசம் செய்து வரலானான்.

குடகு மலையில் காவிரி உற்பததியாகும இடம தலைக காவேரி என்று கூறப்படும். அந்த இடததைப் பாாவையிட்டவர்களுக்கு அந்த இடம் ஒரு குடம கவிழ்தத நீர அளவு உள்ளதைக்காண பெருவியப்பு ஏற்படும். அதனாலே தான் சீத்தலைச் சாத்தனார், "அமரமுனிவன் அகத்தியன்

தனது கரகம கவிழ்த்த காவிரிப்பாவை'' என்றார். அகத்தியர் தாம் அரசு செய்யும்போதே காவிரியாற்றை வெட்டுவதற்குச சமமதங்கொடுத்ததனாலேயே, கவேரன் பெயர் வராமல அகததியர் பெயர் வநததற்குக காரணமாயிற்று.

காநதமன் புகாரைத் தன் காதற்பரத்தையின் மகன் ககநதனுக்குச சிலகாலம ஆளுமபடி கொடுத்த சரிததிரம்:-

''காந்தனும் எனக் காதலிற் கூஉய்
அரசாள் உரிமை நின்பால் இன்மையில்
பரசு ராமன்நின பால்வந் தணுகான்
அமர முனிவன அகததியன் தனது
துயாநீஙகு கிளவியின் யானதோன றளவும
ககந்தன் காத்தல் காகந்தி எனறே
இயைந்த நாமம இபபதிககுஇட்டு ஈஙகு
உள்வரிக் கொணடவ் வுரவோன பெயாநாள்''

என்ற மணிமேகலை அடிகளால் உய்த்துணரக்கிடக்கின்றது.

புகாருககு சமபாபதி என்றும, ககந்தி என்றும மறு பெயாகளுணடு அவைகளோடு, காவிரியாறு புகாருக்குச சமீபததிலேயே கடலிற் கலப்பதால் காவிரிப்பூமபட்டினம் என்றும பெயா ஏற்பட்டது.

தென்னாட்டிலிருநது வடநாடு சென்றதும், பரசுராமர் தசரதராமரால் தோல்வியுற்றார் என்று இராமாயணம கூறும தோல்வியுற்றபின், பரசுராமா வடநாட்டை விட்டுவிட்டு, 64 குடுமபங்களுடன் சேரநாட்டை அடைநது, சேர அரசனிடம் 64 கிராமங்கள கேட்டுப் பெற்று, அங்கேயே தங்கிவிட்டார்

இசசரிததிரததைச் சில மாறுதல்களுடன் கந்தப் புராணம - காசிகாண்டம - திருக்குற்றாலப் புராணம - திருவேங்கடத தலபுராணம - திருநெல்வேலிப புராணம - குடந்தைப புராணம் - மயிலைத தலபுராணம - திருமறைக் காட்டுப் புராணம் முதலியவை எடுத்துரைக்கின்றன.

விதர்ப்பநாட்டு

## கசு. உலோபாமுத்திரை அகத்தியர் II

(காலம் — 6010 B C.)

இவருக்கும் இருக்குவேதகாலத்து உலோபா முத்திரை அகத்தியர் I-க்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

இவர் காசியில் அரசாண்ட சவர்க்கன் என்னும் அரசன் காலத்தில் காசியில் பிறந்து வளர்ந்தவர் என்றும், வயது வந்தபோது இவர் நாடோறும் கங்கையில் நீராடி, விசுவநாதர் கோவிலுக்குச்சென்று வணங்குபவா என்றும், காசியில் காணப்பட்ட கற்களை எல்லாம சிவலிங்கங்களாகப் பாவிக்கும் மனப்பான்மை உடையவர் என்றும், சிறந்த ஒழுக்கம் வாய்ந்தவர் என்றும், பெரியோர்களை அடுத்து உலகின்கண் மெய்ஞ்ஞானததை அறிந்துய்ய வேண்டு மென்ற அவாக்கொண்டவரென்றும் புரொபஸர் O C. கங்கூலி (Gangoly) என்பவர் கூறுகின்றார்.

சின்னாட்களுக்கெல்லாம் இவர் காசியைவிட்டுப் புறப் பட்டுச் சாத்பூரா மலைதொடரின் சிகரமாகிய வைடூரிய கிரிக்குச் சென்று ஆசிரமம் அமைத்துககொண்டு தவம செய்து வந்தார் என்றும், அக்காலத்தில் விதர்ப்பநாட்டுப பிரதேசமானது நாடாக இல்லாமல் மரஙகொடிகள் அடர்ந்த ஆரணியப் பிரதேசமாக இருந்ததை நோக்கி, காடுகளை வெட்டி, ஆரியாவர்த்தத்திலிருந்து ஆரியர்களை க கொண்டுபோய்க குடியேறறி நாட்டை வளமபடுத்தினர் என்றும், அசசமயம விதர்ப்பநாட்டு அரசனாக இருந்தவருக்கு இவர் மிகவும் வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார் என்றும அறிகிறோம்.

விதர்ப்பநாட்டு அரசனுக்கு உலோபா முத்திரை என்ற ஒரு பெண்ணும், புலத்தியன் என்ற ஒரு பையனும் உண்டு. விதர்ப்பநாட்டு அரசன் வைடூரியமலை ஆசிரமத்தில் இருந்த அகத்தியருடைய குணகுணங்களை அறிந்து, அவர் ஒழுக்கம் - வாய்மை - இனமதழுவல் - முதலிய நற்குணங்களை உடையவர் என்று கண்டு, அவருககுத தன் மகள் உலோபா முததிரையைக கலியாணம் செய்து கொடுத்து அரண்மனையிலேயே வைத்துககொண்டாா.

உலோபா முத்திரை என்பவள் அரசன் மகளல்ல என்றும், அநதப் பெண்ணை அகத்தியரே அரசனிடம் கொடுத்து வளாக்கும்படி சொல்லிப பின் தாம கல்யாணம் செய்துகொண்டதாக திருவாளர் சிவராஜ் பிள்ளை தம் முடைய அகத்தியர் ஆராய்சசி என்னும் நூலில் கூறுகிறார் *

எப்படி இருந்தபோதிலும் விதர்ப்ப அரசனுக்கு இவ்வகத்தியர் மருமகன் என்பதில் ஆட்சேபனை இல்லை. அரசன் மகளைக் கலியாணம் செய்துகொண்ட சின்னாட்களுக்கெல்லாம் தென்நாட்டில் சேர, சோழ, பாண்டியர்களுடைய ஆட்சியின் சிறப்பைப்பற்றியும், அக்காலத்துப் பாண்டியர் தலைநகரமாகிய பொருனை ஆற்று முகத்துவாரத்தில் இருந்த கபாடபுரத்தில் நடந்த இடைசசங்கத்தைப் பற்றியும் கேள்விப்பட்டு, அததமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து தாம் முத்தமிழையும் கற்க விரும்பி விதர்ப்ப அரசனுடைய அனுமதிபெற்று, யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியார் என்ற தொல்காப்பியனோடு

* "Agastya in the Tamil Land", page 12.

"It may, however, be presumed from the tradition that Agastya gave the girl Lopamudra to the king of Vidarpa to be brought up by him and afterward claimed her for his wife."

புறப்பட்டுப் பாண்டியர்நாடு சேர்ந்து, கபாடபுரம தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து படிததார் தாம் படிததகை வீட்டில் தமக்கு உதவியாயிருக்கும் தொல்காப்பியனுக்கும் ஒழிந்த வேளைகளில் முத்தமிழையும புகட்டி வந்தார். அதனால், திரணபிந்து என்கிற திரணதூமாக்கினி என்ற தொல் காப்பியர் இவருடைய மாணுககர் ஆனா

ஒரு நாட்டிற்கு வேற்றுநாட்டார வநது அநநாட்டு மொழியைப் பயிலுங் காலத்து, அவா முதற்கண் செய்வது இலக்கண நூல் ஆகும் மொழியின் இயல்புகளை நன்கு உணர்வதற்கு அது ஆதாரமாகும் தற்காலம் ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வநது தமிழ்மொழியைப பயிலும்போது முதற்கண் செய்தது இலக்கண நூலே. உதாரணமாக:— வீரமாமுனி என்பவர் 'தொன்னூல்' என்ற இலக்கணததையும, G. U. போப் (Pope) பாதிரியாா என்பவா "போப்பையர் இலக்கணமும்" செய்துளளமை காண்க

அதுபோலவே, விதாபபநாட்டு அகததியரும, அவா மாணவர் திரணபிந்து தொல்காப்பியரும தனித்தனி இலக்கண நூல்கள் செய்தனா. கி. மு. 6000-ல ஐந்திரம நிறைந்த தொல்காப்பியா வட்டெழுத்தாக இருநத தமிழ் மொழியைச சதுர எழுத்தாகவும, 16 உயிர் எழுததுககளை 12 உயிர் எழுததுககளாகவும, 35 மெய்யெழுததுககளை 18 மெய்யெழுத்துககளாகவும மாற்றுவதற்குச சில நாட் கள் முன்னாதான் விதாபப அகததியரும, விதர்ப்ப தொல்காபபியரும இலககணஙகள் செய்தனா. இவர்கள் செய்தது வட்டெழுதது முறைபபடியாகும வட்டெழுத் துக காலத்து இறுதியான நூல்கள் இவாகளுடைய இலக கணஙகளே என்று சொல்லலாம

தொல்காப்பியர் என்ற பெயரை உடையவர்கள மூவர் ஆவர். ஒருவர் விதாப்பநாட்டு அகத்தியருடைய

மாணுக்கர் விதாப்பநாட்டுத் திரணபிநது என்கிற தொல் காப்பியர் இரண்டாமவர் ஐந்திரம நிறைந்த தொல்காப் பியர் (தற்காலம இருககும தொல்காப்பிய நூலைச் செய்த வர்) மூன்ருமவர் யாரென்ருல், மூன்ரும நிலந்தருதிருவிற் பாண்டியன் காலததில் புரோகிதராய் இருநத அகத்தியர் II என்பவருடைய பன்னிரு மாணவரில் முதன் மாணுக கர் ஆவர் இதனை வாசிககும அன்பர்களை இவவாறு ஞாபகபபடுத்திககொள்ளக கேட்டுககொள்ளுகின்றேன் இப்படிப பிரித்து அறிந்துகொள்ளாவிட்டால் சந்தேகங் களை பல உண்டாம

இபபடி விதாப்பநாட்டு அகத்தியரும திரணபிந்து தொல்காப்பியரும் கபாட புரத்தில் தமிழ்ச்சங்கத்தில் இருக்குமபோது அகததியருக்குத தம் மனைவியையும் கூட்டிவந்து கபாடபுரததில் கொஞ்சநாள் வசிக்க வேண்டு மென்ற எண்ணம் உண்டாகி, தன் மாணுக்கன் திரணபிநது தொல்காபபியனை விளித்து, "நீ விதர்பபநாடு போய், உலோபா முத்திரையாகிய என் மனைவியை அழைத்து வருக" என்றனர் "எவ்வாறு அழைத்து வருவது?" என்று தொல்காப்பியர் கேட்க, "முன்ஞைகப பின்ஞைக நாற்கோல் நீளம அகல நின்று அழைத்து வருக" என்று அகத்தியர் கூற, அவ்வாறே தொல்காப்பியர் விதர்பபம் சென்று, உலோபா முத்திரையை அழைத்துக்கொண்டு வர, வைகையாற்றில் வெள்ளம் வந்து உலோபா முத்திரை யை அடித்துக் கொண்டுபோக, உடனே தொல்காப்பியர் தம் கையில் வைத்திருந்த மூங்கிற் கழியை நீட்டி, அவளைப பிடிக்கச செய்து, கரை ஏற்றி, கபாடபுரம் சென்று, அகத்தியரைக் கண்டு நடந்ததைக் கூற, அகத்தியர், "நீ என் கட்டளையை மீறி நடநததால் சொர்க்கம புகாது இருப்பாயாக" எனச் சபித்தார். தொல்காப்பியர் குற்றம்

ஒன்றும் செய்யாதிருக்க அகத்தியர் சபித்ததைப் பொறுக்கமாட்டாமல் "நீரும் சொர்க்கம் புகாது ஒழிவீராக" எனச் சபித்ததோடு, "உம்முடைய நூல் அகத்தியமும் இறந்து படுக" எனச் சபித்தார். அத்துடன் நில்லாமல் 'அகத்தியம்' என்ற நூலின் ஏட்டுச் சுவடிகளை எல்லாம் சுக்குநூறுகக் கிழித்துத் தண்பொருநை ஆற்றில் விட்டுவிட்டார். அகத்தியர் இதுகண்டு தொல்காப்பியன் செய்த இலக்கண நூலையும் கிழித்து ஆற்றில் விட்டு விட்டார ஆகவே, இருவர் நூலகளும் மறைந்து ஒழிந்தன.

இப்படி இருக்கும்போது, கி மு. 6000-ல் சீகாழிக்குப் பக்கத்தில் உள்ள தொல்காபபியக் குடி வாசியாகிய **ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்** என்பவர் தமிழ் வட்டெழுத்து முறையை மாற்றிச சதுர எழுததாகச் செய்து, தமிழ் மொழியி லுள்ள 51 எழுததுக்கள் அதிகப்படி என்று கண்டு அவைகளை 31 எழுத்துக்களாக்கி, அதற்குத் தக **தொல்காப்பியம்** என்ற இணையற்ற ஒரு நூலை யாத்து, மூன்றும் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அதங்கோட்டாசான் முன்னிலையிலும் இன்னும் மற்ற புலவர் பெருமக்கள் முன்னிலையிலும் அரங்கேற்றுப்படி செய்தார்.

அன்றுமுதல் பாண்டியனும் ஏனைய புலவர்களும் தொல்காப்பியமே கபாட புரத்துத் தமிழ்ச் சங்கததில் நூலாக இருக்க வேண்டுமென்றும், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் சங்கத் தலைவராக இருகக வேண்டுமென்றும் ஏற்பாடுகள் செய்து, அந்தப்படி தொல்காப்பியரைத் தலைவராகவும் தொல்காப்பிய நூலை இலக்கணமாகவும் கொண்டு தமிழ்ச் சங்கத்தை நடத்தி வந்தார்கள்.

இம்மாதிரி தமிழ்மொழியில் ஒரு மாறுதல் ஏற்பட்ட உடனே, விதர்ப்பநாட்டு அகத்தியர் தன் மனைவி உலோபா முத்திரையோடும், திரணபிந்து தொல்காப்பியரோடும் நாக நாட்டுக்குச் சென்றுவிட்டார் நாக நாடு என்பது யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள மணிபல்லவம் முதலிய தீவுகளாகும்.

நாகநாட்டில் இருந்தபோது திரணபிந்து தொல் காப்பியர் என்பவர் பெய்வளை என்ற நாக நாட்டுப் பெண்ணை மணந்துகொண்டார். அவர்களுக்கு இலிவளை என்ற பெண்ணும், விசாலன், சூனியபிந்து, தாம்பிரபிந்து என்ற குமாரர்களும் பிறந்தனர்.

கொஞ்சநாட்களுக்கெல்லாம் அங்கிருந்து புறப்பட்டு, விதர்ப்ப அகத்தியரும் திரணபிந்து தொல்காப்பியரும் மலாயா, சுமாத்திரா - ஜாவா முதலிய இடங்களுக்குச் சென்றனர். சென்ற இடங்களில் எல்லாம் குருகுலம் அமைத்துப் பல மாணவர்களுக்குத் தமிழ் மொழியைப் போதித்து வந்தார்கள். இவ்விருவர்களையும் நாகநாடு சாவகநாடு முதலிய இடங்களில் எல்லாம் தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வந்தார்கள். 'பகவான் அகத்தியர்' 'பகவான் திரணபிந்து' என்று பொறித்துள்ள கற்சிலைகள் சாவகத்தில் பல இடங்களில் உள்ளன. நாகநாட்டிலும் இவ்விருவர்க்கும் படிமங்கள் உண்டு. இவர்கள் இருவருக்கும் சாவக நாட்டில் கோவில் எடுத்து, பகவான் அவதாரமாகக் கருதி வழிபட்டு வருகிறார்கள் என்று சாவக நாட்டுச் சரித்திரம் கூறுகிறது.

## இராமாயண காலத்துக்
## கரு. கோசலநாட்டு அகத்தியர் (ஆரியர்)
(காலம் — 6000 B. C.)

வால்மீகி இராமாயணத்தில் 2—43-ல் —


"வடக்கே கோசலநாட்டின்கண் ஓடும் வேதசுருதி என்னும் ஆற்றங்கரையை அடுத்த ஓர் இடத்தில் ஓர் அகத்தியர் ஆசிரமம் அமைத்துக்கொண்டு தவம் செய்து வருகின்றார்" என்று கூறப்பட்டுள்ளது என்று '**மாணிக்க வாசகர் காலம்**' பக்கம் **240**-ல் குறிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த அகத்தியர் தமிழர் அல்லர்; தமிழ் நாட்டுக்கு வந்தவர் அல்லர். இவரும் இவர் போன்ற பல இருடிகளும் இந்தியாவின் பல இடங்களில் ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு, ஆரிய அரசனாகிய தசரதனுடைய உதவிபெற்று, ஆங்கிலப் பாதிரிகள் (Missionaries) போல, ஆரிய மதத்தைப் பரப்பிவந்ததோடு தமிழ் நாட்டவர்களை ஆரிய மதத்தில் சேர்த்தும் வந்தனர்.

கோசல நாட்டில் தவம் செய்த **சம்புகனை** இராமர் கொன்றவுடன் இவ்வகத்தியரை அவருடைய ஆசிரமத்தில் சந்தித்து இராமர் பேசினதாக வான்மீகி இராமாயணம் கூறும். ஒரு குற்றமும் செய்யாத சம்புகன் என்பவனைத் தசரதராமர் யாதொரு காரணமுமில்லாமல் கொன்று விட்ட செய்தி இவ்வகத்தியருக்குத் தெரிந்திருந்தும் இராமரைத் தெருட்டாமல் விட்டது ஒன்றே இவர் தமிழர் அல்லர்; ஆரியர் என்பதை உறுதிப்படுத்துகிறது.

குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் காரியின் புதல்வர்கள் இருவரை யானைக்காலில் இடறச் செய்ய உத்திரவிட்டது தெரிந்த கோவூர்கிழார் என்னும் புலவர் அரசனைத் தெருட்டி அக்கொலை நிகழாவண்ணம் தடுத்தார் என்பதை நோக்க, ஆரியர் மனப்பான்மையும் தமிழர் மனப்பான்மையும் விளங்கும்.

## I. இயக்கர் குடிவழிப்பட்டி (வான்மீகிப்படி)




N. B :—இயக்கர்—தானவர்—அரக்கர்—இராக்ஷசர்—நிசாசரர்—என்றவர் எல்லாம் தற்காலம் சிவப்பு இந்தியர் (Red Indians) ஆவர்.

## II. இயக்கர் குடிவழிப்பட்டி (வான்மீகிப்படி)

இராவணன்
= மண்டோதரி

இந்திரஜித் அதிகாயன் அக்கன் திரிசிரசு நராந்தகன் தேவாந்தகன்
என
இராவணி

## III. கும்பகர்ணன் = வச்சிரசுவாலை

கும்பனி நிகும்பன்

## IV. காமவல்லி என சூர்ப்பனகை

= விதுசிஙகன் என வித்தியக்ஷன்
என காலகேயன்

சம்பத் குமாரன்

## V. மயன் (King of Yamapuram in Peruvala Nadu Architect)

மண்டோதரி மயூரன் துந்துபி
= இராவணன்

## VI. ஜம்பன்

சுந்தன் உபசுந்தன்
= தாடகை
சுபாகு
மாரீசன் (பொன் மான் ஆனவன்)

## VII. ஜாவா

= சதஹிருதி

விராதன் (துப்புருகந்தருவன்)
Cursed by Kubera

## VIII. இயக்க சுகேது

தாடகை
= சுந்தன்

## கசு. பஞ்சவடி அகத்தியர் (ஆரியர்)
(காலம்—6000 B. C.)

விந்தியமலைக்குத் தென்பால் பஞ்சவடியை (Nasik) அடுத்து இருந்தது அகத்தியர் ஆசிரமம் என்று வான்மீகி இராமாயணம் கூறுகின்றது. பஞ்சவடி என்றால் ஐந்து ஆலமரங்கள் சேர்ந்து உள்ள இடம் என்பது பொருள்.

இவ்வகத்தியர் ஆரியா வர்த்தத்தில் இருந்த ஒரு ஆரியர். இவருடைய அண்ணன் சுதர்சனர் என்ற சுதீட்சணர். சுதீட்சணரும் தண்டகவனத்தில் ஒரு இடத்தில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு தவம் செய்துவந்தார்.

இராமாயண காலத்தில விந்தியமலைக்கும் துங்கபத்திரை ஆற்றுக்கும் இடைப்பட்ட நாட்டை இராவணனுடைய தங்கை காமவல்லி (சூர்ப்பனகை) ஆண்டுவந்தாள். (Vide இராமாயணம் ஆரணிய—11—42.) விந்திய மலைக்கும் கங்கையாற்றுக்கும இடைப்பட்ட நாடு தாடகையால் ஆளப்பட்டு வந்தது. தாடகை என்பவள் இயக்க சுகேதுவின் மகள், சுந்தாவின் மனைவி; மாரீசனுடைய தாயார். இவர்களுடைய சரித்திரத்தை நன்றாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டு இயக்கர்களுடைய குடிவழிப்பட்டி ஒன்று இத்துடன் இணைத்துள்ளேன்.

தசரதர் தாடகை நாட்டில் விசுவாமித்திரரையும், காமவல்லி (சூர்ப்பனகை) நாட்டில் அகத்தியரையும் தம முடைய அரசியல் தூதுவராக (Ambassadrs) நியமித்திருந்தார்.

இவ் வகத்தியரைப்பற்றி வான்மீகி — ஆரணிய — 12-வது சருக்கம் 16 to 21 சுலோகம கூறுவதாவது:—

“அவன் (இலக்குமணன்) அங்கு (பஞ்சவடியில்) பூசை அறையில் பிரமன் தானத்தையும், அக்கினியின்

தானத்தையும், விண்டுவின் தானத்தையும், தர்மதேவதையின் தானத்தையும பார்த்தான்'' என்று காணப்படுகிறது. இதில் சிவபெருமான் தானத்தை அவன் பார்த்ததாகக் கூறபபடவில்லை. ஆகையால், சிவபூசை அந்த அகத்தியருக்கு இல்லையென்று சந்தேகிகக இடமிருக்கிறது.

இவ்வகததியர் சைவ உணவினருமல்லல. என்னெனின், இவர் இராம இலக்குமணா முதலியோருக்கு விருந்து செய்தபோது, மான்—பன்றி இறைச்சிகளை வழங்கினதாக வான்மீகம கூறுகிறது. மேலும, இவர் இராமருடன் பேசிக்கொண்டு இருககுமபோது தமிழர்களுடையபோர் முறைகள் - தமிழருடைய ஆயுதவகைகள் - அவைகளை உபயோகிககும் முறை முதலியவைகளைப்பற்றி எல்லாம கூறிவிட்டு, பூமியில் புதைத்து வைத்திருந்த மாதிரி ஆயுதங்களை எடுத்துவரச் சொல்லி இராமருக்கு அளித்துள்ளார். இதனுல் இவர் ஆரிய அரசனின் தூதுவராக இருந்து, அபபோதைக்கபபோது தமிழ்நாட்டு உளவுகளை தசரதருக்குத் தெரிவிதது வந்தார் என்று அறியக்கிடக்கின்றது.

இராம இராவணப் போருக்கு இவ்வகத்தியரே மூல காரணம் என்பது வான்மீகத்தால் வெளியாகிறது. தாடகையின் கணவன் சுந்தாவுடன் இவ்வகத்தியர் முதன் முதல் சண்டை தொடுத்து, சுந்தாவையும் அவன் தம்பி உபசுந்தாவையும் கொன்ருர். ஆதலின், தாடகை தன் கணவனைக்கொன்ற அகத்தியரைப் பழிக்குப் பழிவாங்க எண்ணி, தன் மகன் மாரிசன்-தன் கொழுந்தன் உபசுந்தன் மகன் சுபாகு இவாகளைப் படைகளுடன் அனுப்பி அகத்தியருடன் போர்தொடுத்தாள். இச்செய்திகளை அகத்தியர் தசரதருக்கு ஆள்மூலம சொல்லி அனுப்பினுர். விசுவாமித்திரன் இதனை அறிந்து, நேராகவே அயோத்திசென்று,

தசரதரிடமும் வசிட்டரிடமும் கூறி, இராம இலக்குவர்களைப் பெற்று, அவர்களைக்கொண்டு, தாடகையைக் கொன்ருர். பின்பு, மாரீசனேயும், சுபாகுவையும் தேடிச் செல்ல, மாரீசன் தப்பித்து இலங்கை சென்ருன். சுபாகு இறந்துபட்டான்.

இந்தப் போருக்கு அப்புறம்தான் சீதா கல்யாணமும், இராமருக்குப் பட்டாபிடேக முயற்சியும், இராமர் வனம் சென்றதும், தசரதர் இறந்ததும், சித்திரகூடத்தில் தங்கினதும், பரதன் சித்திரகூடத்துக்கு வந்து போனபின் பஞ்சவடி வந்து சேர்ந்ததும் முதலியன நிகழ்ந்தன. பஞ்சவடியில் இருக்கும்போதுதான் காமவல்லி (சூர்ப்பனகை)யுடன் போர்தொடுத்து, அவளுடைய சேனுதிபதிகளேயும் சேனைகளையும் கொன்று, காமவல்லியை இலக்குமணரால் அங்க பங்கப்படுத்தி, இராமர் வெற்றியுடன் வீற்றிருந்தார். காமவல்லி இலங்கை சென்று இராவணனிடம் கூற, இராவணன் பஞ்சவடி சென்று, சீதையைக் கவர்ந்துசெல்ல, பிறகு இராம இராவணப்போர் ஆரம்பமாயிற்று. ஆதலின், இப்போருக்கு இவ்வகத்தியரே மூல காரணர் என்பது வெள்ளிடைமலே.

திவான் பகதூர் C N. மேதா (Mahta) (Narayan Niketan—Nadiad, Bombay) என்பவர் "அநுமான் கடல் கடந்தது" (The Flight of Hanuman) என்ற தாம் எழுதிய நூலில் கூறியதாவது:—

"இராமாயண காலத்தில் சுமாத்திரா, ஜாவா முதலிய தீவுகளுக்கு சுந்தா தீவுகள் என்று பெயர். (Sunda Islands) ஆதலின், சுந்தன் என்னும் அரக்கனுட்சியில் இருந்தது. ஜாவா என்னும் தீவும் ஜாவா என்னும் அரக்கனல் ஆளப்பட்டு வந்தது.

"அந்தமான்—நிக்கொபாா முதலிய கிழக்கு இந்தியத தீவுகளும், ஆஸ்திரேலியாவும இராவணனுடைய ஆட்சிக்கு உட்பட்டு, அவனுடைய உறவின்முறையாரான அரக்கர் களால் ஆளப்பட்டு வநதது" என்று வான்மீகி இராமாயண சுலோகங்களால் விளக்கிக் காட்டியுள்ளார்.

இராம இராவணப போருக்கு அபபுறம அரக்கர்கள் எல்லாம அழிந்துபடவே, ஆரியர்கள் அத்தீவுகளி லெல்லாம குடியேறி ஆரிய மதத்தையும, ஆரிய இலக் கியங்களையும பரவச்செய்தார்கள் என்பது அந்தந்தத் தீவு களில் வழங்கப்படும இலக்கியங்களால் அறிகிறோம.

இராமாயண காலத்து

## கஎ. மலையமலை அகத்தியர் — (ஒளியர்)

(காலம் = 6000 B. C.)

இவ்வகத்தியா ஒளிநாட்டு வேளாளர் வகுப்பைச சேர்ந்தவர். இவர் இராமாயண காலத்தில பொதியமலை யில் இருநத தமிழ்ச சங்கததில் தலைமை வகித்தவர். திரிபுராதிகள் காலத்தில் பொதிய மலையில் ஏற்படுத்தப் பட்ட தமிழ்ச சங்கத்தில் தலைமை வகித்த அகத்தியருடைய மாணுக்கர் பரம்பரையில் வந்தவர்.

வான்மீகி இராமாயணக் கிட்கிநதா காண்டததில் தென்கடலோரததில் மலய பருவதத்தில் அகத்தியர் தவச் சாலை ஒன்று இருநததாகக் கூறப்பட்டுள்ளது. (கிட். — 15-16). அதன் மொழிபெயர்பபு —" அநத மலையமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியை யுடைய முனி சிரேட்டரான அகத்தியரைக் காண்பீர்கள்" என்பதே.

பஞ்சவடி அகத்தியா வேறு, மலையமலை அகததியர் வேறு.

மாணிக்கவாசகர் காலம் பக்கம் 240—1-ல் "வான்மீகி இராமாயணம் அகத்தியர் இருப்பினை நிகழ்காலத்தின் கண் வைத்து உரைப்பதோடு ஒன்றற்கொன்று பெரிதும் சேய்த்தாயும் உள்ள அகத்தியர் இருப்பிடங்கள் பலவற்றை எடுத்து ஓதுதலின், அகத்தியர் பெயர்பெற்ற பலர் இவ் விந்திய நாடெங்கணும் இலங்கையிலும் அக்காலத்து இருந்தனர் என்பது பெற்றும்." என்று குறிக்கப்பட்டுள்ளது காண்க.

உதாரணமாக — கோசலநாட்டு அகத்தியர், பஞ்சவடி அகத்தியர், மலயமலை அகத்தியர், இலங்கையில் குஞ்சரகிரி அகத்தியர் முதலியோரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது காண்க.

இவ்வகத்தியா இராமாயண காலத்தில் பொதியமலைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தலைமை வகித்தார். இதனைக் குறித்துக் கமபன்:—"தென் தமிழ் நாட்டகன் பொதியில், திருமுனிவன் தமிழச்சஙகம் சேர்கிற்பிரேல், என்று மவன் உறைவிடமாம் ஆதலினுல் அம்மலையை இடத்திட்டேகி" என்று கூறியுள்ளார்.

முபபுர நிருதா காலததில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச் சங்கம், சூரபன்மன் காலத்திலும், அரக்கா காலத்திலும், இராமாயண காலத்திலும, பாரத காலத்திலும், அதற்குப் பின்னும் நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. இவ்வகத்தியரைப்பற்றிக் காஞ்சிப் புராணததில் சிவஞான முனிவரும் கூறுகின்ருர்.

கமபர் இவரைப்பற்றித் தம் நூலுள்,

"என்றுமுள தென்றமிழ் இயமபி இசை கொண்டான்"

என்றும்.

"உழக்குமறை நாலினும் உயர்ந்துலக மேத்தும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்"
(கம்ப. ஆரணி. அகத்தி. 41)

என்றும் கூறியுள்ளார்.

நான்மறையினும், உலகவழக்கினும், கவின்பெற நூலினும் முறைப்பட ஆராய்ந்து, கடவுள் தந்த தமிழ் தந்தான் என்றதால், நான்மறை வழங்கும் நாடு தமிழ் நாடு என்றும, உலக வழக்கு என்றது தமிழ் நாட்டு வழக்கு என்றும், நூலினும் என்றதால் செய்யுள் வழக்கு என்றும அறிந்தாம்.

வடமொழிக்கு வேதங்கள் மூன்றே. "வேதம் திரயீ" என்ற வழக்கால் அறியலாம் ஆரியர்கள் முதன் முதல் சிந்துநதி தீரத்தில் குடியேறின காலத்தில் வேதம ஒன்றுதான் இருந்தது. பிறகு அவாகள கங்கை பாயும நாட்டைக் கைவசப்படுத்திக்கொண்டு ஆரியாவர்த்தத்தை நிலைநாட்டிய பின், பாரத காலத்தில் **வியாசர்** என்பவா ஒன்ருய் இருந்த வேதத்தை இருக்கு, **யசுர்**, **சாமம்** என்ற பெயரால மூன்ருகச் செய்தார் அதர்வண வேதம் என்று சொல்லபபடுகிற நான்காவது வேதம தனியே இல்லை; ஏனைய வேதங்களுடன், சோந்துள்ளது என்பர் ஆனல், இபபோது அதர்வண மநதிரங்களை ஒரு வேதமாகக் கொண்டு தமிழ் நான்மறைகளோடு எண்ணிக்கையை ஒற்றுமைபபடுத்திக் கூறுகிருர்களே யொழிய வேறின்று

**தமிழ் நான்மறைகளாவன**.—அறம், பொருள், இன்பம், **வீடு** என்ற நாற் பொருள்களைப்பற்றிக் கூறும தனித் தனியான நான்கு வேதங்கள் என்று அப்பா சமபந்தா வாக்குகளால் அறிகிருேம்.

**தயித்திரியம், சாமம், தலவதிகாரம், பவுடியம்** என நான்கு வேதங்கள் என்று நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையில் கூறுவர்.

ஐந்திணைகளுக்குரிய கருப்பொருள்களைப் பற்றியும், மொழிக்கு முதற் காரணமாகிய எழுதலைப்பற்றியும் கூறும் நூல்களும் இந்நான்மறையுள் அடங்கும்.

**உலகவழக்கின், ஆராய்ந்தன** .—இயற்சொல், திரிசொல், செந்தமிழ், கொடுந்தமிழ், மங்கலம், குழூஉக்குறி, இடக்கரடக்கல் முதலியன.

**மதிக்கவியின் நாடியன** :—(மதிக்கவி = நூல்) தமிழ் நாட்டில் தொன்று தொட்டுக் கேள்வியால் வந்த அம்மனை, ஊசல், தாலாட்டு, குன்றக் குரவை, ஆய்ச்சியர் குரவை, வள்ளைப்பாட்டு, உழத்தியர் பாட்டு, குறத்தியர் பாட்டு, வெறியாட்டுப் பாட்டு முதலியன

"அழுகையும் தொழுகையும் அசதியாடலும்
ஏத்தும் இழிப்பும் இரத்தலும் எல்லாம்
பாட்டாய் வரல்இந் நாட்டின வழக்கே"
ஏற்றப் பாட்டும், இறவைப் பாட்டும்,
காவடிப் பாட்டும், கப்பற் பாட்டும்,
படையி னெழுச்சியும், பள்ள எழுச்சியும்,
சிந்தமும், சந்தமும், திருத்தாலாட்டும்,
கல்லுளிப் பாட்டும், கவண்எறிப்பாட்டும்,
பாவைப் பாட்டும், பலகறைப் பாட்டும்,
மறத்தியர் பாட்டும், குறத்தியர் பாட்டும்,
பள்ளுப் பாட்டும், பலகடைத் திறப்பும்,
வள்ளைப் பாட்டும், பிள்ளைப் பாட்டும்,
கறத்தற் காயர் திறத்துரை பாட்டும்,
பொருத வேந்தர் விருதுப் பாட்டும்,
கணலைப் பாட்டும், காதற் பாட்டும்"
.......................................

(தமிழ்மொழி வரலாறு, பக்கம் 83, by. R. R.)

இவ்விதமாகப் பொதியமலைத் தமிழ்ச்சங்கத்தில் அகத்தியர் தலைவராக இருந்து ஆராய்ந்ததாகக் கம்பர் கூறுகிறார்.

**மறைத்தமிழ - வழக்குத்தமிழ் - செய்யுட்டமிழ்** என மூன்றையும் ஆராய்ந்ததாகக் கூறியதையே, தொல்காப்பியப் பாயிரத்தில் பனம்பாரனர் "**தமிழ்கூறு நல்லுலகத்து, வழக்கும் செய்யுளு மாயிரு முதலின்**" என்று கூறி ஆமோதிக்கிறார்.

முத்தமிழ்களும் இவைகளாயிருக்கப் பிற்காலத்தில் இயல், இசை, நாடகம் என்பவைகள்தான் முததமிழ்கள் என வழக்குக்கு வநதுவிட்டன

**மறைத்தமிழ்** என்பது மறைபொருட் கூற்றையுடைய செய்யுட்கள் அவையாவன .—

"வழுதலை விததிடப் பாகன முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசனி பூததது
தொழுதுகொண டோடினர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுததது வாழைக் கனியே"

"கூகை குருந்தம தேறிக் குணம்பயில்
மோகம் உலகுக குணாகின்ற காலதது
நாகமும் ஒன்று நடுவுரை செயதிடும்
பாகனு மாகினற பணபனு மாமே"

என்ற திருமூலர் செய்யுட்களாம்

இனி, இவ்வகத்தியர் இசையிலும், யாழ் - வீணை முதலிய வாத்தியங்களை வாசிபபதிலும் தேர்ச்சி பெற்றவர் எனத் தெரிகிறது

**"மன்னும் அகத்தியன் யாழ் வாசிப்ப"**

என்ற திருக்கயிலாய ஞான உலாவாலும்;

"**இனிய பைந்தமிழின் பொதியமால் வரைமேல்
இசைக்கு உருகாது**"

என்ற சோணசைல மாலையாலும்;

"இராவணனைப் பிணிக்கக் குறுமுனி பாடும்
இசைக்கு உருகிய பொதியின்மலை"

என்ற தஞ்சைவாணன் கோவை உரையாலும்;

"அன்னு ளிருப்ப அவள்பாங்கி சென்றுமலை
முன்னாள் உருக்கும் முனிநிகர்வை"

என்ற திருவெங்கை உலாவாலும் அறியலாம்.

இவ்வகத்தியர்தான் இராவணனைக் கந்தருவத்தாற பிணித்தது. அவ்வரலாறு வருமாறு:—

"இராவணன் காலததிலும் சேர - சோழ - பாண்டிய - எருமை நாடுகள் சுய ஆட்சியோடுதான் இருந்தன. எருமைநாடு (Mysore) வாலி - சுக்கிரீவர்களுடையது. இராவணனுடைய பராக்கிரமம் எருமை நாட்டுக்கு வடக்கே கங்கைநதி வரையுள்ள நாடுகளில் பரவி இருந்தபோதிலும், சேர - சோழ - பாண்டிய நாடுகளும் எருமை நாடும் இராவணனுக்கு உட்படவில்லை. இராவணன் வாலியால் தோற்கடிக்கப்பட்டது இராமாயணத்தால் அறியலாம. இராவணன் கயிலாயத்தை (திரிகோணமலை - தககண கயிலாயமலை) பெயர்க்க முயன்றபோது சிவபெருமானால் தண்டிக்கப்பட்டு, சாமகானம்பாடி அவரை மகிழ்வித்த பின், அவரிடம் இருந்து நாளும் - வாளும் பெற்று வாழ்ந்து வந்தான். இராவணன் மறுபடியும பாண்டியநாட்டைக் கைப்பற்ற எண்ணி, சேனைகளுடன் புறப்பட்டு பாண்டிய நாடு சென்று, அங்கு ஆட்சி புரிந்துவந்த மூன்றும் நிலந தரு திருவிற் பாண்டியன் என்கிற அனந்தகுண பாண்டியனைக் கப்பங்கட்டும்படி செய்தான். அனந்தகுண பாண்டியன் அகத்தியரிடம் முறையிட்டான். பொதியத்தையும் அதைச் சேர்ந்த நாடுகளையும அகத்தியரிடம இருந்து

கைப்பற்ற எண்ணி, இராவணன் பொதிகை சென்று, "என் உத்தரவின்றி ஈண்டு எவ்வாறு நீர் தங்கி இருக்கலாம்" என்ன, அதற்கு அகத்தியர், "என் கட்டளையின்றி என் ஆசிரம எல்லைக்குள் எப்படி வரலாம்?" என்று கூற, "படைக்கும் பிரமனும் என்னோடு இப்படிப் பேசானே; யான் யார் என்று தெரியுமா?" என்றான். அதற்கு அகத்தியர், "தெரியும்; சாமகானம் செய்து சாமியையும் வசப்படுத்தி நாளும் - வாளும் பெற்றதாகத் தெரிந்தேன்" என்றார் இவர் பெரியராய் இருக்கவேண்டுமென்று தெரிந்து இராவணன், அகத்தியரிடம் நட்புக்கொள்ள, அகத்தியர் சாமகானத்தைப் பாடும்படி கேட்க, இராவணன் தன் வீணையை எடுத்துப் பாடினான். பின் அகத்தியரும் தம் யாழ்தழீஇப் பாடினார். விலங்கு, பறவை, ஊர்வன எல்லாம் அப்படியே தமபித்து நின்றன. மரங்கள் அசையவில்லை இராவணனுடைய வீணை வைக்கப்பட்டிருந்த பாறை உருக, வீணை அதில் பாதி அமிழ்ந்துவிட்டது. இசை நின்றதும இராவணன் வீணையை எடுக்க எடுகக முடியாமறபோக, அவன் அகத்தியரைப் பணிநது வேண்டினான். தன் சொற்படி நடபபதாக அவனிடத்தில் வாக்குறுதி பெற்றுப் பின் அவர் ஆகிரி இராகத்தைப்பாட, பாறை உருக, வீணையை எடுததுகொடுத்து, இனிப் பாண்டியநாட்டுப பக்கம வரககூடாது என்ற வாக்குறுதி பெற்றார். அன்று முதல் பாண்டியநாடு சுவாதீனம் பெற்றது." இந்தச் சரித்திரத்தைத்தான் அகத்தியா இராவணனைக கந்தருவத்தால் பிணிததாா என்பர். இதனை.—

"தென்னவற் பெயரிய துன்னரும் துப்பில்
தொன்முது கடவுட் பின்னா மேய
வரைத்தாழ் அருவிப் பொருப்பிற் பொருந"

(மதுரைக்காஞ்சி, 40 to 42)

என்னும் மதுரைக்காஞ்சி அடிகளுக்கு நச்சினார்க்கினியர், "இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழைமை முதிர்ந்த அகத்தியன்" என்றும,

"அவர் (அகத்தியர்) பொதியின்கண் இருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு (பாண்டிநாட்டில்) இயங்காமை விலக்கி"

என்று தொல்காப்பியப் பாயிர உரையிலும் கூறலானார்.

ஆனால், திரு R. இராகவையங்கார் அவர்கள் தம் முடைய "தமிழ் வரலாற்றில்" பக்கம் 79-ல் .—

"அகத்தியர் கந்தருவத்தாற் பிணித்தார் என்பது, இசையாற் பிணித்தார் என்றவாறாம். தீங்கு இழைக்கும் தீய உள்ளத்தானாகிய இராவணன், அகத்தியர் முன்போந்து ஒரு கற்பாறையில் தங்கியபோது, அகத்தியர் அக்கல் உருகும்படி பாடி அதனைக் குழைவித்து, அக்குழைந்த கற் சேற்றிலே அவன் உடற்பொறை அமிழும்படி செய்த அளவில், தம் இசையை நிறுத்த, கற்பாறை இறுகி அவன் பிணிப்புண்டானாக, பின் அகத்தியரை இரந்து மீண்டும் கல்லுருகப் பாடப்பெற்று, உருகிய நிலையிலே புறம் போந்து, அகத்தியரை வணங்கிப் போயினன்" என்பர். இதனை வாசிப்போர் எதைக் கொள்ளினும் கொள்க. இரண்டிலும் சில மாறுபாடுகள் உள்ளன. ஆனால், சாராம்சம் என்னவென்றால், இராவணன் அகத்தியரால் இசை வாதில் தோல்வியடைந்தான் என்பதும், அத்தோல்விக்கு அறிகுறியாகத்தான் அன்றுமுதல் பாண்டியநாட்டுப் பக்கம் வருவதில்லையென்று வாக்குக்கொடுத்தான் என்றும் அறிகிறோம்.

இதுகாறும் கூறியவாற்றால், இராமாயண காலத்தில் பொதியமலையில் இருந்த அகத்தியர் ஆதித்தனைப்போன்ற ஒளியையுடைய தேகத்தையுடையவர் என்றும், தவவலிமை உடையவர் என்றும, இயல் இசை நாடகம என்ற முத்தமிழிலும இணையற்றவராய் இருந்தாா என்றும, சாம கானம்பாடி சிவபெருமானையே மகிழும்படி செய்த இராவணனை இசையால் வென்ற வன்மை உடையவர் என்றும் அறிநதாம.

## இராமாயண காலத்துக்
## கரு. குஞ்சரகிரி அகத்தியர் I (ஆரியர்)
### (காலம—6000 B. C.)

இலங்கைத் தீவின் தென்பாகத்தில் குஞ்சரமலையில் ஒரு அகத்தியர் ஆசிரமம் அமைத்துககொண்டு தவம் செய்து வந்ததாக இராமாயணம் கூறுகிறது.

தசரதனுடைய ஆணைபெற்று, ஆரிய மதத்தை ஈழ நாட்டில் பரப்புதறகாகவும், இராவணனுடைய அரசியல் நுட்பங்களை அவ்வப்போது தசரதனுக்குத் தெரியப் படுத்தவும குஞ்சரமலையில் வதிந்துவந்தார். இலங்கை முதலிய தீவுகள் நாகநாடு ஆனதால் நாகர்களில் பலபேர் இவ்வகத்தியருககு மாணவராக ஏற்பட்டார்கள். அம மாணவர்களை எல்லாம் ஆரிய மதத்தைத் தழுவும்படி செய்தார். இவருக்கு உண்மையான பெயர் வேறொன்றாக இருக்கலாம். இராவணனுக்குப் பொதியமலை அகத்தியரிடம பயபக்தி இருப்பதால், அவருடைய பெயரையே இவரும வைத்துக்கொண்டார். அவ்வகத்தியப் பெயரை வைத்துக் கொண்டு இயக்கர் நாட்டில் பெரிய காரியங்களைச சாதித்து உள்ளார். இராவணனுடைய நாடாகிய இலங்கையில்

இவர் தசரதனுடைய தூதுவராகவும் (Ambassadar) இருந்தார் என்று தெரிகிறது.

இராம இராவணப்போர் ஆரம்பமாவதற்கு முன்னேயே விபீஷணனையும், மாலியின் புதல்வரான நீலன், அனலன், அரன், சம்பாபதி என்பவர்களையும் அகத்தியர் இராவணனுக்கு விரோதமாகவும், ஆரிய அரசனுக்குச் சாரபாகவும் பக்குவப்படுத்தி வைத்திருந்தார். அநுமான் இலங்கை சென்று திரும்பினதும், விபீஷணனும், நீலன் முதலிய நால்வரும் இராவணனைவிட்டு விலகி, தசரதராமர்பக்கம் சேர்ந்துகொண்டார்கள். இராவணன் இறந்தபின் விபீஷணன் பட்டமெய்தி இவ்வகத்தியருடைய ஆசிரமத்தைப் பலப்படுத்தினான். அதனால், இவ்வாசிரமம இராமாயண காலம்தொட்டுப் பாரத காலத்திலும், அதனை அடுத்தும தொடர்ந்து நடைபெற்று வநததாக இலக்கியங்களால் அறிகிறோம். குஞ்சரமலை என்பது தற்காலம் என்ன பெயரால் வழங்கப்படுகிறதோ தெரியவில்லை. இப்போது யானைகள் இருக்கும் மலைகளைப் பார்த்தால் அறியலாம.

## அனந்தகுண பாண்டியன் என்கிற மூன்றும்<br>நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்து<br>கஅ. புரோகித அகத்தியர் II (தமிழர்)<br>(காலம்—6000 B. C.)

தண்பொருநை ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த **கபாடபுரத்தை** அரச இருக்கையாக்கி அதில் இடைச்சங்கம் என்ற பெயரைப பெற்ற தமிழ்ச்சங்கத்தை நிலைநாட்டினவன் **வெண்டேர்ச்செழியன்** என்னும் பாண்டியன் ஆவான். இச்சங்கம் ஆரம்பித்தபோது தமிழுக்கு வட்டெழுத்துக்காலம். 805 ஆண்டுகள் இச்சங்கம் வட்டெழுத்துக்களாலேயே நடைபெற்றது

இடைச்சங்கம் கி மு. 6805-ல் ஆரம்பிக்கப்பட்டது. கி. மு. 6000-ல் அனந்தகுண பாண்டியன் என்கிற மூன்றும் நிலந்தருதிருவிற் பாண்டியன் கபாடபுரத்தில் அரசாண்டான். அவனுக்குப் புரோகிதராய் இருந்தவர் இவ்வகத்தியர். இவர் பாண்டியனுடைய ஐம்பெருங் குழுவிலும எண்பேர் ஆயத்திலும் அங்கத்தினராக இருந்தார். இவருக்குக் கபாடபுரமே இருப்பிடம. இவர் காலத்தில் மலையமலையில் ஒளியர் குடியைச் சேர்ந்த அகத்தியர் ஒருவர் இருந்தார் என்று முன்னல் கூறியிருக்கின்றும்.

இவ்வகத்தியரும் தமிழில் வல்லுநராக இருந்தார். இடைச்சங்கத்தில் தலைமையும் பெற்றிருந்தார். இவருடைய மாணவர்கள் பன்னிருவர் :—

| | |
|---|---|
| (1) தொல்காப்பியன் | (7) பனம்பாரன் |
| (2) அதங்கோட்டாசான் | (8) கழாரம்பன் |
| (3) துராலிங்கன் | (9) அவிநயன் |
| (4) செம்பூட்சேய் | (10) பெரியகாக்கைபாடினி |
| (5) வையாபிகன் | (11) நத்தத்தன் |
| (6) வாய்ப்பியன் | (12) வாமனன் (சிகண்டி) |

இப்பன்னிரு புலவர்களும் தம்முடைய குரு புரோகித அகத்தியர் II செய்த "அகத்தியம்" என்ற இலக்கணநூலை நன்குணர்ந்து, "பாட்டியல்" என்ற பன்னிரண்டு நூல்கள் செய்தனர். அப்பன்னிரண்டு நூல்களிலிருந்தும் ஒவ்வோர் படலமாக எடுத்துப் "பன்னிரு படலம்" என்ற நூலைப் பிற்காலத்தார் தொகுத்துள்ளனர். இப்பன்னிரு புலவர்களும் இடைச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். இதனை :—

“மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்”

(புறப்பொருள்)

என்ற அடிகளால் அறியலாம். இப்புரோகித அகத்தியரை “தென்மலை இருந்த சீரசால் முனிவரன்” என்றது, இவர் பொதியமலைத் தமிழ்ச் சங்கத்தில் படித்துத் தேறியதால் என்க.

இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால், விதர்பநாட்டு உலோபாமுத்திரை அகத்தியருடைய மாணக்கா திரண தூமாக்கினி என்ற தொல்காப்பியன் வேறு என்றும, புரோகித அகத்தியர் II உடைய மாணவர் பன்னிருவருள் தொல்காப்பியன் என்ற மாணவர் வேறு என்றும அறிந்துகொள்வதே ஆகும். இதனை :—

“வீங்கு கடலுடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாமகா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென
வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்
ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணாந்து
நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்”

(பன்னிரு படலம்)

என்ற பன்னிரு படலத்தால் அறியலாம்.

இனி, இவ்விரண்டு தொல்காப்பியர்களைத் தவிர்த்து, மூன்றுவது தொல்காப்பியர் ஒருவா சீகாழிக்குப் பக்கத்தி லுள்ள தொல்காப்பியக்குடி என்னும் ஊரில் பிறந்தவர்

இவர் முதுகுடுமிப் பெருவழுதி தமிழ்ச் சங்கத்தில் யாக்கப்பட்ட, இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திரம் என்னும் தமிழ் இலக்கண நூலை நன்கு கற்று, அதன் வழித்தாக "தொல்காப்பியம்" என்ற நூலை யாத்தார். இந்தத்தொல்காப்பியர் தவம் கைவந்தவர். தமிழ் மொழியைச் சீர்ப்படுத்த எண்ணி, வட்டெழுத்துக் காலத்தில் உள்ள 51 எழுத்துக்களைக் குறுக்கி 31 எழுத்துக்களாக்கி, வட்டெழுத்து வடிவங்களையெல்லாம் சதுர எழுத்து வடிவங்களாக மாற்றி, வேண்டும் மாறுதல்களைச் செய்து இப்போது நம் கையில் இருக்கும் தொல்காப்பிய நூலை இயற்றினார். இதனை :—

"மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி
பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

என்ற பனம்பாரனார் கொடுத்த தொல்காப்பியப் பாயிரத்தால் அறியலாம். இவர் இந்நூலை யாத்தபின், மூன்றாம் நிலந்தருதிருவிற் பாண்டியனிடம் சென்று தமிழ்மொழியின் சீர்திருத்தத்தைப்பற்றிக் கூற, அரசன் பெரிதும் மகிழ்ந்து, சங்கத் தலைவராகிய தம்முடைய புரோகித அகத்தியரைக் கூப்பிட்டு, "தொல்காப்பியத்தைச் சங்கத்தில் அரங்கேற்ற வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி சொன்னார். இவ்வரங்கேற்றுதலுக்குச் சிறப்பாக **அதங்கோட்டாசான்** தலைமையில் ஒரு குழு ஏற்பாடு செய்து (Special Committee) புரோகித அகத்தியர் II—மூன்றாம் நிலந்தருதிருவிற் பாண்டியன் இவர்கள் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. அரங்கேற்று விழா முடிந்ததும், சீர்திருத்தத்தின்படி மொழி வளர்ச்சிபெற, புரோகித அகத்தியர் II சங்கத்தின் தலைமைப் பதவியை ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியருக்குக் கொடுத்து, தமிழ்மொழிக்கு வேண்டியது செய்தார்.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் கொடுத்த பாயிரத்தில் உள்ள "அறில்தபநாடி" என்ற அடிக்கு உரை எழுதும்போது, நச்சினார்க்கினியர் ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியரையும், திரணதூமாக்கினி என்ற தொல்காப்பி யரையும், அகத்தியம நிறைந்த தொல்காபபியரையும் ஒருவர் என எண்ணி உரை எழுதிவிட்டார். இது சரித்திர வரலாறும் காலவரையறையும தெரியாததால் ஏற்பட்ட தவறு ஆகும்.

இடைச் சங்கத்தில் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பி யர் தலைவராக வந்தது கி மு. 6000-ல். அதுமுதல் தமிழ் மொழிக்குச் சதுர எழுத்துக் காலம் ஆரம்பம். இவ ருடைய தொல்காப்பியம வழக்குக்கு வந்தபின், புரோகித அகத்தியர் II வட்டெழுத்துக் காலத்தில் செய்த அகத்திய மும், அதற்குமுன் இருந்த ஏனைய இலக்கணங்களும் வழக்கு வீழ்ந்து அழிந்தன.

இவ்விரண்டாம் புரோகித அகத்தியர் தமிழுக்குச் செய்த உபகாரம் என்றும் மறக்கற்பாலதன்று.

## பாரத காலத்து

## உ௦. குஞ்சரகிரி அகத்தியர் II—(ஆரியர்)

(காலம்—3110 B. C.)

வியாசர் இயற்றிய அரிவம்சத்தில் குஞ்சரகிரியில் இருந்த இவ்வகத்தியரைப்பற்றிக் கூறியுள்ளார். (Vide= அரிவம்சம் - பவிஷ்யபர்வம், அத்தியாயம் - 13)

குஞ்சரகிரி என்பது ஈழநாட்டில் உள்ள குஞ்சரமலைத் தொடரின் ஒரு கொடு முடியாகும.

இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள குஞ்சரகிரியே தான் இது. தசரதனல் ஏற்படுத்தப்பட்ட இந்த ஆசிரம

மானது அவன் காலம் தொட்டு, பாரதகாலத்திலும் நடைபெற்று, அதன்பின், கி. பி. 7-ம் நூற்றூண்டிலும் நடைபெற்றதாகத் தெரிகிறது.

"**அகத்தியர்**" என்ற பட்டத்தோடு இந்த ஆரிய இருடிகள் ஈழநாட்டில் ஆரிய மதத்தைப் பரப்பி வந்ததோடு ஆரிய அரசர்களுடைய அரசியல் தூதுவராகவும் இருந்து வந்தனர்.

இதன் பலனுக ஈழ நாட்டில் ஆரியச் சக்கரவர்த்திகள் பல ஆண்டுகள் ஆண்டு வந்தனர். அத்துடன் பழைய தமிழ்க் குடிகளாகிய நாகர்களோடு ஆரியர்கள் மணமுறையில் கலந்ததால் நாகர்கள் என்ற பெயர் போய் இப்போது **சிங்களர்கள்** என்ற பெயருடன் விளங்குகிறுர்கள். கலப்பு மணத்தால் உண்டாகும் கெடுதிக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்

## உக. துவராபதி அகத்தியர்—(ஆரியா)
## (காலம்—3100 B. C.)

தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினுர்க்கினியார் இவரைப்பற்றிக் கூறுவதாவது :—

"அகத்தியன் அதங்கோட்டாசானை நோக்கி, 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' என்று கூறுதலானும, தொல்காப்பியரும் பல்காலும் சென்று, யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டுமென்றும் கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங்கூறி விடுவல் எனக் கருதி, அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை கூறுதலின் "அரிறப" என்றுர். அவர் கேளன்மின் என்றதற்குக் காரணம் என்னை யெனின், தேவரெல்லாருங் கூடி யாஞ் சேர விருத்தலின் மேருத் தாழ்ந்து

தென்றிசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனுரே ஆண்டு இருத்தற்கு உரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்றிசைக்கட் போதுகின்றவர், கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் ஜமதக்கினியாருழைச் சென்று அவர் மகனுர் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனுருழைச் சென்று அவருடன் பிறந்த குமாரியார் உலோபமுத்திரையை அவர் கொடுப்ப, நீரேற்று இரீஇ, பெயர்ந்து, துவராபதிப் போந்து, நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண்குடி வேளிர் உள்ளிட்டாரையும், அருவாளரையும் கொண்டு போந்து, காடு கெடுத்து, நாடாக்கிப பொதியின்கண் இருந்து இராவணனை கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி, திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனுரை நோக்கி, நீர் சென்று குமரியாரைக் கொண்டு வருகெனக் கூற, அவரும எம்பெருமாட்டியை எங்ஙனங் கொண்டு வருவல் என்ருர்க்கு, முன்னுகப் பின்னுக நாற்கோல் நீளம் அகல நின்று கொண்டு வருக என்ருர்க்கு, அவரும அங்ஙனங் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டு போய வழி, தொல்காப்பியனுர கட்டளை இறந்து சென்று, ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட, அதுபற்றி ஏறினுர். அது குற்றம என்று அகத்தியனுர் குமாரியாரையும் தொல்காப்பியனுரையும 'சொர்க்கம புகாப்பீர்' எனச் சபிக்க, 'யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையால், எமபெருமானும சுவர்க்கம புகாப்பீர்' என அகத்தியனுரையும சபித்தார்; அதனுல் அவர் வெகுண்டார். ஆதலின் அவன் செய்த நூலைக் கேளற்க என்ருர்" என்பதே.

நச்சினார்க்கினியர் துவரை அகத்தியரைப்பற்றிக் கூறும்போது, அப்பெயரையுடைய முப்புராதிகள் காலத்து அகத்தியர் வரலாற்றையும், விதர்ப்பநாட்டு உலோபா முத்திரை அகத்தியர் வரலாற்றையும், இராமாயணகாலத்து அகத்தியர் வரலாற்றையும் ஒன்றுபடுத்தி எழுதிவிட்டார். அவர் காலத்திலேயே இந்தக் குழறுபடை இலக்கியங்களில் கலந்துவிட்டது. கால ஆராய்ச்சியும, சரித்திர ஞானமும் இல்லாத குறையினால் இது ஏற்பட்ட தவறேயாகும.

நச்சினார்க்கினியர் கூற்றுப்படி **துவரை அகத்தியர் வரலாற்றை** மாத்திரம் இங்கு எடுத்துக்கொள்ளுவாம். ஏனைய அகத்தியர்களைப்பற்றித் தனித்தனியாக முன்னமே கூறியுள்ளோம்.

பாரத காலத்தில் துவரைநகர் (Duwaraka) யாதவர்களால் கட்டப்பட்டது. கண்ணன் மதுரையினின்றும் துவாரகைக்குச் சென்றபின், அங்கே கண்ணனுடைய நண்பர் **அகத்தியர்** என்னும் பெயருடையவா துவாரகையில் ஆசிரமம் ஒன்று அமைத்துக்கொண்டு தவம்புரிந்துவந்தார். பாரதப்போர் முடிந்தபின் கண்ணன் அதிகநாள் உயிரோடு இருக்கவில்லை. கண்ணன் வைகுண்டம் சென்றபின், கண்ணன் வழிவந்த அரசர் பதினெண் பேர்களையும், பதினெண்கோடி வேளிர்களையும் (யாதவர்கள்), அருவாளர் (கொடுந் தமிழ்நாடு பன்னிரண்டில் அருவாநாட்டுக் குடிகள்) பலரையும், கண்ணன் நண்பரான துவராபதி அகத்தியர் கூட்டிக்கொண்டுவந்து தமிழ் நாட்டில் குடியேற்றினார்.

கி. மு. 6000-ல் பரசுராமர் தசரதராமரால் தோல்வியுற்றபின், தம்மைச் சேர்ந்த, 64 குடும்பங்களை ஆரியநாட்டினின்றும் கூட்டிக்கொண்டு சேரநாடு சென்று, அவ்வரசனிடம் 64 ஊர்களைப் பெற்று, அவைகளைச் சர்வமானிய

மாகக் கொடுக்குமபடி செய்து அக்குடும்பங்களைக் குடியேற்றினர். அவர்கள்தான் இப்போது மலையாளத்தில் **நம்பூத்திரிகள்** என்பவர்கள். அதுபோல, பாரதப்போர் முடிந்ததும் துவராபதி அகத்தியர் கண்ணன் வழியரான அரசர் பதினெண்மரையும், பதினெண்கோடி வேளிர்களையும் அருவாளாகளையும் தமிழ் நாட்டில் குடியேற்றினா. அவர்கள்தான் சளுக்கரும் ஒய்சளரும் ஆவர் என்று மு. இராகவய்யங்கார் வேளிர் வரலாற்றில் கூறுகிறார்.

சளுக்கரை 'வேள் புலவரசர்' என்று நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளது. **வேள்** என்ற சொல்லே அவாகளுக்கு உரியது. **பிங்கலந்தையில்,**

> "தார காரியும் **சளுக்கிய** வேந்தனும்
> வேளிர் லாளனும் வேள்என லாகுமே"

என்று கூறப்பட்டுள்ளது.

கபிலர் என்ற கடைச்சங்கப புலவர் **புறநானூற்றில் இருங்கோவேள்** என்பவனைப் புகழும இடத்து :—

> "நீயே, வடபான் முனிவன் தடவினுட் டோன்றி
> செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
> உவரா வீகைத் துவரை யாண்டு
> நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே"

என்று கூறியுள்ளார்.

இப்பாட்டிற் கூறப்பட்ட 'வடபான் முனிவன்' யார் என்று காண்பாம் :—

(Bombay Gaztteer Vol. I, Para V, P. 339) "வடதேசத்தில், **ஆரீத பஞ்சசிகர்** என்னும் முனிவர் ஒருவர், தமது யாககுண்டத்தில் அவிசு இடும்போது, அவரது தீர்த்த பாத்திரத்தினின்றும் ஓர் அரசன் உண்டானன் என்றும், **சுளுகம்** என்ற வடமொழிப் பெயர் பெற்ற,

அப்பாத்திரத்தினின்றும் பிறந்தமைபற்றி அவன் சளுக்கன் என அழைக்கப்பட்டான் என்றும், பின்னர் அவன் வழியினர் சளுக்கர் எனப் பெயர் பெற்றார்'' என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்போது மேற்காட்டிய பாட்டின் பொருள் காண்பாம்:—"நீதான் வடதேசத்து முனிவர் ஒருவரது யாகபாத்திரத்திற் றோன்றி, செம்பால் அழகாகச் செய்யப்பட்ட மீப்பெரிய கோட்டையை உடைய, வெறுத்தல் இல்லாத, பொன்மயமாகிய துவாரகாபுரியை ஆண்டு நாற்பத்தொன்பது தலைமுறையாக வந்த வேளிர்க்குள்ளே சிறந்த வேளாயிருக்கின்றாய்'' என்பதாம். ஆதலின், இருங்கோவேள் சளுக்கிய வேந்தன் என்று கண்டாம்.

ஒய்சள யாதவர்கள் எருமை நாட்டில் துவரை (துவார சமுத்திரம்) என்ற நகரை உண்டுபண்ணி, அதனை அரச இருக்கையாக்கி, ஆண்டு வந்தார்கள்.

இப்படி துவராபதி அகத்தியரால் தமிழ்நாட்டில் குடியேற்றப்பட்ட சளுக்கரும் ஒய்சளரும் சேர, சோழ பாண்டிய, பல்லவ நாடுகளில் பிரவேசிக்க முயன்றும் அவர்களால் முடியவில்லை.

கி. பி. 642-ல் சளுக்கியா பல்லவ நாட்டைக் கைப்பற்ற முயன்றபோது, பல்லவ அரசனுடைய சேனாதிபதியாகிய பரஞ்சோதி என்ற சிறுதொண்ட நாயனார் பல்லவ சேனைகளை நடத்திச்சென்று, சளுக்கருடைய அரச இருக்கையாகிய வாதாபியிலேயே சண்டைசெய்து, வாதாபியை எரியூட்டி, நாசம்செய்து, வெற்றிபெற்று வந்த வரலாறு பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

சளுக்கர் என்பவர் கம்சன், சராசந்தன், கண்ணன் முதலிய அரக்கர் வழியினரும் ஆரியரும் கலப்பு மணம் செய்துகொண்டதால் ஏற்பட்ட ஒரு கூட்டம்.

யாதவர்கள் அப்படி அரக்கரோடு கலந்ததாகத் தெரியவில்லை.

இதுகாறும் கூறியவாற்றால் துவரை அகத்தியர் என்பவர், கண்ணனுடைய கட்டளைப் பிரகாரம் கண்ணனைச் சேர்ந்த குடிகளைப் பாரதப்போருக்குப்பின் தென்னாட்டில் காடு கெடுத்து நாடாக்கிக் குடியேற்றி, நாட்டை ஆளும்படி செய்தார் என்று அறிகின்றோம்.

## உஉ. யசோமதி அகத்தியர் (ஆரியர்)
### (காலம்—2000 B. C.)

இவ்வகத்தியரைப்பற்றி "The Hindu Colony of Combodia" என்ற நூலில் ஆசிரியா பனீந்திரநாதபோஸ் என்பவர் விரிவாகக் கூறியுள்ளாா. அதன் சுருக்கம் வருமாறு:—

ஆரிய தேசத்தில் **அகத்தியன்** என்னும் பெயரையுடைய **பிராமணன்** ஒருவன் இருநதான். இவன் வடமொழி—தென்மொழிகளில் வல்லவன். இந்த அகத்தியன் கடல் கடந்து கம்போடியா நாட்டுக்குச் சென்று, அங்கே அந்த நாட்டு அரசனாக அப்போது இருந்த **யசோவர்மன்** என்பவனுக்கு உற்ற நண்பன் ஆனான். இவ்வகத்தியன் கல்வியிலும், ஒழுக்கத்திலும், உருவிலும், அரசியல் அறிவிலும சிறந்து இருப்பதை அரசன் கண்டு தன் குமாரியாகிய **யசோமதியை** அகத்தியனுக்கு விவாகம்செய்து கொடுத்தான். யசோமதிக்கும் அகத்தியருக்கும் **நரேந்திரவர்மன்** என்ற ஆணும், **நரேந்திர இலக்குமி** என்ற பெண்ணும பிறந்தார்கள். யசோவர்மன் இறந்ததும், நரேந்திரவர்மன் 'நரேந்திர ஆரியா' என்ற பட்டத்தை வகித்து முடிசூடிக்கொண்டு ஆட்சி புரிந்தான்.

நரேந்திரவர்மனுடைய தங்கை நரேந்திர இலக்குமி, **இராயபதிவர்மன்** என்ற அரசனை மணந்தாள். நரேந்திர இலக்குமிக்கு இராசேந்திரதேவி என்ற ஒரு பெண் பிறந்தாள். இராசேந்திர தேவியை இரண்டாம் ஜயவர்மனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்தார்கள். இந்த இரண்டாம் ஜயவர்மன் காலத்தில் கம்போடியா மிகப் பிரபலமாக வளர்ச்சி அடைந்து இருந்தது. இவ்வகத்தியர் சுமாத்திரா, ஜாவா, போர்னியோ, பலி முதலிய தீவுகளுக்கும், கம்போடியா, சியம் முதலிய நாடுகளுக்கும் கடல் தாண்டிச் சென்று, அங்கங்கே சைவசமயத்தைப் பரவச்செய்து, ஆரியர்களைக் குடியேற்றினர்.

இவர் மலாய தீபகற்பததிலுள்ள மலயமலையில் ஆசிரமம் அமைத்துக்கொண்டு சின்னாள் அங்குத தங்கியிருந்ததற்கு அங்கே அடையாளங்கள் காணப்படுகின்றன.

இவர் கம்போடியாவிலுள்ள சிவன் கோவிலில் உள்ள **பத்திரேச்சுரர்** என்னும் இலிங்கத்தையும், ஜாவாவில் உள்ள **சிவன்கோவிலின்** பட்டாரக ஈச்சுரா என்ற சிவலிங்கத்தையும் பூசித்துப் பேறுபெற்றார் என்று அந்நாட்டுச் சரித்திரம் கூறுகின்றது. இவர் காலத்தில் இந்தியாவுக்கும் கிழக்கு இந்தியத தீவுகளுக்கும் வாணிபததொடர்பு இருந்தது. தமிழ்நாட்டுக் கப்பல்கள் இவ்வாணிபததில் ஈடுபட்டிருந்தன.

(Burgain's Sanskrit Inscription of Champa 1893—LXV—page 360.

"That Brahman Agastya, born in the land of Aryans, devoted to the Worship of Siva, having come by his psychic powers in the land of Combodi ıns for the purpose of Worshipping the Siva-Lingam known as *Badreswarar* and having worshipped the God for a long time attained beatitude.

திருப்பரங்குன்றத்துத் தமிழ்ச் சங்க காலத்து

## ௨௩. புரோகித அகத்தியர் III (ஆரியர்)

(காலம்—1900 B. C.)

இவ்வகத்தியர் திருப்பரங்குன்றத்துப்பக்கம் தென் மதுரையில் நடந்த தமிழ்ச்சங்ககாலத்தில் பாண்டியருக்குப் புரோகிதராய் இருந்துகொண்டு, ஐம்பெருங்குழு—எண் பேர் ஆயம் என்ற அரசியல் சபைகளிலும் உறுப்பினராக இருந்ததோடு, தமிழ்ச்சங்கத்தில் அங்கத்தினராகவும் இருந் தார். இவர் 'பேர் அகத்தியம்' என்றும், 'சிற்றகத்தியம்' என்றும் இரண்டு நூற்களை யாத்துச் சங்கத்தில் அரங் கேற்றுப்படி செய்தார அந்நூல்கள் முழுதும் கிடைக்க வில்லை. சில சூத்திரங்களே அகப்பட்டு, இப்போது அச்சில் வெளிவந்துள்ளன.

## ௨௪. காரைத்தீவு அகத்தியர் (பவுத்தர்)

(காலம்—400 B. C.)

இவரைப்பற்றி கி. மு. 380-க்கு முற்பட்ட "அகத்திய ஜாதகம்" என்ற பவுத்த நூலில் கூறப்பட்டுள்ளது. அச் சரித்திரம் வருமாறு.—

இவ்வகத்தியர் ஆர்யாவர்த்தத்தில் கன்னோஜ் நாட்டில் ஒரு செல்வவந்தர் குடியில் பிறந்து, மிகுந்த சுகங்களை அநுபவித்தபின், அவ்வாழ்க்கையில் வெறுப்புற்று, துறவு பூண்டு, பவுத்த சந்நியாசியாகி, கயாவில் சிலகாலம் வதிந்து, பின் தெற்கே யாழ்ப்பாணத்திலுள்ள காரைத்தீவுக்குப் போய், தனியாக ஒரு ஆசிரமம் அமைத்துக்கொண்டு நோற்றுவந்தமை அகத்திய ஜாதகத்தால் அறிகின்றும்.

காரைத்தீவு என்பது ஏழ்குணகாரைநாடு முதலிய 49 நாடுகள் 'வடிவேல் எறிந்த வான்பகை பொறுது' கடலானது ஒளிநாடு, பெருவளநாடு, குமரி நாட்டின் பெரும்பகுதி முதலியவைகளை விழுங்கியபோது எஞ்சிய பகுதி காரைத்தீவாய் இன்றும் காட்சி தருகின்றது.

"அகத்தியர், ஆகாயததின்கண்ணே குறுகிய வடிவில் பேரொளி வீசும் பிறையை ஒப்பத் தம் மேனி வாடக் கடுந்தவம்புரிந்து பெற்ற பேரொளி தோன்றக் காரைத் தீவில் வசித்தார்" என்று புத்த ஜாதகத்தில் கூறப்பட்டுள்ளது.

இவரைப்பற்றி இன்னும "மாணிக்கவாசகர் காலம்" என்னும் நூலில் பக்கம் 241 - 242-ல் கூறப்பட்டுள்ளது காண்க.

இக்காரைததீவு அகத்தியர், வடமொழி — தென் மொழிகளில் வல்லுநா இவர் தன் பெயரால் ஒரு நூல் செய்துள்ளார். ஆனல் அநத நூல் முழுதும் கிடைக்க வில்லை. அந்த நூலிலிருந்து உரையாசிரியர்கள் இரண் டொன்று எடுத்து ஆண்டிருக்கிறார்கள்.

நன்னூலில் மயிலைநாதரும சங்கர நமசிவாயரும் "ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும்" என்னும பெயரியல சூத்திர உரையில் அகத்திய சூத்திரம என :—

> "ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
> வேறெனு விளம்பான் பெயரது விகாரமென்று
> ஓதிய புலவனும் உளன்; ஒரு வகையான்
> இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்"

என்ற சூத்திரத்தைக் காட்டியுள்ளார்.

**பிரயோக விவேகநூலார்** இச் சூத்திரத்தில் அகத்திய ஞர் **பாணினியையும் இந்திரனையும்** குறித்துள்ளார் என்று கூறுகிறார்.

"ஓதிய புலவன்" என்பானைப் **பாணினி** என்று கொண்டால், இச்சூத்திரம் இயற்றிய அகத்தியர் பாணினிக்குப் பிற்பட்டவர் ஆவர்.

**பாணினி** என்பவர் கிருஷ்ண அர்ச்சுன நாமங்களுக்குச் சூத்திரம் செய்திருக்கிறபடியால் அவர் பாரத காலத்துக்குப் பிற்பட்டவரே.

இசசூத்திரம செய்த அகத்தியர் பாணினி கொள்கையை உடம்படாது, இநதிரன் கொள்கையை உடம்பட்டது காண்க.

தொல்காப்பியரோ "வேற்றுமை தானே ஏழென மொழிப" என்று ஏழு வேற்றுமை கொண்டார். இவர் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் ஆவர்.

ஆதலின், எட்டு வேற்றுமைகொண்ட வடமொழி இந்திரன் வேறு என்றும், ஏழு வேற்றுமைகொண்ட தென்மொழி இந்திரன் வேறு என்றும் கண்டாம.

பாணினியும் வடமொழி இந்திரனும் பாரத காலத்துக்குப் பிற்பட்டவர்கள். தொல்காப்பியரும் தென்மொழி இந்திரனும் இராமாயண காலத்தவர்.

இராமாயணத்தில் கூறப்பட்ட கபாடபுரத்தில் நடந்த இடைச சங்கத்திற்கு இலக்கண நூலாக இருநதது தொல்காப்பியம்.

"புண்ணிய சரவணம் பொருந்துவீ ராயின்
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்"
(சிலம்பு - காடு - 99 - 100)

"கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணாய்"
**(சிலம்பு - காடு - 154 - 5)**

இவ்வடிகளுக்கு அடியார்க்குநல்லார் "இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணம்" என்றும், "இந்திரன் தோற்றுவித்த இலக்கணம்" என்றும் வடமொழி ஐந்திர வியாகரணத்தை மனதில் எண்ணிக் கூறியுள்ளார். ஆனால், இங்கே இளங்கோ அடிகள் குறிப்பிட்ட இலக்கணம் தமிழ் ஐந்திர இலக்கணமாகும்.

தமிழில் உள்ள ஐந்திர இலக்கணம் மிகவும் விழுமிய நூல் என்றும், இயற்கையின் விளங்கிய மெய்ப்பாடுகளைக் கூறும் இலக்கண நூல் என்றும் இளங்கோ அடிகள் கூறுவதால் தமிழ் ஐந்திர நூல் சிறப்புடையதென்று அறியக் கிடக்கின்றது. "கப்பத்து இந்திரன்" என்றதால் இந்திரனுடைய ஊர் கம்பம் (=கப்பம்) என்று தெரிகிறது. கம்பம் - திம்பம் முதலிய ஊர்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

வடமொழி வியாகரணங்களை **யாஸ்கரம், ஐந்திரம், பாணினீயம், காத்தியாயனம்** (வாருசியம்), **பாதஞ்சலியம்** (பாடியம் செய்தவா செய்தது) என்று முறைப்படுத்தலாம்.

யாஸ்கருக்கும் பாணினிக்கும் இடைப்பட்டவர் இந்திரன். இந்திரன் பிரகஸ்பதியிடம் சமஸ்கிருதம் படித்தான் என்பர். "இந்திரனுக்கு பிரகஸ்பதி இவை வழு— இவை வழு அல்ல என வடமொழிச் சொற்களைத் தனித் தனி எடுத்து ஓதலுற்றுற்குத் தேவ ஆண்டில் ஆயிரம் ஆண்டுகள் சென்றன; சென்றும் சொற்கள் முடிந்தில" என மாபாடியத்துள் பதஞ்சலி எடுத்து ஓதினர் எனச் சிவஞானமுனிவர் கூறுகின்றார்.

பாடியம் செய்த பதஞ்சலி, கி. மு. 150-ல் இருந்தவர் என்றும், யோகசூத்திரம் செய்த பதஞ்சலி, கி. பி. 7-ம் நூற்றுண்டில் இருந்தவர் என்றும் ஆசிரியர் கீத் (A Keith)

என்பவர் கூறுகிறார். இவர்கள் இருவரைத் தவிர மன்று தொழுத பதஞ்சலி என்பவர், கி. மு. 6000-ல் இருந்தார்.

கி. பி. 7-ம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகன் ஐயூன்—த்ஸங் கூறுவதாவது:—(Life of Hiouen Tsang - 600 - 664 - A. D. Vol III, பக்கம், 122)

"வைவர்த்த கல்ப ஆரம்பத்தில் பிரம இராசாவானவர் வியாகரணம் என்னும் நூலை வெளியிட்டார். அது அப்போது 100 இலக்கம் சுலோகங்களை உடையதாய் இருந்தது. பின் வைவர்தத சித்த கல்ப ஆரம்பத்தில், திஸ்ஷி சக்கர ராசா (Tishish) அதைப் பத்து இலக்கம் சுலோகங்களாகச் சுருக்கி உரைத்தார் அதன்பின் வட நாட்டுக் காந்தாரப் பகுதியில் சாலாமதுரம் என்னும் ஊரில் பிறந்த பிராமணன் பாணினி அதனை 8000 சுலோகங்களாகச் சுருக்கி உரைத்தனன். இதுவே இப்போது நாவலந்தீவு முழுதும் வழக்குப்பெற்றுள்ளது" என்பதே.

இதுதான் கி. பி. 7-ம் நூற்றாண்டில் வழங்கப்பட்டு வந்த பாணினி வரலாறு.

செந்தமிழ், Vol. 26, பக்கம் 60-ல்—"புத்தமத நூலான அவதான சதகத்தில் சாரிபுத்தன் தனது 16-ம் ஆண்டில் ஐந்திரம் படித்தான்....வர்ஷா என்ற ஆசிரியர்க்குப் பல மாணவர்கள் உண்டு. அவருள் பாணினியும் ஒருவர். இவர் ஒரு மந்தமதி. இதனைக் கண்ட வர்ஷா மனைவி பாணினியைக் குருகுலத்தை விட்டுத் துரத்திவிட்டாள். பாணினி இதனை ஆற்றாது, சிவபெருமானைக் குறித்துத் தவம் கிடந்து, வரம்பெற்று, எல்லாவற்றையும் அறிந்து, காத்தியாயனருடன் வாதாடி, அவர் ஓதி வந்த ஐந்திர வியாகரணத்தை அழித்தார்." 'என்று சோமதேவரது கதா சரித

சாகரத்தில் கூறப்பட்டுள்ளது' என்று வெளியிடப்பட்டு இருக்கிறது.

பிருகத் கதா மஞ்சரியிலும் இப்படியே கூறப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டவைகளால் நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், **பாணினி** காந்தாரதேயத்து **சாலாமதுரம்** என்ற ஊரில் பிறந்த ஒரு ஏழைப் பிராமணன் என்றும், அவன் வர்ஷா என்பவர் நடத்திய குருகுலத்தில் சேர்ந்து படித்துக்கொண்டு இருக்கும்போது, மந்த மதியுடையவனாய் இருந்தபடியால், வர்ஷாவின் மனைவி அவனைக் குருகுலத்தினின்றும் துரத்திவிட்டாள் என்றும், பிறகு பாணினி சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்ததோடு நில்லாமல் பல ஆசிரியர்களை அண்டி, நிறையக் கற்றுப் பின் திஸ்ஷி சக்கர ராசா பத்து இலக்கம் சுலோகங்களுடன் செய்திருந்த இலக்கண நூலை 8000 சுலோகங்களாகச் சுருக்கி, **பாணினீயம்** என்ற இலக்கண நூலை இயற்றினார் என்றும், பின் காத்தியாயனருடன் வாதாடி அவர் ஓதி வந்த ஐந்திர வியாகரணத்தை அழித்துவிட்டார் என்றும் அறிகிறோம்.

திபேத்திய லாமாவான **தாரநாதர்** இந்திர வியாகரணம் பாணினிக்கு முற்பட்டது என்றும், சந்திர வியாகரணமும் பாணினீயமும் ஒன்று என்றும், கலாபமும் ஐந்திரமும் ஒன்று என்றும் கூறுகிறார்

சைனர்கள், "இந்திரன் தோற்றுவித்த வியாகரணத்தினை எம்முடைய அருககுமாரன் அருளிச்செய்த பரம ஆகமங்களில் காண்கிலேயோ?" என்று கூறுவதாக அடியார்க்குநல்லார் கூறுகிறார்.

ஆகையால், ஐந்திர வியாகரணம் செய்த இந்திரன் காலம் கி. மு. ஆறும் நூற்றாண்டு ஆகக் கொண்டால், பாணினி காலம் கி. மு. 400 ஆகும்.

டாக்டர் வாஷ்பர்ன்* என்பவர் பாணினி, கி.மு. 300-ல் இருந்தவர் என்றும், டாக்டர் பண்டர்க்கர்† "இந்தியாவின் இதிகாசம்,‡ என்ற நூலில் பாணினி காலம் கி. மு. 700-ல் என்று கூறுகிறார். கடைசியாக பாணினிகாலம் கி. மு. 400 தான் என்று ஆராய்ச்சியாளர் நிச்சயித்துள்ளார்கள். ஆதலின், கி. மு. 6000-க்கு முந்தி இருந்த தமிழ்நாட்டு இந்திரனும், கி. மு. ஆறும் நூற்றாண்டில் இருந்த வடநாட்டு இந்திரனும் வேறு இதனால் காரைத்தீவு அகத்தியரும் பாணினியும் ஒரு காலத்தவர் என்று ஏற்படுகிறது.

## உரு. போதலகிரி அகத்தியர் (பவுத்தர்)

(காலம்—274 B. C.)

"ஆயுங் குணத்தவ லோகிதன்பக்கல் அகத்தியன் கேட்(டு)
ஏயும் புவனிக் கியம்பிய தண்டமிழ் ஈங்குரைக்க
நீயும் உளையோ எனிற் கருடன்சென்ற நீள்விசும்பில்
ஈயும் பறக்கும் இதற்கென் கொலோசொல்லும் ஏந்திழையே"
(வீர சோழியம், பாயி, 2)

என்று புத்தமித்திரனார் இவ்வகத்தியரைப்பற்றி வீர சோழியத்தில் கூறுகின்றார். இவ்வகத்தியர் பவுத்த மதத்தைச் சேர்ந்தவர். அவலோகிதன்பால் தமிழ் கற்று உலகருக்கு வேண்டிய இலக்கண இலக்கியங்கள் செய்துள்ளார் என்று தெரிகிறது. ஆனால் அந்நூல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

---

* Dr. Washburn of vale University.

† R. G. Bandarkar.

‡ The great Epic of India. P. 391.

போதலகிரியில் அவலோகிதர் தம் பத்தினி தாரையுடன் இருந்தார் என்பது பவுத்தநூற் கொள்கை. போதலகிரி என்பது மலய மலையிலுள்ள ஒரு கிரி என்று சிலர் கூறுகின்றனர். மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மலயம் என்று ஒரு பெயர் உண்டு. ஆதலின் போதலகிரி எங்கே இருக்கிறது என்று பார்க்கலாம். பவுத்த நூலாகிய "தாரா சூக்தத்திலும்" அவலோகிதரை "போதலகிரி நிவாசினி" என்று கூறப்பட்டுள்ளது

பவுத்தமதக் கொள்கையில் கி. மு 274-ல், அதாவது அசோகர் காலத்தில் தான் தென்னாட்டில் பரவியதாக கர்நார் (Gurnor) என்னும் இடத்தில் அசோகர் வெட்டியுள்ள கல் சாசனத்தால் வெளியாகிறது.

மைசூர் அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள "சிரவண பௌகுள கல்வெட்டுக்கள்" (Vol. II, Epigraphic Carnatica) என்ற புத்தகத்தில், கி. மு மூன்றாம நூற்றாண்டில் பெரிய பஞ்சம் ஒன்று ஏற்பட்டு, 12 ஆண்டுகள் நீடித்து இருநததினால், சுருததேவலி பத்திரவாகு என்னும் சைன சந்நியாசியும், அவர் மாணவர் சந்திரகுப்தாவும், பல சைன, பவுத்த சந்நியாசிகளோடும் ஏனையகுடி மக்களோடும் தென்னாடு போந்து, சிரவண பௌகுள என்னும் இடத்திலும் அதற்குச் சமீபத்திலும் வதிந்து வந்தார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

மேற்குமலைத் தொடருக்குப் பூனாவிலிருந்து கன்னியாகுமரிவரை மலயமலைத் தொடர் என்ற பெயரும் உண்டு. ஆகலின் போதலகிரி என்பது மேற்குமலைத் தொடரில் மைசூர் நாட்டில் உள்ள ஒரு பகுதியாக இருக்கலாம் என்று ஊகிக்க இடம் இருக்கின்றது.

## உகூ. திலோத்தமை அகத்தியர் (பவுத்தர்)

(காலம்—100 B.C.)

“ கடவுட் கணிகை காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்”

(மணிமேகலை)

என்ற மணிமேகலை அடிகளுக்கு மகாமகோ உபாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், “கடவுட் கணிகை” யாகிய திலோத்தமை என்பவளுக்குப் பிறந்த பிள்ளைகளாகிய “வசிட்டரும் அகத்தியரும்” என்று குறிப்புரை எழுதி இருக்கின்றனர். இங்கே கூறப்பட்ட கணிகை என்பவள் திலோத்தமைதான் என்பதற்கு ‘நீலகேசி’யினின்றும் அவர் ஆதாரங் காட்டுகின்றனர்.

ஆதலின், இருக்கு வேதத்தில் கூறப்பட்ட ஊர்வசியின் புத்திரர்களாகிய வசிட்டரும் அகத்தியரும் அல்ல இங்கு கூறப்பட்டவர்கள்; அவர்கள் வேறு, இவர்கள் வேறு. மேலும், இவர்கள் பவுத்த மதத்தைச் சார்ந்தவர்கள். பவுத்தமதம் இருக்குவேத காலத்தில் கிடையாது ஆதலின் என்க.

இங்குக் கூறப்பட்ட அகத்தியரைப்பற்றி இவ்வளவே தான் தெரிகிறது.

## உஎ. பாவநாச (மலயமலை) அகத்தியர் I (தமிழர்)

(காலம்—கி. பி. 2-ம் நூற்றாண்டு)

"மாமறை முதல்வன் மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து"

(சிலம்பு, அடைக். வரி, 13, 15,)

மாடலன் என்னும் மறையோன் கி. பி. 2-ம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவன் காலத்தில் இருந்தவன். அவன் குமரிதீர்த்தம் ஆடச் சென்றகாலை பொதியமலை அகத்தியரையும் வணங்கிச்சென்றான் இவ்வகத்தியர் முப்புராதிகள் காலத்துப் பொதியமலை அகத்தியரின் மாணாக்கர் பரம்பரையில் வநதவர். இளங்கோ அடிகள் இவரை 'மாதவ முனிவன்' என்று கூறுவதால் இவர் தவம்கைவந்த முனிவர் என்று கொளளக்கிடக்கிறது ஆதலின், இவர் காலம் 2-ம் நூற்றாண்டு கி. பி. ஆகும். 'மாதவ முனிவன் மலை' என்பதற்கு உரையாசிரியர் 'அகத்திய முனிவரது பொதியமலை' என்று கூறுகிறார். வெண்பாமாலைப் பாயிரத்திலும் இவரைப்பற்றி "தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்" என்றும், காரிகையில் "மலையத்தருந்தவன்" என்றும் கூறப்பட்டுள்ளது காண்க.

இவர் நூல் ஒன்றும் இயற்றினதாகத் தெரியவில்லை.

## உ அ. பாவநாச (மலயமலை) அகத்தியர் II

(தமிழர்)

(காலம்—கி. பி. 5-ம் நூற்றாண்டு)

பாண்டிநாட்டில் திருப்பரங்குன்றத்துத் தென் மதுரையில் கி. பி. 470 முதல் கி. பி. 520 வரை நடந்து வந்த வஜ்ரநந்தி தமிழ்ச் சங்கத்தில் தலைமை வகித்து நடத்திய இரண்டாம் நக்கீரர் காலத்தில் இவ்வகத்தியர் இருந்தவர்.

இவர் காலத்தில்தான் கூடல் என்ற மதுரையில் குயக்கொண்டான் தலைமையில் வடமொழிப் பட்டிமண்டபம் ஒன்று நடந்துவந்தது இக்குயக்கொண்டானுக்கும் இரண்டாம் நக்கீரருக்கும் மொழிபற்றி வாக்கு வாதங்கள் நிகழ்ந்தன. குயக்கொண்டான் 'ஆரியம் நன்மை உடைத்து; தமிழ் தீமை உடைத்து' எனக் கூறித் தமிழ்மொழியை இழித்துக் கூற, இரண்டாம் நக்கீரர்,

"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணிய
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தம் சேர்க சுவாகா"

என்று பாடவே, அக்குயக்கொண்டான் இறந்துபட்டான். படவே, பட்டிமண்டபத்தில் இருந்த அனைவரும் குயக்கொண்டான் செய்த குற்றத்தை ஓர்ந்து, அவனை மன்னித்து, அவனை எழுப்பிக்கொடுக்க வேண்டுமாய் இரண்டாம் நக்கீரரைக் கேட்டுக்கொள்ள அவரும் கருணை மேலிட்டால்,

"ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானை—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்க சுவாகா" என்று பாடவே,

குயக்கொண்டான் தூங்கி விழித்தவனைப்போல எழுந்து, தன் குற்றத்தை உணர்ந்து, தன்னை மன்னிக்கும்படி வேண்ட, அவரும் அவனை மன்னித்து, அவனுக்குத் தமிழ் மொழியின் உண்மையையும் வன்மையையும் அறிவுறுத்தி அவனை வழிப்படுத்தினார்.

இச் செய்யுள்கள் இரண்டினையும் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் மேற்கோள்களாக எடுத்து ஆண்டிருக்கிறார்.

இவ் வகத்தியரைப்பற்றி கி. பி 694-முதல் கி பி. 712-வரை வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள்:—

"சந்தி மூன்றிலும் தாபரநிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியர் தமக்கு
சிந்துமாமணி அணிதிருப் பொதியில்
சேர்வுநல்கிய செல்வநகண் டடைந்தேன்"

(சுந்தரர் - நின்றியூர் - 5)

என்று பாடியுள்ளார்.

"சந்தி மூன்றிலும் தாபர நிறுத்திச் சகளி செய்து இறைஞ்சும் அகத்தியர்" என்று கூறியதால், இவர் நிர்வாண தீக்கை பெற்று மூன்று காலங்களிலும் தாபர இலிங்கம் தாபித்துப் பூசித்து இறைஞ்சும் பெருமை வாய்ந்தவர் என்றும்,

"திருப்பொதியில் சேர்வு நல்கிய செல்வங் கண்டு" என்றதால் அவருக்குப் பொதியமலையிலேயே முத்தி இன்பத்தை சிவபெருமான் நல்கினார் என்றும் அறிகின்றோம். இவருக்கு வடஆற்காடு ஜில்லா புத்தூரிலும், திருமறைக் காட்டிலும் கோவில்கள் உண்டு.

கூர்ச்சர நாட்டு (Guzarat)

## உ௬. புரோகித அகத்தியர் IV (ஆரியர்)

(காலம்—கி. பி. 6-ம் நூற்றாண்டு)

திருவாளர் K. N. சிவராஜ் பிள்ளை அவர்கள் தம்முடைய "தமிழ்நாட்டில் அகத்தியர்" (Agustya in Tamil Land) என்னும் புத்தகத்தில் பக்கம் 55-ல் இவ் வகத்தியரைப்பற்றிக் கூறுவதாவது:—

"முதலாம் **கீர்த்திவர்மன்** என்கிற கீர்த்திராசன் (சளுக்கிய வம்சம்) என்பவருடைய ஆட்சிக் காலத்தில் அவருடைய அரண்மனைப் புரோகிதராய் இருந்தவர் ஒரு **அகத்தியர்** என்று மிஸ்டிக் சொசைட்டி பத்திரிகை (The Journal of Mystic Society, Vol. XVIII. page 68) கூறுகிறது" என்பதாம்.

இவருக்கும் தமிழ்நாட்டுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இவர் நூல்கள் ஏதேனும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. கீர்த்திராசன் என்பவன் சத்தியாசிரிய சிரீவல்லப முதலாம் புலிகேசியின் மகனாவான். அவன் கி. பி. 567 முதல் கி. பி. 581 வரை கூர்ச்சரத்தில் அரசாண்டவன். சளுக்கியரில் மூன்று பிரிவுகள் உண்டு: மேலைச் சளுக்கியர், கீழைச் சளுக்கியர், கல்யாணிச் சளுக்கியர். கீர்த்திராசன் மேலைச்சளுக்கிய வம்சத்தைச் சேர்ந்தவன்.

## ௯௦. குஞ்சரகிரி அகத்தியர் III (ஆரியர்)

(காலம்—7-ம் நூற்றாண்டு கி. பி.)

இராமாயண காலத்திலிருந்து ஈழநாட்டில் உள்ள குஞ்சரகிரியில் ஆரிய அகத்தியருடைய ஆசிரமம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. ஆரிய மதத்தைப் பரவச்செய்வதும், ஆரிய அரசனுக்கு அவ்வப்போது அரசியல் செய்திகளைத் தெரிவிப்பதும், வடமொழி—தென்மொழிகளில் உள்ள நூற்கருத்துக்களைச் சிங்களம், மலாய் முதலிய மொழிகளில் எழுதி, ஈழநாட்டிலும் மலாய் நாட்டிலும் பரப்புதலும் ஆசிரமத் தலைவருடைய வேலையாகும்.

தற்காலம் ஆங்கிலப் பாதிரிமார்கள் ஆசிய மொழிகளைக் கற்று, அவைகளின் மூலம் கிறித்து மதத்தைப் பரப்புவதுபோல எனக் கொள்க. ஈழநாட்டில் இருந்த ஆசிரமத்தைப்பற்றி இராமாயணத்திலும், பாரதத்திலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

கி. பி. 7-ம் நூற்றாண்டில் இந்த ஆசிரமத்தில் இருந்த **அகத்தியர்** சாவகநாட்டிற்குச் சென்று, அந்நாட்டு அரசனையும் சில பெருங்குடி மக்களையும் ஆரிய மதத்தைத் தழுவும்படி செய்து, தாமே அவர்களுக்குச் சிலகாலம் குருவாகவும் இருந்தார். அந்நாட்டரசன் தம்முடைய குரு அகத்தியர் பேரால் ஒரு கோவில் கட்டி, அதற்குக் "குஞ்சர **கோணம்**" என்று பெயரிட்டு, வழிபாட்டுக்கு வேண்டிய நிபந்தங்கள் செய்துள்ளான்.

சாவகநாட்டுக் கோயில் ஈழநாட்டுக் குஞ்சரகிரிக் கோவில்போலவே அமைந்துள்ளதென்று இரண்டு கோவில்களையும் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வகத்தியர் சாவகநாட்டில் சிலகாலம் தங்கி, பக்கத்திலுள்ள பலி முதலிய தீவுகளிலும் ஆரிய மதத்தைப் பரப்பிவந்தார் எனச் சாசன ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

சாவகநாட்டில் அகப்பட்ட சாசனம் ஒன்றில், "எல்லா மக்களும் தாம் விரும்பியவற்றைப் பெறுமாறு அகத்தியர் "வரதலோகம்" என்னும் கோவில் திருப்பணியைச் செய்தார்" என்று கண்டிருக்கிறது. அந்தக் கோவில் பூசையை இவ்வகத்தியருடைய சந்ததியார்களே இப்பொழுதும் செய்து வருகிறார்கள். அவர்கள் தங்களை அகத்திய கோத்திரததார் என்றும், ஆசுவலாயன சூத்திரத்தார் என்றும் கூறிக் கொள்ளுகிறார்கள்.

## பாண்டியரின்
## ௩௧. புரோகித அகத்தியர் V (தமிழர்)

(காலம்—கி. பி. 7-ம் நூற்றாண்டு)

"பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனுப்
பெற்றது.........பாண்டியர் திருக்குலம்"

என இலண்டன்மாநகர் பொருட்காட்சிச் சாலையில் உள்ள வேள்விக்குடி - சின்னமனூர் செப்பேடுகளில், "அகத்தியரால் பட்டாபிடேகம் செய்யப்படும் பாண்டிய வம்சத்தில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அவதரித்தான்" என்று காணப்படுதலால், பாண்டிய அரசர்களுக்கு 'அகத்தியர்' என்னும் பட்டம் வகித்த புரோகிதர் குருவாக இருந்தார் என்று தெரிகிறது.

அரசர்களுக்கு முடிசூட்டும் உரிமை பண்டைக்காலத்தில் பரம்பரைச் சைவவேளாளர் உடையதாகும். தசரத ராமர் பட்டாபிடேகம் செய்துகொண்டபோது, "வெண்

ணெய்ச் சடையன் மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மவுலி" என்ற இதிகாசச் செய்தியாலும், மதுரைச் சோமசுந்தர பாண்டியருக்கு வேளாளரே முடிசூட்டியுள்ளார் என்று ஆலாஸ்ய புராணம் கூறுவதாலும், தஞ்சைமாநகரம் அரச இருக்கையாக இருந்த பொழுது, தஞ்சை அரசர்களுக்கு வேளாளகுல திலகராகிய அணைக்குடி சாமிநாத பிள்ளை மரபுளோர் முடிசூட்டி வந்திருக்கிறார்கள் என்று தஞ்சைச் சரித்திரம் கூறுகின்றமையாலும், தொண்டை மண்டல வேளாளர் சேரர் - சோழர் - பாண்டியர் எல்லோருக்குமே முடிசூட்டி வந்துள்ளார்கள் என்று கம்பர 'திருக்கை வழக்கம்' என்னும் நூலில் கூறுகிறபடியாலும் அறியலாம்.

வேளாளர்கள் தொழில்பற்றி நான்கு பிரிவார்களாகப் பகுக்கப்பட்டிருந்தார்கள் என்று தொல்காப்பியமும் அதற்கு முந்திய இலக்கணங்களும் கூறுகின்றன. அந் நான்கு பிரிவுகளாவன.—அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனபனவே. ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முந்தியே இந்த நான்கு பிரிவுகள் வேளாளருக்குள் உள்ளன என்றால், அவைகள் ஆரிய நான்கு சாதிப் பிரிவுகளான பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற பெயர்களின் மொழிபெயர்ப்பு அல்ல என்பது தெளிவாம்.

வேளாளருக்குள் அந்தணர் என்னும் பிரிவார் கிரியா பீட மடாதிபதிகளாகவும், ஆசாரியர், குருக்கள், சிவாச்சாரியர், ஐயர், தேசிகர் என்ற பெயர்களுடன் கோவில் பூசை செய்பவர்களாகவும், தமிழர் இல்லங்களில் சடங்குகளை விதிப்படி நடத்துபவர்களாகவும், ஞானபீட மடாதிபதிகளாகவும், தம்பிரான்களாகவும், இருந்து சரியை, கிரியை, யோக, ஞானமார்க்கங்களை உலகருக்கு உப

தேசித்து, வந்தார்கள். இன்றும் அத்தொழில் அவர்கள் புரிந்து வருவது கண்கூடு.

சரியை - கிரியை மார்க்கங்களை கிரியாபீடத்தாரும், யோக - ஞான - மார்க்கங்களை ஞானபீடத்தாரும் போதித்து வந்தார்கள்; வருகிறார்கள்.

வேளாளரிற் பலர் உலகந்தோன்றின நாள் முதல் முடிமன்னர்களாகவும் குறுநில மன்னர்களாகவும் கி. பி. 17-ம் நூற்றாண்டு வரை இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அரசர் என்னும் பிரிவைச சார்ந்தவர்கள். வாணிபம் செய்யும் வேளாளா வணிகர் (செட்டியார்) என்றும், உழுதுண்டும் உழுவித்துண்டும் வாழ்வோர் **வேளாளர்** என்றும் பிரிக்கப்பட்டு உள்ளார்கள்.

தமிழ்நாட்டில் தொழில்பற்றிப் பெயர்கள் அமைந்துள்ளனவேயன்றி, பிறப்புப்பற்றிப் பெயர்கள் அமையவில்லை.

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள்)

என்னும் பொய்யாமொழியை நோக்குக

அந்தணர் வேறு—பிராமணர் வேறு. ஆனால், தற்காலம் பிராமணர் என்று சொல்லிக்கொள்ளும் ஆரியர்கள் எல்லாம் தாங்கள்தான் அநதணர் என்று சொல்லவும் எழுதவும் முன் வந்துள்ளார்கள்.

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள்)

என்று தமிழ் வேதத்தில் கூறியபடி பிராமணர் அந்தணர் ஆகார்.

**"அந்தணர்"** என்ற மாத வெளியீட்டுப் பத்திரிகை இப்போது சில நாட்களாகத் தாம்பரத்திலிருந்து வெளி

வந்துகொண்டு இருக்கிறது. அது அகில இந்திய பிராமண சபை வெளியீடாக உள்ளது. அதில் "அந்தணர் என்போர் அறவோர்" என்ற அடியில் உள்ள 'அறவோர்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'அறிவோர்' என்றசொல் பதிப்பிக்கப்பட்டு இருக்கிறது. பிராமணர் கைப்பட்ட தமிழ் நூற்கள் எல்லாம் இவ்வாறு பாடங்கள் மாற்றப்பட்டவைகளாகவே இருக்கிறதைக் காண்கிறோம். புறநானூற்றில் "குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்" என்பதைப் "பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்" என்று மாற்றி அச்சிட்டிருப்பதைக் காணலாம். நிற்க,

இதுகாறும் கூறியவாற்றால், தமிழருக்கும் அரசியலில் புரோகிதராக இருக்க உரிமையுண்டு என்றும, அப்படி ஆதிகாலந்தொட்டே இருநது வருகிறார்கள் என்றும், ஆரியப பிராமணரைப் புரோகிதராக அமைத்துக்கொண்டது ஏதோ சில காரணங்களால் நடுவில் வந்த வழககமென்றும் விளக்கினும்.

சின்னமனூர்ச் செப்பேட்டில், "தென்வரை மிசைக் குறுமுனிவனது தீந்தமிழ செவி கழுவியும்" என வருதலானும்;

"அந்தணர்க்காகி அகத்தியன் தானுரை செய்த மும்மைச் செந்தமிழ்க் காவலன் தென்னம் பொருப்பன்"

எனக் களவியற் காரிகையில் வருதலானும் ;

"பண்டு அகத்தியன் வாய் உரைதரு தீந்தமிழ் கேட்டோன் உசிதன்"

எனப் பாண்டியனைக் குறிப்பிடுதலானும், பாண்டியர்களுக்குப் புரோகிதராகவும், தமிழ் ஆசிரியராகவும், எண்பேர் ஆயம்—ஐம்பெருங்குழு முதலியவைகளில் உறுப்பினராகவும் அகத்தியர் ஒருவர் இருந்து வந்திருக்கிறார் என்று தெரிகிறது. அவ்வாறு இருந்து வந்தவர்கள் எல்லாம்

பொதியமலைத் தமிழ்ச்சங்கத்தினின்றும் படித்து வந்தவர்களேயாவர்.

பொதியமலையினின்றும் புரோகிதராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அகத்தியர் அரசியல் அலுவல்களையும், அரண்மனை அலுவல்களையும் மேற்பார்த்துக்கொண்டு, அரசனுக்கு அவ்வப்போது நல்லுரை கூறியும் வந்துள்ளார்கள். இவ் வைந்தாம் புரோகித அகத்தியரும் அவ்வாறு சுந்தர பாண்டியன் காலத்தில் இருந்தவரேயாகும்.

## ௩௨. சித்த அகத்தியர் (தமிழர்)

(காலம்—10-ம் நூற்றாண்டு கி. பி.)

இவ்வகத்தியருக்குத் 'தென் முனி' (தக்கணமூர்த்தி) என்னும் மறுபெயர் உண்டு என்று இவர் பாடிய "தக்கணமூர்த்தி குருமுகம் 100" என்ற நூலால் வெளியாகிறது.

இவர் பதினெண் சித்தர்களில் ஒருவர். மதராசில் உள்ள "கீழ்நாட்டுக் கையெழுத்துப்பிரதி நூலகம்" தயாரித்துள்ள பட்டியலைப் பார்த்தால் இவ்வகத்தியர் ஏறக்குறைய 96 நூல்கள் செய்துள்ளார் என்று ஏற்படுகிறது. (Vide Agastya in the Tamil Land p. 38.) இவர் பாடிய நூல்களிலிருந்து சில உதாரணத்திற்காகக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

"பாரப்பா வாதத்தில் லக்கம் காப்பு
பாடினேன் வைத்தியத்தில் இரண்டு லக்கம்"
சேதியொன்று சொல்லுகிறேன் தெளிவாய்க்கேளு
செகந்தனிலே சாமளா தேவிதன்னை (ஊழிக்காற்று)
வெளியாகச் சூத்திரத்தை வெளிவிடாதே
வேதாந்தப் புத்தியினால் நூலைக்காரு (கலைஞானம்)
சுழியான அகரமே உகர மாச்சு
சூழ்ந்த உயிர் எழுத்தெல்லாம் இதனாலாச்சு
க-ர-ம் என்ற மூன்றெழுத்தால் மெய்களெல்லாம்
ஆச்சதென்று அறிவித்தேன் அறிந்துகொள்ளே (ஞானம்)

இவ்வகத்தியர் சிறந்த மருத்துவர் ; சிறந்த ஞானி ; சித்துக்கள் எல்லாம் ஆடவல்லவர். இவர் செய்த நூல்கள் எல்லாம் தமிழே.

திரட்டைத் திரட்டிய

## ௩௩. தேவார அகத்தியர் (தமிழர்)

(காலம்—கி. பி. 11-ம் நூற்றாண்டு)

நால்வர் காலத்துக்குப்பின் சிதம்பரத்தில் வாழ்ந்து வந்த கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கிய சிவாலய முனிவர் என்பார் தேவார அடங்கன்முறை பாராயணம் நாள்தோறும் செய்துவந்தார். சோழ அரசன் ஆதித்தன் II காலம் முதல் இராசேந்திரன் காலம்வரை திரட்டிய தேவாரப் பதிகங்கள் 796 ஆகும். அவ்வளவு பதிகங்களையும் ஒருநாளில் படித்து முடிப்பதென்றால் முடியாத காரியமாய் இருந்தது. ஆனால், சிவாலய முனிவருக்கு ஒரு நாளில் எல்லாப் பதிகங்களையும் படிக்க வேண்டுமென்று அவா. அதனால், சிவபெருமானை நோக்கித் தவம் கிடந்தார். ஒருநாள் அவர், "நீ பொதியமலை அகத்தியரிடம் சென்றால் உன் கருத்து முற்றுப்பெறும்" என்ற அசரீரி வாக்கைக் கேட்டார். உடனே அவர் மகிழ்ந்து எழுந்து, தன்னுடைய தவம் பலித்ததை எண்ணி உவகையொடு தில்லையில் நடராசப்பெருமானை வணங்கி, வாழ்த்திப் பின் புறப்பட்டுப் பொதியமலையை நோக்கி நடக்கலுற்றார். பொதியமலைப பாவநாசத்தில் அப்போது அகத்தியாசிரமத்தில் இருந்த அகத்திய முனிவரிடம் சென்று, நடந்ததைக் கூற, அவர் இவருடைய ஆர்வத்துக்கு மெச்சித் தம்முடைய ஆசிரமத்தில் இருக்கும்படி சொல்லி, 796 தேவாரப பதிகங்களில் 25 பதிகங்களைப் பொறுக்கி எடுத்து, இவைகளை ஓதினால் தேவாரம் முழுதும் ஓதின பலன் கிடைக்கும் என்று கூறித் திரட்டிக் கொடுத்தார்.

அன்றுமுதல் சிவாலய முனிவர் அப்பதிகங்களைப் பாராயணம் செய்து வந்தார். அவர் சின்னாள் அங்கிருந்து, பின் தில்லை சேர்ந்து, சிவபெருமானை வணங்கி இருந்தார் என்று அறிகிறோம். இதனை,

"தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேர்அரு ளாகும்
......... .................... ...... . ...
... ........ ...........................
தீதிலா அகத்தியத் திரட்டினை உலகில்
ஓதினர் அடைகலும ஓதின ராவரே"

என்ற திருப்பதிகக் கருத்துரை நிலைமண்டில ஆசிரியப் பாவால் அறியலாம். இவ் வகத்தியரைப்பற்றித் தெரிந்தது இவ்வளவேயாகும்.

இது சம்பந்தமான காலக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | கி. பி. | | கி. பி. |
|---|---|---|---|
| அப்பர் சுவாமிகள் | 567 | — | 648 |
| சம்பந்த சுவாமிகள் | 634 | — | 650 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | 694 | — | 712 |
| மாணிக்கவாசக சுவாமிகள் | 250 | — | 282 |
| சோழன் ஆதித்தன் II | 966 | — | 970 |
| கண்டராதித்தர் மகன் உத்தமச்சோழன் | 970 | — | 984 |
| இராசராச சோழன் I | 984 | — | 1013 |
| இராசேந்திர சோழன் | 1013 | — | 1042 |
| சேக்கிழார் | 992 | — | 1042 |
| தேவாரத் திருமுறைகள் தில்லையில், நம்பியாண்டார் நம்பிகளால் கண்டு எடுக்கப்பட்டது | 969 A. D. | | |
| சிவாலய முனிவர் காலம் | கி. பி. 11-ம் நூற்றாண்டு. | | |
| நம்பியாண்டார் நம்பிகள் | கி. பி. 956 | — | 1012 |

“அகத்தியர் பக்தவிலாசம்” என்ற

## ௩௪. நூல் எழுதிய அகத்தியர் (ஆரியர்)

(காலம்—கி. பி. 13-ம நூற்றாண்டு)

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் காலத்துக்குப் பின் இருந்தவர் இந்த அகத்தியர். இவர் சோழநாட்டைச் சேர்ந்த பிராமணர். இன்ன ஊரார என்று சொல்லுவதற்கு இதுவரை ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. இவர் வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லுநர். ஆனால், வடமொழியில் மிகுந்த பற்றுடையவர்.

பெரிய புராணத்தின் மகிமையை அறிந்து, தம்முடைய தாய்மொழியாகிய சமஸ்கிருதத்தில் அதற்கு ஈடாகிய ஒரு நூல் இல்லையே என்று கவன்று, அதனை மொழிபெயர்த்துவிடுவது என்று தீர்மானித்து, அப்படியே மொழிபெயர்த்தார். ஆனால், அவர் மொழிபெயர்த்ததாக யாண்டும் நூலுள் கூறவே இல்லை. இதனை ஒரு காரணமாகக்கொண்டு, வடமொழிப் பற்றுடைய தமிழ்ப்புலவர்கள் அகத்திய பக்த விலாசமே பெரிய புராணத்துக்கு முதனூல் என்று கூற முன்வந்துள்ளனர்.

இதே மாதிரி ‘உபமன்னியு பக்த விலாசம்’ என்ற நூல் ஒன்று உளது. அந்த நூலும் அகத்திய பக்த விலாசத்துக்குப்பின் மொழிபெயர்க்கப்பட்டதாகும். உபமன்னியு பக்த விலாசம் எழுதினவரும் சோழநாட்டுப் பிராமணரே. ஒருசமயம் அவர் பெயர் உபமன்னியு என்று இருந்திருக்கலாம். இவரும் தம் நூலுள் எங்கேயும் மொழிபெயர்த்ததாகக் கூறவில்லை.

குற்றாலத்திலுள்ள

## ௩௫. திருமாலைச் சிவனாக்கிய அகத்தியர் (தமிழர்)

(காலம்—கி. பி. 13-ம் நூற்றாண்டு)

கடைச்சங்கத்து இறுதிக்காலத்தில் வாழ்ந்து வந்த திருமால் அடியார்களாகிய பேய் - பூதம் - பொய்கை என்னும் மூன்று ஆழ்வார்கள் காலங்களிலும, சைவ, வைணவப் பிணக்குகளின்றி கோவில்களில் வழிபாடுகள் நடந்து வந்தன. மேற்சொன்ன மூவர் பாடல்களும் இதற்குச் சான்று பகரும் முதல் மூன்று ஆழ்வாா பாடல்களிலும் சைவநிந்தனை கிடையாது அவர்கள் உளளது உள்ள படியே பாடிச்சென்றார்கள். இம்முறை நம்மாழ்வார் காலம் வரை நடந்து வந்தது. பின் வந்த ஆழ்வார்கள் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை அதுவும் வைணவ ஆசாரியராகிய பெரும்பூதூர் இராமாநுசருக்குப்பின் சைவ வைணவப் பிணக்குகளும், வாய்ச்சண்டை கைச் சண்டைகளும் வலுவடைந்தன. இராமாநுசருடைய காலம் கி. பி. 1017 முதல் கி பி 1137 வரை ஆகும்.

சைவர்களுக்குத் திருமாலிடத்தில் எபபோதும் அன்புண்டு. சைவர்களுடைய சிவ்பூசையில் திருமாலுக்கும் இடமுண்டு. ஆனால், வைணவர்கள் சைவர்களிடத்தில் எப்போதும் வெறுப்பே காட்டிவந்துள்ளார்கள் சைவர்களைக் கண்டால் சில வைணவர்கள் கண்களை மூடிக்கொள்வார்கள். சிவன் கோவிலிலிருந்து சுவாமி புறப்படுமேயானால் வீதிகளில் உள்ள வைணவர்கள் தங்கள் வீட்டுக் கதவுகளைத் தாழ் இட்டுவிடுவார்கள்.

“சிவ” என்ற சொல்லையே காதால் கேட்கமாட்டார்கள். ‘சி’ சம்பந்தப்பட்ட சொல் எதுவானாலும் கேட்க மனம் வெதும்புவார்கள். அதனால் இருகைகளாலும் தங்கள் காதுகளைப் பொத்திக்கொள்ளுவார்கள். அதனாலேயே

'அரிசி' என்ற சொல்லுக்கு அவர்கள் 'அமுதுபடி' என்று சொல்லுவார்கள்.

இத்தகைய கண்டுமுட்டுக் கேட்டுமுட்டுக்களையெல்லாம் சைனர்களிடம் இருந்து வைணவர்கள் கற்றுக்கொண்டார்கள். இந்த மாதிரி இருந்த காலத்தேதான் கி.பி. 13-ம் நூற்றாண்டில் பொதியமலை அகத்தியர் பரம்பரையில் வந்த குற்றாலக் குறுமுனி ஒருவர், குற்றாலத்திலுள்ள பெருமாள் கோவிலுக்குத் தரிசனத்துக்காகச் சென்றார். அங்குள்ள வைணவர்கள் இருநூறு வீட்டுக்காரரும், சிவவேடப் பொலிவுடனே வந்த அகத்தியரைக் கண்டவுடன் தங்கள் இல்லக் கதவுகளை இழுத்துச் சாத்திவிட்டு, இவரிடம் வந்து, வைணவ வீதியிலேயே சிவனடியார் நடக்கக் கூடாதென்றும், சிவனடியார் திருமாலைத் தரிசிக்கச் சம்மதிக்கமாட்டோம் என்றும் கூறித் தடுத்துவிட்டார்கள். அகத்தியர் வேறுவழி இல்லாமல் திரும்பிவிட்டார். பிறகு வைணவர்கள் அவ் வீதியைச் துப்புரவு செய்துவிட்டு வீற்றிருந்தார்கள்.

குற்றால வைணவர்களுடைய குறுகிய எண்ணத்தைப் பார்த்தார் அகத்தியர். அவர்களைத் தெருட்ட வேண்டும் என்று கருதி, குற்றால அருவியின் மேல்பாகத்தில் இருந்த தம் ஆசிரமத்துக்குச் சென்று, யாரும் கண்டு பிடிக்க முடியாதபடி வைணவ வேடம் தாங்கி, மறுபடியும் குற்றால நகரிலுள்ள திருமால் கோவிலுக்குச் சென்றார். இவரைப் பார்த்த உடனே அவ்வைணவர்கள் எல்லாம் இவரைப் பரமபாகவதர் என்று நினைத்து, தெண்டனிட்டு அடிபணிந்து, ஆலயத்துக்கு இட்டுக் கொண்டு போனார்கள். சுவாமிக்குத் திருவாராதனை நடந்தது. திருமால் உருவமாக நின்ற மூர்த்தியைச் சிவ பெருமானைகப் பாவித்து வணங்கி ஏனையோருக்கும் அவ்

விதமே காட்சி கொடுக்கும்படியாகவும், அன்று முதல் என்றுமே அப்படி இருக்கவேண்டுமென்றும், உருகி, நினைந்து பணிந்து நின்றார். அவ்வாறே அப்பெருமான் காட்சி தந்தருளினார். இதனை :—

" முறுகுவலம் புரிக்கரத்து மான்குறுகப்
பெரிய துழாய் முடியின்மீது
சிறியமதிக் கலைகுறுக, திலகநுதல்
விழிகுறுகச் செழும்பூண் மார்பில்
நிறையரவப் பணிகுறுக, நிகிலவுலகமும்
நிறைந்து நீண்ட மேனி
குறுகு, குறுகு எனப்பரவித் திருவடிக்கீழ்
குறுமுனிவன் குறுகுங் காலை"

" தவம்பெருக, அறம்பெருகப் பொருள்பெருகத்
தெருள்பெருகச் சைவம் ஓங்கிச
சுவம்பெருக, மனுநீதித் துறைபெருக
நிறைபெருகச் சுருதி வாய்மை
நவம்பெருகச சரியாதி சதுட்டயங்கள்
நனிபெருக, ஞாலம் எல்லாம்
சிவம்பெருகக் குறுகி அருள்பெருக்கினன்
குற்றாலத் தேவ தேவன்."

(குற்றாலத் தலபுராணம்)

என்ற பாக்களால் அறியலாம்.

இவ்வகத்தியருடைய தெய்வப் பெற்றியும், உண்மையன்பும் இதனால் அறியலாம்.

" நினைப்பவர் மனமே கோவிலாக் கொள்பவன்"

" வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"

என்ற திருமுறை வாக்குகளையும்,

" எண்ணியார் எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற திருக்குறளையும், நம்புகிறவர்களுக்கு இஃது ஓர் அதிசயமாகத் தோன்றாது.

அருணகிரியார், கி. பி. 15-ம் நூற்றுண்டில் பிரபுடதேவ அரசருக்காக, முருகப்பெருமானைத் திருவண்ணுமலையில் ஒரு கம்பத்தடியில் வள்ளி தெய்வானையுடன் மயில்மீது ஆரோகணித்து, காட்சி தநதருள வேண்டிக் கொள்ள, அப்படியே கொடுத்ததை நினைத்துப் பார்த்தால், கி. பி. 13-ம் நூற்றுண்டில் அகத்தியருக்கு ஏன் சிவபெருமான் அவ்வாறு காட்சிதந்து இருக்கக்கூடாது. ஆதலின் அன்பர்கள் இதில் யாதும் ஐபுறவுகொள்ள நியாயம் சிறிதும் இல்லை.

பொதியமலைக்குக் குற்றுலம் என்ற பெயர் உண்டு. அம்மலையில் எஞ்ஞான்றும் அருவிநீர் வீழ்ந்துகொண்டிருப்பதால் குறு × ஆலம் (=குறுகிய நீர் வீழ்ச்சி)= குற்றுலம் என்று ஆயிற்று.

ஆனல், தஞ்சாவூர் ஜில்லாவில் குற்றுலம் இருக்கிறதே, அதற்கு என்ன பொருள் என்றல், குறு × ஆலம (=சின்ன ஆலமரம்)=குற்றுலம் என்று ஆயிற்று. இத்தலத்தில் கோவிலின் முன்னல் சிறு ஆலமரம் தலவிருட்சமாக உள்ளதால் அப்பெயர் பெற்றது என்று காண்க.

குற்றுலத்திலுள்ள முனிகளுக்கே குற்றுல முனி அல்லது குறுமுனி என்று பெயர் ஏற்படுவது சகசம்.

## ௩௬. அகத்திய பட்டர் (ஆரியா)

(காலம் — 18-ம் நூற்றுண்டு கி. பி.)

கி. பி. 18-ம் நூற்றுண்டில் தமிழ்நாட்டில் **அகத்திய பட்டர்** என்ற பெயரையுடைய புலவர் ஒருவர் இருந்தார். இவர் தமிழ்நாட்டுப் பிராமணர். இவர் வடமொழி தென்மொழிகளில் பயின்று, சிறந்த புலமை ஏற்பட்டபின், வியாச பாரதத்தை நன்கு கற்று, அது விரிவாய் இருக்கிற

படியால், அதனைச் சுருக்கிப் 'பால பாரதம்' என்று வடமொழியிலேயே சிறு காவியம் ஒன்று இயற்றினர்.

வில்லிபுத்தூரார் போன்ற தமிழ்மொழிக் கவிஞர்களும் பிறரும் இப்பால பாரதத்தையே ஆதாரமாகக்கொண்டு பாரத நூலைத் தமிழில் பாடியுள்ளார்கள்.

இந்த வகையில் இவர் தமிழ் உலகுக்கு உபகாரம் செய்தவராவர்.

## ௩௭. பள்ள அகத்தியர் (தமிழர்)
(காலம் கி. பி. 19-ம் நூற்றாண்டு)

திருவாளர். கா. நமச்சிவாய முதலியார் தம்முடைய "அகத்தியர் ஆராய்ச்சி" என்னும் நூலில் பக்கம் 36-ல் கூறுவதாவது:—

"சமீப காலத்தில் அகத்தியக் குடும்பன் என்னும் பள்ளன் ஒருவன் தமிழ்மொழியை நன்றாய்க் கற்று, சித்தர்கள் செய்த வைத்தியச் சுவடிகளையும் நன்றாய்க் கற்று, தன்னுடைய அநுபோகத்தில் வந்த வைத்திய முறைகளையும் கூட்டி, பல பாடல்களால் 'வைத்திய நூல்' ஒன்று செய்துள்ளான்" என்பதே. அப்பாடல்களில் "அகத்தியன் சொன்னேன் நானே" என்று முடித்துள்ளதை நோக்கினல் வேறு அகத்தியருடைய பாடல்களை விரைவில் வேறுபடுத்திக் கண்டுகொள்ளலாம்.

பள்ளன் என்னும் வகுப்பார் தமிழ்நாட்டைச் சேர்ந்த பதினெண்குடிகளில் சேர்ந்தவர்கள். "பள்ளுப்பறை பதினெண் வகுப்பார்" என்ற பழமொழியும் இதனை வலியுறுத்தும். தமிழ்நாட்டில் ஆரிய நான்கு சாதிப் பாகுபாடுகள் கிடையா. ஆனல், ஆரியர்கள் தமிழ்நாட்டில் குடியேறினபின் ஆரியப் பிரிவுகள் தமிழ்நாட்டில் வளரத் தொடங்கின.

---

அகத்தியர் வரலாறு எழுத

## ஆதரவாக இருந்த நூல்கள்


1. அகத்தியர் ஆராய்ச்சி (கா. நமசிவாய முதலியார்)
2. அகத்தியர் (ஜெகவீர பாண்டியனார்)
3. அகத்திய ஜாதகம் (பவுத்த நூல்)
4. அகத்தியர் தேவாரத்திரட்டு
5. அகத்தியர் பக்த விலாசம்
6. அகத்தியர் (N. S. கந்தய்யாபிள்ளை)
7. அநுமான் கடல் கடந்தது (The Flight of Hanuman by C. N. Mehta)
8. அப்பர் தேவாரம்
9. அரிவம்சம் (வியாசர்)
10. இந்துக்கள் குடியேறிய கம்போடியா (By Phinindra-Nath)
11. இந்தியாவின் இதிகாசம் (R. G. Bandarkar)
12. இரண்டாம் நக்கீரர் தனிப்பாடல்கள்
13. இராமாயணம் (வடமொழி—வான்மீகி)
14. இராமாயணம் (தென்மொழி—கம்பன்)
15. இராசராசசோழன் உலா (ஒட்டக்கூத்தர்)
16. இருக்குவேதம் (வடமொழி)
17. இலங்கை இராவணேச்சுரன் (M. S. P.)
18. உபமன்னியு பக்த விலாசம்
19. ஊழிக்காற்று (சித்த அகத்தியர்)
20. ஐயூன்த்சங் சரித்திரம் Vol. III
21. ஔவையார் பாடல்கள்
22. கந்தபுராணம் (கச்சியப்பசிவாசாரியார்)
23. கலைஞானம் (சித்த அகத்தியர்)

24. களவியற் காரிகை
25. காசி காண்டம் (அதிவீரராம பாண்டியன்)
26. குலோத்துங்கசோழன் உலா (ஒட்டக்கூத்தர்)
27. குற்றாலத் தலபுராணம்
28. கேரளச் சரித்திரம் (English Edition)
29. சாமவேதம் (வடமொழி)
30. சிலப்பதிகாரம் (இளங்கோவடிகள்)
31. சிறுபாணாற்றுப்படை
32. சிற்றகத்தியம்
33. சின்னமனூர்ச் செப்பேடு வெளியீடு
34. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்
35. செங்கோன் தரைச் செலவு
36. செந்தமிழ் (Vol. 26)
37. செந்தமிழ்ச்செல்வி (Vol. 15)
38. சோணசைலமாலை
39. ஞானம் (சித்த அகத்தியர்)
40. தக்கணாமூர்த்தி குருமுகம் (சித்த அகத்தியர்)
41. தஞ்சைவாணன் கோவை
42. தமிழ்ச்சங்கங்களின் வரலாறு (துடிசைகிழார்)
43. தமிழ்நாட்டில் அகத்தியர் (English by K. N. சிவராஜ பிள்ளை)
44. தமிழ்மொழி வரலாறு (R. இராகவய்யங்கார்)
45. தமிழ்விடுதூது (அமிர்தம் பிள்ளை)
46. தாரா சூக்தம் (பவுத்த நூல்)
47. திருக்கயிலாய ஞான உலா (சேரமான் பெருமாள்) I
48. திருக்குடந்தைப் புராணம்
49. திருக்குறள் (நெடுமாறன் வள்ளுவனார்)
50. திருநெல்வேலிப்புராணம்
51. திருப்புகழ் (அருணகிரியார்)

52. திருமந்திரம் (திருமூலநாயனார்)
53. திருமயிலைத்தலபுராணம்
54. திருமறைக்காட்டுப்புராணம்
55. திருவிளையாடற்புராணம்
56. திருவெங்கை உலா
57. திருவேங்கடத்தலபுராணம
58. துடிசைப்புராணம்
59. தொல்காப்பியம் (by ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்)
60. நன்னூல் (பவணநந்தி)
61. நிகண்டு
62. பம்பாய் கெஜட்டியர் Vol. I, Para V
63. பரிபாடல்
64. பர்காயன்ஸ் வடமொழிச் சம்பாநாட்டு கல்வெட்டுச் சாசனங்கள் (LXV. 1893)
65. பன்னிரு படலம்
66. பன்னிருபாட்டியல்
67. பால பாரதம் (அகத்திய பட்டர்)
68. பாணினீயம் (வடமொழி)
69. பிங்கலந்தை
70. பிரயோக விவேகம்
71. புறத்திரட்டு
72. புறநானூறு
73. புறப்பொருள் வெண்பாமாலை
74. பெரியபுராணம் (சேக்கிழார்)
75. பேரகத்தியம்
76. மச்சபுராணம்
77. மணிமேகலை (சீத்தலைச் சாத்தனார்)
78. மதுரைக்காஞ்சி

79. மாணிக்கவாசகர் காலம் (மறைமலை அடிகள்)
80. மிஸ்டிக் சொசைடிப் பத்திரிகை Vol. XVIII
81. யசுர்வேதம் (வடமொழி)
82. விக்கிரமச்சோழன் உலா (ஒட்டக்கூத்தர்)
83. வில்லிபாரதம்
84. வீரசோழியம்
85. வெண்பாமாலை
66. வேளிர் வரலாறு (M. இராகவய்யங்கார்)
87. வேளிர் வரலாற்று மறுப்பு (N. M. வேங்கடசாமி நாட்டார்)
88. வேள்விக்குடிச் செப்பேடு வெளியீடு

# அகத்தியர் அட்டவணை

| எண | பெயர் | இன்னார் என்பது | காலம் |
|---|---|---|---|
| 1 | முப்புர மிருதர் காலத்துப் பொதிய மலை அகத்தியர் என்கிற குறுமுனி | ஒளியர் | B. C. 16000 |
| 2 | பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூா அகததியா | தமிழா | B. C. 14550 |
| 3 | சூரபன்மன் காலதது வாதாபி அகததியா | ஒளியா | B. C. 14058 |
| 4 | ஆரிய இருக்கு வேத காலதது உலோபா முதிரை அகத்தியர் I | ஆரியர் | B. C. 8000 |
| 5 | ,, ,, மைத்திரா வருணை அகததியர் | ,, | ,, |
| 6 | ,, ,, மாணிய அகத்தியர் | , | ,, |
| 7 | ,, ,, பிரமன் ஊாவசி புத்திரா கும்ப அகத்தியா | , | , |
| 8 | ,, ,, புலகதியர் ஆவிர்ப் பூ புத்திரர் அகததியா | ,, | , |
| 9 | ,, ,, கந்தருவா ஊர்வசி புததிரா அகத்தியர் | , | ,, |
| 10 | ஆரியா வர்த்ததது எழு இருடிகளில் ஒருவராகிய அகத்தியா | ,, | B. C. 7500 |
| 11 | முதுகுடுமிப் பெருவழுதி காலத்து புரோகித அகத்தியா I | ,, | ,, |
| 12 | தொடித்தோள் செம்பியன் காலத்து அகத்தியா | தமிழர் | B. C. 6200 |
| 13 | குடகுமலை அகததியா எனகிற குடமுனி | , | B C. 6020 |
| 14 | விதாப்பநாட்டு உலோபா முத்திரை அகத்தியா II | ஆரியர் | B. C. 6010 |
| 15 | இராமாயண காலததுக் கோசல நாட்டு அகத்தியா | , | B. C. 6000 |
| 16 | ,, பஞ்சவடி அகததியர் | ,, | ,, |
| 17 | ,, மலையமலை அகத்தியர் | ஒளியா | ,, |
| 18 | ,, குஞ்சரகிரி அகததியர் I | ஆரியா | ,, |

| எண் | பெயர் | இன்னார் என்பது | காலம் |
|---|---|---|---|
| 19 | அனந்தகுண பாண்டியன் என்கிற மூன்றாம் நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்து புரோகித அகத்தியர் II | தமிழர் | B. C. 6000 |
| 20 | பாரதகாலத்து, குஞ்சரகிரி அகத்தியர் II | ஆரியர் | B. C 3110 |
| 21 | துவராபதி அகத்தியர் | ,, | B. C. 3100 |
| 22 | யசோமதி அகத்தியர் | ,, | B. C. 2000 |
| 23 | திருப்பரங்குன்றத்துத் தமிழ்ச் சஙக காலத்து புரோகித அகத்தியர் III | ,, | B. C. 1900 |
| 24 | காரைத்தீவு அகத்தியர் | பவுத்தர | B C. 400 |
| 25 | போதலகிரி அகத்தியா | ,, | B. C 274 |
| 26 | திலோத்தமை அகத்தியா | ,, | B C. 100 |
| 27 | பாவநாச (மலையமலை) அகததியர் I | தமிழர் | கி. பி. 2-ம் நூ. |
| 28 | ,, ,, அகத்தியர் II | ,, | கி பி 5-ம் நூ. |
| 29 | கூர்ச்சரநாட்டு (Guzarat) புரோகித அகத்தியர் IV | ஆரியர் | கி. பி. 6-ம் நூ. |
| 30 | குஞ்சரகிரி அகத்தியர் III | ,, | கி பி. 7-ம் நூ. |
| 31 | பாண்டியரின் புரோகித அகத்தியர் V | தமிழா | ,, |
| 32 | சித்த அகத்தியர் | ,, | கி.பி. 10-ம நூ |
| 33 | தேவாரத் திரட்டைத் திரட்டிய அகத்தியர் | ,, | கி.பி. 11-ம நூ |
| 34 | "அகத்தியர் பக்த விலாசம்" என்ற நூல் எழுதிய அகத்தியர் | ஆரியர் | கி.பி. 13-ம் நூ. |
| 35 | குற்றாலத்திலுள்ள திருமாலைச் சிவ பெருமானாக்கிய அகத்தியர் | தமிழர் | ,, |
| 36 | அகத்திய பட்டர் | ஆரியர் | கி.பி. 18-ம் நூ. |
| 37 | பள்ள அகத்தியர் | தமிழர் | கி.பி. 19-ம் நூ. |

## வரலாற்று நூல்கள்

**தமிழ்ச் சங்கங்களின் வரலாறு.** *துடிசைகிழார் சிதம்பரனார். தமிழ்ச் சங்கங்கள் பலவற்றின் விளக்கமான வரலாறுகள்* ரூ. 2 8

**மொகஞ்சதரோ:** *மா. இராசமாணிக்கம் பிள்ளை சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பை விளக்குவது* 2 8

**குமரிக்கண்டம்:** *கா. அப்பாதுரைப் பிள்ளை. கடல்கொண்ட தென்னாட்டின் வரலாறு கூறுவது* 1 4

**பல்லவர் வரலாறு** *மா. இராசமாணிக்கம் பிள்ளை. பல்லவர் வரலாற்றினைத் தெளிவுபடுத்துவது* 3 8

**தமிழகம்** *ந. சி. கந்தையாப் பிள்ளை. தமிழகத்தின் விளக்கமான வரலாறு.* 3 12

**தமிழ் இந்தியா:** *ந. சி. கந்தையாப் பிள்ளை தமிழ் நாகரீகத்தின் பழமையையும் உயர்வையுங் காட்டுவது* 3 8

**மறைந்தநகரம்.** *மா. இராசமாணிக்கம் பிள்ளை. மண்மூடுண்ட மொகஞ்சதரோவின் வரலாறு* 0 8

**நமது நாடு:** *ந. சி. கந்தையாப் பிள்ளை. நமது நாட்டின் வரலாறு* 0 12

**நமது மொழி:** *ந. சி. கந்தையாப் பிள்ளை நமது மொழியின் வரலாறு* 0 12

**சிவன்.** *ந. சி. கந்தையாப் பிள்ளை. தமிழர் சமயத்தின் விளக்கம்* 1 0

**தென்னிந்திய சாதி வரலாறு:** *வெ. ப. சு. அவர்கள். இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்.* 0 8

**கடலின்கண் முத்து** : இராமசசந்திரன் செட்டியார்
ஈழத்தின் வரலாற்றுக் குறிப்புக்கள் நிறைநதது ரூ. 3 8
**பாண்டியர் வரலாறு** : சதாசிவப் பண்டாரத்தார்.
சிறந்த ஆராய்ச்சிக் குறிபபுக்களுடன் கூடியது (அச்சில்)

## வாழ்க்கை வரலாறுகள்

| | | | |
|---|---|---|---|
| அப்பர் சுவாமிகள்—கா. சுப்பிரமணிய பிள்ளை | | 1 | 8 |
| மணிவாசகப் பெருமான் | ,, | 1 | 8 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் | ,, | 2 | 0 |
| திருஞான சம்பந்தர | ,, | 2 | 0 |
| குமரகுருபர அடிகள | ,, | 1 | 8 |
| சிவஞான முனிவர் | ,, | 1 | 4 |
| மெய்கண்டார் | ,, | 1 | 8 |
| ஆழ்வார்கள் வரலாறு I | கோவிந்தராச முதலியார் | 1 | 12 |
| ,, II | ,, | 1 | 12 |
| தமிழ்ப் புலவர் வரிசை I | இராமசாமிப புலவர் | 1 | 8 |
| ,, II | ,, | 1 | 12 |
| ,, III | ,, | 2 | 0 |